அமுதசுரபி



ஆகஸ்ட் 1994

ஆகஸ்ட் '94
பவ - ஆவணி

அமுதசுரபி

மலர்: 47
இதழ்: 4

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும்வாழியவே — பாரதியார்

அட்டையில் :

நடனக் கலை மூலம் மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தி ஒருமைப்பாட்டை வளர்த்ததற்காக, பரத நாட்டியக் கலைஞர் பத்மா சுப்பிரமணியத்துக்கு ஆசியக் கலாசார விருதை (ரூ. 10 லட்சம்) ஜப்பான் நாடு வழங்குகிறது.

உலகிலேயே இந்த விருதைப் பெறும் முதல் பெண் என்ற பெருமையை பத்மா சுப்பிரமணியம் பெறுகிறார்.

தற்போது 51 வயது ஆகும் பத்மா சுப்பிரமணியம் தனது 5ஆவது வயதிலேயே நடனம் பயின்றவர். 14 வயதிலேயே அவர் தன் தந்தை தொடங்கிய 'நிருத்யோதயா' நாட்டிய நிலையத்தில் நடனம் கற்றுத் தந்தார்.

1903ஆம் ஆண்டு 'மீனாட்சி கல்யாணம்' என்ற நாட்டிய நாடகத்தை முதன் முதலாக நடத்தினார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் பயின்று இசைத் துறையில் பட்டம் பெற்றார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டமும் பெற்றிருக்கிறார்.

தமிழக அரசிடம் இருந்து 1975ஆம் ஆண்டு கலைமாமணி விருது பெற்றுள்ள பத்மா சுப்பிரமணியம், 1981ஆம் ஆண்டு மத்திய அரசின் பத்மஸ்ரீ விருதையும், 1983ஆம் ஆண்டு சங்கீத நாடக அகடமி விருதையும், 1994ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி தேசிய ஒருமைப்பாட்டு விருதையும் பெற்றுள்ளார்.

இதுதவிர மேலும் பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள பத்மா சுப்பிரமணியத்துக்கு ஆசியக் கலாசார பரிசுக் கமிட்டி அளித்துள்ள கலை, கலாசார விருது அவர் புகழ் மகுடத்தில் பதித்த ஒரு வைரக் கல்.

★ பதிப்பாளர் : ஏ.வி.எஸ். ராஜா ★ கௌரவ இலக்கிய ஆலோசகர் : என்.வி. சுப்பிரமணியன் ஐ.ஆர்.டி.எஸ்., ★ ஆசிரியர் : கலைமாமணி விக்கிரமன் ★ இதழ் ஆப்செட் அமைப்பு : சிவகுமார் ★ தனி இதழ் விலை : ரூ. 6/- ★ ஆண்டு சந்தா : ரூ. 72/- ★ மேலட்டை வண்ணப்படம் : யோகா ★ அட்டையில் : பத்மா சுப்பிரமணியம்

கங்காபுரிக் காவலன்

14. தீர்த்த யாத்திரையா?
திடீர்ப் படையெடுப்பா?

இரண்டு நாள்களாக வீரமாதேவியின் மனம், பெரும் காற்றில் சிக்கிய தீபம் போல் நிலைகொள்ளாமல் தவித்தது. வடக்கே இராசேந்திர சோழ தேவரிடமிருந்து செய்தி ஏதும் வரவில்லை. கருவூர் சித்தர் சொற்படி அரிந்தவன்மாதேவியின் உடல்நலம் சீர் கெட்டிருக்கும் செய்தியைத் தெரிவிக்காது இருந்தாள். அவள் ஓலை எழுதாவிடில் என்ன – பழையாறையிலிருந்து செய்தி அரசரைச் சென்றடைந்திருக்காதா? அவ்வாறு மற்றவரால் அனுப்பப்பட்ட செய்தி கிடைத்து, நான் எழுதாது இருந்துவிட்டதற்காக சக்கரவர்த்திக்கு என்மீது வருத்தம் ஏற்பட்டிருந்தால், வேண்டுமென்றே நான் அரிந்தவன்மாதேவியின் உடல்நிலையைக் குறித்து எழுதாது மறைத்துவிட்டேன் என்று நினைத்துவிட்டால்...?

புதிய நகரம் மிக வேகமாக உருவாகி வருவதையும், வீடுகள் கட்டப்படுவதையும், மாளிகைகள் அமைவதற்காக கடைக்கால் தோண்டப்படுவதையும், பெரிய கோயிலைச் சுற்றி கற்பாறைகளால் மதிற் சுவர் கட்டும் பணி தொடங்கப்பட்டிருப்பதையும், பரந்து விரிந்திருக்கும் நீள அகலமுடைய ஏரி வெட்டப்பட்டு, அதனின்று அகழ்ந்து எடுக்கப்பட்ட மண் பள்ளமான பகுதியை நிரப்ப வண்டிகளில் சென்ற வண்ணமாக இருப்பதையும் பார்ப்பதற்குப் பல குறுநில மன்னர்கள் வந்தனர். சோழ நாட்டுப் பிரமுகர்கள் வந்தனர். புதிய நகரம், புதிய கோயில், பெரிய ஏரி, சாலைகள், வீதிகள் போன்ற வியக்கத்தக்க பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் காண வருபவர்கள் வீரமாதேவியையும் காணாமல் செல்வதில்லை.

இராசேந்திர சோழ தேவரின் அபிமானத்தைப் பெற்றவள், இளவரசியருள் மிக முக்கியம் வாய்ந்தவள் வீரமாதேவி என்பதை அனைவரும் அறிவார்கள். குறிப்பாக சோழ நாட்டு அதிகாரிகள், மலையமான், வேளிர் போன்ற குறுநில மன்னர்கள் அறிவார்கள்.

அன்று வீரமா தேவியைக் காண வந்தவருள் இருவர் மிக முக்கியமானவர்கள். அவர்கள் சோழ நாட்டின் மீதும் சோழர் குலத்தின் மீதும் மிகுந்த மரியாதையும் விசுவாசமும் கொண்டவர்கள்.

வீரமாதேவியின் சொற்படியே இராசேந்திர சோழதேவர் முடிவெடுக்கிறார் என்ற எண்ணம் அவர்களுக்குச் சற்று எரிச்சலை அளித்திருந்தது. குறிப்பாக தஞ்சைபுரியிலிருந்து தலைநகரை மாற்றுவதற்காகப் புதிய நகரத்தை உருவாக்கி அங்கே பெரும் கோயில் எழுப்பி தஞ்சைபுரியின் பெருமையைக் குறைக்கச் செய்யத் திட்டமிட்டதற்கு, வீரமாதேவி பெரும் காரணம் என்பதாக முடிவு செய்திருந்தவர்களுள், படைத்தலைவர்களுள் ஒருவரான இராசராச பிரும்ம மகாராசாவும் மலையமான் பராந்தகன் யாதவீமனும் முக்கியமானவர்கள்.

அவர்கள் இருவரும் புதிதாக வெட்டப்படும் ஏரிக்கரையில் சந்தித்துக் கொண்டனர். பெரும் நாட்டை அழித்து ஏரியாக மாற்றும் பணி அசுர வேகத்தில் நடைபெறுவதை குதிரை மீதிருந்தே கண்டு வியந்தார்கள். இருவரும் பெருமூச்சு விட்டவாறு மரநிழலில் ஓய்வாக நின்றனர்.

அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசிப் பல ஆண்டுகளாகி விட்டபடியால் சற்று நேரம் இருவரும் மௌனமாகப் பார்த்தவாறு முதலில் யார் பேசுவது என்று தயங்கி நின்றனர்.

“வீரநாராயணப் பேரேறிக்குப் பிறகு மற்றொரு சமுத்திரம் இந்த ஏரி” என்று பேச்சைத் தொடங்கினார் மிலாடுடையார்.

விக்கிரமன்

அவர் முன்னோர்கள் சோழர்களுடன் மணவினைத் தொடர்புடையவர்கள்.

"ஆமாம், ஆமாம் என் பாட்டனார் காலத்தில் வீரநாராயணபுர ஏரி வெட்டப்பட்டதாகச் சொல்வார்கள்" என்றார் இராசராச பிரம்மராயர்.

"என் தந்தை காலத்தில் வெட்டப்பட்டது வீரநாராயணபுர ஏரி. எங்கள் குடும்பத்தில் பெண் எடுத்த காலம் முதல் சோழநாட்டில் எந்தக் காரியமும் எனக்குத் தெரியாமல் நடந்தது கிடையாது. இப்போது சோழ சக்கரவர்த்திகள் அடியோடு மாறிவிட்டார்".

மலையமான் வம்சத்தவர் என்பதைப் புரிந்து கொண்ட பிரம்மராயர், மரியாதை தெரிவிப்பதற்காக மட்டுமல்லாமல், வியர்வையைத் துடைத்துக் கொள்வதற்காகவும் தன் தலைப்பாகையைக் கழற்றிக் கையில் வைத்துக்கொண்டார்.

"மிலாடுடையாரைச் சந்தித்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. நம் பெரிய சக்கரவர்த்தி மரணமடைந்தபோது எனக்குக் கடுமையான பணிகள் அளிக்கப்பட்டிருந்தபடியால், மிலாடுடைாரை நெருங்கிப் பேச முடியாது போயிற்று. உடல்நலமாயிருக்கிறீர்களா? திருக்கோவலூரிலிருந்து இப்போதுதான் வருகிறீர்களா? தஞ்சைபுரி போயிருந்தீர்களா? பழையாறைக்குச் சென்றிருந்தீர்களா?" என்று கேள்வி மேல் கேள்வி கேட்டு அவர் நலன் விசாரித்தார்.

"ஓ! இராசராச பிரம்ம மகாராசர்தானே? தங்கள் வீரப் பிரதாபங்களைக் கேட்டறிந்திருக்கிறேன். உங்கள் வீரமறிந்து படைத் தலைமை ஏற்கும் பொறுப்பை இராசேந்திர சோழ சக்கரவர்த்தி அளித்திருக்கும் செய்தியையும் நான் அறிவேன். தாங்கள் இங்கேயே இருப்பவர்கள். எனவே, இங்கு நடப்பவை எல்லாம் உங்களுக்குத் தெரியும். ஆனால், எனக்கு எந்தச் செய்தியும் எட்டுவதில்லையே.



இராசேந்திர சக்கரவர்த்தி தஞ்சையையும் மறந்து, பழையாறையும் பிடிக்காமல் இப்படி ஒரு வனப்பகுதியில் நகரத்தை நிர்மாணிக்கிறார் என்ற செய்தி எனக்குத் தெரியவில்லை. சோழ நாட்டினின்று நான் வெகு தொலைவில் சென்று விட்டேனோ என்ற எண்ணம் தோன்றுகிறது" என்று வருத்தத்துடன் கூறினார்.

இராசராச பிரம்மராயரும் தன் பங்கிற்கு மனதில் அடக்கி வைத்திருந்ததைக் கூறினார்.

"வடக்குத் திசைக்குச் சக்கரவர்த்தி செல்கிறார், கங்கை நீராட என்று செய்தி தெரிவிக்கப்பட்டது. தீர்த்த யாத்திரை என்றால் என்னை அரசர் அழைத்திருக்கலாம். அருண்மொழி என்ற இளம் வயதினனை அழைத்துச் சென்றிருக்கிறார். தீர்த்த யாத்திரையா? இல்லை இல்லை. மறைமுகமாக வேறு ஏதோ போர் நடத்தப்போகிறார். நான் என்ன குற்றம் செய்தேன்? யாரிடம் கேட்பேன்? சக்கரவர்த்தியின் திருக்குமாரர்கள் தங்களுக்கு ஏதும் தெரியாது எனக் கைவிரித்துவிட்டனர். மிலாடுடையாரே! என்னதான் இருந்தாலும் நான் படைத்தலைவருள் ஒருவர்தான். தாங்களோ பரம்பரைப் புகழ்பெற்ற மன்னர். சக்கரவர்த்திகளிடமும், சோழகுலத்துடனும் நெருங்கிய தொடர்புள்ளவர். எந்தக் கணத்திலும் தாங்கள் அரசரைச் சந்தித்து அந்தரங்க



மாக உரையாடக்கூடிய உரிமை உடையவர்" என்று தன் வேதனையைப் புலப்படுத்தினார்.

"ஆமாம், சக்கரவர்த்திகளுக்கு என்னிடம் மிகுந்த மரியாதை உண்டு. அவர் கலந்து கொள்ளும் போர்க்களங்களில் எல்லாம் நானும் உடன் செல்லத் தவறுவதில்லை. இந்த முறை அவர் ஏன் என்னை அழைக்காமல் சென்றுவிட்டார்? அதற்கு என்ன காரணம்? யார் காரணம்? அதை முதலில் கண்டறிய வேண்டும்" என்று கூறிய மிலாடுடையார், குதிரையைத் தட்டிவிட்டு, "இங்கு நிற்பதால் என்ன பயன்?" வாருங்கள் போவோம்... இதற்கெல்லாம் யார் காரணம் என்று கண்டுபிடித்து விட்டேன்" என்று கூறிப் புறப்பட்டார். இராசராச பிரம்மராயரும் அவரைப் பின் தொடர்ந்தார்.

யார் காரணம் என்று இவர் கண்டுபிடித்திருப்பார்? என்ற யோசனையில் அவர் மிலாடுடையாரைத் தொடர்ந்தார்.

பெரிய கோயில் நிர்மாணிக்கப்படும் இடத்திற்கு அருகே இன்னும் தன் பழைய நிலை மாறாதிருந்த மரங்கள் அடர்ந்திருந்த பகுதிக்குள் மிலாருடையார் செல்ல, இராசராச பிரமாதிராயரும் அவரைத் தொடர்ந்தார்.

பர்ணசாலை போல் ஓலைகளாலும், மூங்கில்களாலும் கட்டப்பட்ட குடிலருகே சென்று குதிரையினின்று இறங்கினர்.

அந்தக் குடிலின் வாயிலில் பலர் நின்று கொண்டிருந்தனர். சீனவணிகர், நானாதேசியார், தொழிலாளர்கள், அதிகாரிகள் என்று வீரமாதேவியைக் காண நின்று கொண்டிருந்தனர். ஒவ்வொருவராகக் குடிலுக்குள் செல்வதும், விரைவில் தாம் வந்த பணியை முடித்துத் திரும்பி வருவதுமாக இருந்தனர்.

குடிலின் வாயில் அருகே நின்றிருந்த காவலருள் ஒருவன் மிலாடுடையாரை அடையாளம் கண்டு விரைந்து அவர் அருகே வந்து வணங்கி, 'உள்ளே சென்று இளவரசியாரிடம் செய்தி சொல்லி வரும் வரையில், இதோ அந்த இருக்கையில் அமர்ந்திருங்கள்" என்று பணிவுடன் கூறி மரத்தடியில் இருந்த இருக்கையைச் சுட்டிக் காட்டினான். வெட்டப்பட்ட பெரும் மரத்தின் அடிப்பாகம், உட்கார வசதியாக ஆக்கப்பட்டிருந்தது.

"உம்... சோழ அரசிகள் பலரையும், இளவரசிகள் பலரையும் நான் கண்டிருக்கிறேன். மாளிகை அந்தப்புரத்தை விட்டே அவர்கள் வெளியே வரமாட்டார்கள். செம்பியன் மாதேவியாரையும், இளைய பிராட்டியாரையும் போல் மக்களோடு பழகும் ஆற்றல் கொண்டவளாக வீரமாதேவி விளங்குகிறாள். பெருங்காட்டை அழித்து பெரிய நகரத்தை உருவாக்கும் ஆற்றல் படைத்திருக்கும் வீரமாதேவியைக் காண பல்வேறு இனத்தவர்கள் காத்திருப்பதில் அதிசயமில்லை. அரசரையும் வழி நடத்திச் செல்லும் ஆற்றல் அவளிடமிருக்கிறது என்பதில் வியப்பில்லை. வட திசைக்கு அரசர் செல்லும்போது இன்னார் இன்னார்தான் செல்ல வேண்டும் என்று யோசனை சொல்லியிருப்பவள் இவள்தான்" என்று கூறிச் சற்று நிறுத்திய அவர், சற்றுக் கோபத்துடன், "என்னைத் தவிர்த்ததற்கு என்ன காரணம் இருக்க முடியும்? நேருக்கு நேர் சந்தித்து நான் ஒரே கேள்வி கேட்டு விட்டுப் போய்விடுகிறேன்" என்று கூறியவர், மறுகணம், "இந்தக் காவல்காரன் போய்ச் சொன்னவுடன், நான் வந்திருப்பது தெரிந்து என்னைச் சந்திக்க அவள் விரும்பாமல் இருக்கலாம்" என்றும் சொல்லிக் கொண்டார். "அப்படி அவள் என்னை அலட்சியப்படுத்தி அழைக்காமல் இருந்தால், நான் காவல் தடையை மீறி புயல் போல் உள்ளே புகுவேன்" என்றார்.

அவர் சொல்லி வாய்மூடும் முன்பாக அந்தக் குடிலுக்கு வெளியே பரபரப்பு ஏற்பட்டது. கூட்டமாக இருந்தவர்கள் திடீரென்று ஓர் ஓரமாக ஒதுங்கி நின்றார்கள். அங்கிருந்தவர்கள் சிரம் தாழ்த்தி வணங்கினார்கள்.

வீரமாதேவி, வெளியே வந்து சுற்றுமுற்றும் பார்த்து, மரத்தடியில் அமர்ந்திருக்கும் மிலாடுடையாரை நோக்கி நடந்தாள். அவளைத் தொடர்ந்து அதிகாரிச்சியும், பணிப்பெண்களும் வந்தனர்.

கரங்கூப்பிய வீரமாதேவி மிலாடுடையாரைப் பார்த்து "வரவேண்டும், வரவேண்டும். வந்து அதிக நேரமாகிறதா?

என்னைச் சந்திக்க உங்களுக்கு என்ன தடை? காவல்காரர் தங்களைத் தடுத்து விட்டார்களா? மிக முக்கியமானவர்களை உடனே சந்திக்க விரும்பி ஒவ்வொரு வரையும் அழைத்துப் பேசி அனுப்புவ தற்காக, நானிருக்கும் இடத்து வாயிலில் காவல் வீரனை நியமித்தோம். தங்களை அவன் நிறுத்திவிட்டானா? தடுத்துவிட்ட பிறகு வந்து சொல்கிறான் புத்தியில் லாதவன்" என்று காவல்காரனைக் கடிந்து கொண்ட வீரமாதேவி, கூப்பிய கரத்தைத் தாழ்த்தாமல், மிலாடுடையாரைப் பேச விடாமல், "வாருங்கள், வாருங்கள் குடி லுக்குள்ளே செல்வோம்" என்றழைத்தாள்.

இராசராச பிரமாதிராயரும் மிலாடுடை யாரும் திகைப்புடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். வீரமாதேவி வழி காட்டியவாறு முன் செல்ல, கம்பீரமாக மிலாடுடையாரும் இராசராச பிரமாதி ராயரும் தொடர்ந்தனர்.

திடீரென்று, "மலையமான் வாழ்க வாழ்க! உத்தம சோழமிலாடுடையார் பராந் தகன் யாதவவீமன் வாழ்க வாழ்க!" என்று வாழ்த்துக் குரலொலி எழுந்தது. குறுநில மன்னர்களை மரியாதையுடன் வரவேற்கும் முழக்கங்கள் எழுந்தன.

வீரமாதேவியை நேருக்கு நேர் சந்தித்த வுடனேயே அவர் உள்ளத்திலிருந்த கோபம் பறந்தது; ஆத்திரம் அகன்றது. வடதேச யாத்திரையைப் பற்றி வீரமாதேவி விவரித் ததும், நிர்மாணிக்கப்படும் பெரிய கோயில், வெட்டப்படும் பெரிய ஏரி, கட்டப்படும் நகர வீடுகள், அரண்மனைகள் இவற்றைப் பற்றி யெல்லாம் கருத்துக் கூறி, அரசர் வடநாட் டிற்குச் சென்ற காரணத்தை விளக்கவும் மிலாடுடையார் பாகாக உருகிவிட்டார்.

கோதாவரிக் கரையில் அரசியும், அரசரும் வீற்றிருப்பதையும், சில மாதங் களாக செய்தி ஏதும் வராததால் தான் அடைந்திருக்கும் கவலையையும், கோயில் குடமுழுக்குக்கு நாள் குறிப்பிட்டு விட்டதை யும், கங்கை நீரால் விமானச் சிகரங்களை திருமுழுக்காட்ட வேண்டிய அரசர் இலட்சி யத்தையும் , கருவறையில் ஆவுடையார் ஒரே பாறையில் செதுக்கப்பட்டிருப் பதையும். இலிங்கவடிவில் பெருவுடையார் உருவாவதையும் எடுத்துக் கூறி, "நான் தன்னந் தனியாள் என்ன செய்வதெனத் தெரியாமல் திகைக்கிறேன். கங்கைக் கரைக்கு அரசர் சென்றாரா? கங்கையில் நீராடினாரா? கங்கை நீரை இவ்வளவு தொலைவு எவ்வாறு கொண்டு வரப் போகிறார் என்ற செய்தியெல்லாம் அறி யாமல் கவலை நிறைந்தவளாக இருக் கிறேன். தங்களைப் போன்றவர்களின் வழிகாட்டுதலுக்கும், யோசனைக்கும் காத் திருக்கிறேன்" என்றாள்.

மிலாடுடையார் மிகவும் இலேசாக வானத்தில் பறப்பது போன்ற நிலையில் இருந்தார். இராசராச பிரம்மாதிராயர் விழிகளை மூடியவாறு சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

அப்போது வீரர்கள் இருவர் சற்றுத் தொலைவில் வணங்கி நின்றனர். பல காத தொலைவு பயணம் செய்த களைப்புடன் காணப்பட்டனர். அரச முத்திரையிட்ட ஓலைச் சுருள் அவர்களிடமிருந்தது.

ஆவல் மிகுதியும், பரபரப்பும் ஒருசேர வீரமாதேவி ஓலைச் செய்தியைப் படித் தாள். படித்தவுடனே அதை மிலாடுடை யாரிடம் நீட்டினாள். "கோதாவரிக் கரையி லிருந்து சக்கரவர்த்திகள் எழுதியிருக்கி றார்கள்" என்றாள்.

"அரசர் தங்களுக்கு எழுதியுள்ள அந்தரங்க ஓலையை நான் படிக்கலாமா? ஏதாவது முக்கியச் செய்தியிருந்தால் மட்டும் சொல்லுங்கள்" என்றார்.

"இல்லை, இல்லை. தாங்கள் படிக்க லாம்" என்ற வீரமாதேவி, ஓலையை அவ ரிடம் கொடுத்தாள்.

மிலாடுடையார் படித்தபின் பிரம்மாதி ராயரிடம் கொடுத்தார்.

மறுகணம் இருவரும் எழுந்தனர்.

"நான் நினைத்தது சரி. தீர்த்த யாத்திரை புனித நீராடல் இல்லை. அங்கே பெரும் போர் நடைபெறவிருக்கிறது. உடனே நாங்கள் புறப்படுகிறோம்" என்றனர்.

மறுநாள் இராசராச பிரம்மராயரும் உத்தம சோழ மிலாடுடையாரும் ஐநூறுக்குக் குறையாத படை வீரர்களுடன், கோதாவரிக் கரையை நோக்கிப் பயணப்பட்டார்கள்.

(தொடரும்)

நடையா! இது நடையா!

"கலியாணத்துக்கு முன்னால எவ்வளவு ஸ்லிம்மா டிரிம்மா இருந்தேன் தெரியுமா! ம்... இப்ப பார் எப்படி குண்டாயிட்டேன்?" — பெரும்பாலான பெண்களின் புலம்பல் இது.



வீடியோ போட்டுக்கொண்டு எக்ஸர்ஸைஸ் செய்வதோ, ஹெல்த் கிளப்பிற்குப் போய் ஸ்டீம் பாத் எடுத்து சைக்ளிங் பண்ணுவதோ - பலருக்கு ஒத்து வராத விஷயம்.

ஆனால் எல்லாப் பெண்களுமே சுலபமாகச் செய்யக்கூடிய விஷயம் ஒன்று உண்டு. அதுதான் நடைப் பயிற்சி.

நடக்கவேண்டும் என்றதும் உடனே என்னவோ, விடியற் காலையில் 5 மணிக்கும் ராத்திரி ஏழு மணிக்கும் வாக்கிங் போவது மட்டும் தான் என்று எண்ண வேண்டாம்.

நேரம் கிடைக்கும்போதெல்லாம் சிறு நடை நடக்கலாம். எல்லாக் காரியங்களுக்கும் உட்கார்ந்த இடத்திலிருந்தே மற்றவர்களை ஏவிக் கொண்டிருக்காமல் நாமே செய்ய முற்பட்டாலே, வீட்டிற்குள்ளேயே நிறைய நடந்திருப்போம்.

காலையிலோ, மாலை 5 மணி அளவிலோ நம் வீட்டிற்கு வெளியில் இருக்கும் தோட்டத்திலோ,



பிளாட்டாக இருந்தால் சுற்றியிருக்கும் இடத்திலோ கொஞ்சம் நடக்கலாம்.

தொடக்கத்திலேயே வேகமாக, அதிக நேரம் நடக்க வேண்டும் என்பதில்லை. அது அதிக வலியையும் சோர்வையும் உண்டாக்கி விடுவதுடன், மறுநாளிலிருந்து நிறுத்தி விடலாமே என்ற எண்ணத்தையும் தோற்றுவித்து விடக்கூடும்.

மெதுவாகத் தொடங்கி கொஞ்சம் கொஞ்சமாக நேரத்தையும் வேகத்தையும் கூட்டிக் கொள்ளுங்கள். நீரிழிவு நோயாளிகளுக்கும், ஹார்ட் அட்டாக் வருவதைத் தடுப்பதற்கும் நடைப்பயிற்சி மிகச் சிறந்தது. தவிரவும் முதுகுவலி, இடுப்புவலி குறைவதுடன் ஞாபக சக்தியும் அதிகமாகும். கைகளை வீசி நடப்பதால் உடலுக்கு நல்ல வடிவமும் கிடைக்கிறது.

உடலில் தேவைக்கு அதிகமாக இருக்கும் கலோரிகள் குறைகின்றன. மூட்டுகள் பலப்படுகின்றன. பாதம் வரைக்கும் ரத்த ஓட்டம் சீராகிறது.

எல்லாவற்றையும்விட நாளெல்லாம் டென்ஷன், பிரச்னை என்று இருப்பதால் சில நிமிடங்கள் தனியாக நடக்கும்போது மனசு லேசாகும். சில சமயம் நடந்து முடித்தபின் மனதில் சில கேள்விகளுக்கு விடையும் கிடைக்கும்.

சில விஷயங்களுக்கு "நடையா நடந்தேன்" என்பார்கள். அது போல் உங்கள் உடல், மனது இரண்டும் வசீகரம் பெறக் கொஞ்சம் "நடையா நடங்களேன்".

—பத்மா கோபால்.

பாவையர் பக்கங்கள்


கொஞ்சம் கேளுங்கள்

o தையல் சாமான்கள் இருக்கும் டப்பாவில் ஒரு சிறிய மாக்னெட் போட்டால் ஊசிகள் தொலையாமல் இருக்கும்.

o ரசத்தை இறக்கி வைத்ததும் அதில் தேங்காய் எண்ணெயில் கடுகு, சீரகம் தாளித்துக் கொட்டி மூடிவிட்டால் ரசம் மணமாக இருக்கும்.

o பழைய சாதத்தில் மைதா, ரவை சேர்த்து வெங்காயம், கறிவேப்பிலை, உப்பு, பச்சை மிளகாய், இஞ்சி போட்டுப் பிசைந்து எண்ணெயில் பக்கோடா போலப் போட்டுப் பொரித்து எடுக்கலாம்.

— கீதா சுவாமிநாதன்



எல்லாவற்றுக்கும் எலுமிச்சை

சரும நோய்களுக்கு

எலுமிச்சம்பழ ரசம், தேங்காய் எண்ணெய், ஆகியவற்றைச் சம அளவு எடுத்துக் கொண்டு மஞ்சள் துண்டையும் வேப்ப இலைகளையும் போட்டு அரைத்து எல்லாவற்றையும் கலந்து சருமத்தில் தேய்க்கவும். சிறிது நேரம் பொறுத்துக் குளித்தால் சருமம் பளிச்சென்றாகி விடும்

உடலில் தோலில் மென்மையும் மிருதுவும் பெற

குளிக்கின்ற தண்ணீரில் இரு எலுமிச்சம்பழங்களின் ரசத்தையும், சிறிது உப்பையும் போட்டுக் குளித்தால் அழுக்கு, துர்நாற்றம் எல்லாம் போய், தோல் மென்மையாகவும் மிருதுவாகவும் ஆகி விடும்.

அம்மைத்தழும்பு

அம்மை வார்ப்பினால் ஏற்பட்ட தழும்பு மறைய எலுமிச்சம் பழத்தை அறுத்து முகத்தில் தேய்த்துக் குளித்தால் நாளடைவில் அம்மைத் தழும்பு மறையும்.


தலைமுடி கொட்டுதல்

சில நெல்லிக்கனிகளை அரைத்து எலுமிச்சம்பழ ரசத்துடன் கலந்து தலையில் தேய்த்து வந்தால் முடி உதிர்தல் நின்று நன்கு வளரும். முடி கருப்பு நிறம் பெறும். நரை இருக்காது.

தலையில் பேன்கள் மறைய

வெள்ளைப் பூண்டை அரைத்துக் கொண்டு எலுமிச்சம்பழ ரசத்தை விட்டுக்கலந்து தலையில் தேய்த்துக் குளித்துக் கொண்டு வந்தால் தலையில் பேன்கள் இரா.

— கீதா சுவாமிநாதன்



25 புள்ளி 11 வரிசை, 11 புள்ளி 7 வரிசை

இந்த மாதம் பரிசு பெறும் கோலத்தை வரைந்தவர்

Selvi T. Janaki, P-138, Sector 12 8th Main Jeeva Bima Nagar, HAL III stage, Bangalore - 560 075.

வாசகர்கள் இந்த இடம் பிடித்துப் பரிசு பெற இதுவரை வெளிவராத புதுமையான சிறந்த கோலத்தை, கறுப்பு மையினால் வரைந்தனுப்பவும். தேர்ந்தெடுக்கப்படும் கோலத்துக்குப் பரிசு ரூ. 50/-. தேர்ந்தெடுக்கப்படாதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது.

எப்படி செஞ்சீங்க?

கொஞ்சம் கடலைப் பருப்பை நல்லா வேக வச்சு எடுத்துகிட்டு, பாகற்காயில் மாவா உதிர்த்துப் போட்டு வதக்கிப் பொரியல் பண்ணினா அபாரமா இருக்கும். கசப்பும் கொஞ்சம் குறையும். 'எப்படி செஞ்சீங்கன்னு?' நிச்சயமாக் கேப்பாங்க!


சப்பாத்தி ஜோர்

பூரிக்கோ, சப்பாத்திக்கோ கோதுமை அரைக்கும்போது, கிலோவுக்கு ஒரு கை அளவு கொண்டைக் கடலையையும் சேர்த்து அரைச்சு, பூரி, சப்பாத்தி செஞ்சு பாருங்க. மெது மெதுன்னு சாப்பிட ஜோரா இருக்கும்.

அடி பிடி

குழம்பு அடிபிடிக்கும் வாடை வந்துச்சுன்னா, உடனே அதை வேறொரு பாத்திரத்திலே இறுத்து விட்டு (மாற்றி) ரெண்டு வெற்றிலையைப் போட்டு ஒரு கொதி வச்சு இறக்கிட்டா, அடி பிடிச்ச வாடை முக்கால்வாசியாவது போயிடும்.

தொகுப்பு : வளர்மதி ராஜேந்திரன்



எண்ணிப் பார்க்கலாம் பெண்ணே!

அன்புச் சகோதரிகளே!

டிரெயினில் லேடீஸ் கம்பார்ட் மெண்ட். இரண்டு பெண்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். நடுத்தர வயதிருக்கும். ஏதோ கவர்ன்மெண்ட் ஆபீஸில், அதிகாரி களாக இருக்க வேண்டும். அந்தப் படிப்பும், தோரணையும் பேச்சி லேயே தெரிந்தது.

ஆனால் பேச்சின் நடுவே,

"அவ என்னைவிட நிறையப் படிச்சிருக்கலாம். ஆனா எனக்குத் தான் சர்வீஸ் ஜாஸ்தி" - என்றும்,

"எனக்குத் தெரியாத சமை யலா? நான் பார்க்காத விருந் தாளிகளா? என்னைவிடவா எங்க ஓர்ப்பிடி நல்லா சமைக்கிறா?' என்றும் - வார்த்தைகள் வந்து விழுந்தன.

கொஞ்சம் யோசித்துப் பார்த் தால், நம்மில் பலபேர், குறிப் பாகப் பெண்கள், மற்றவர்களுடன் நம்மை அடிக்கடி ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளும் பழக்கத் துடன் இருக்கிறோம்.

எல்லாருக்கும், எல்லா குண மும், எல்லாத் திறமைகளும் அமைவது துர்லபம். ஒருவருக்கு நிர்வாகம் நன்றாக வரலாம். ஒருவருக்கு சமையல் பிரமாதமாக வரலாம். சிலருக்கு வீட்டைப் பராமரிப்பது கைவந்த கலையாக இருக்கலாம். இன்னும் சிலர் சாமர்த்தியமாக பிஸினஸ் செய்ய லாம் -

எப்படி இருந்தாலும், இவை யெல்லாம் தனித்தனித் திறமை களே. அனைத்தும் சேர்ந்து நமக்குக் கிடைப்பது சாத்திய மில்லை.

இதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். நமக்கிருக்கும் திறமைகளைப் பற்றிப் பெருமை யாக, தன்னம்பிக்கையுடன் இருக்க லாம். அடுத்தவருக்கு இருக்கும் திறமைகளைப் பார்த்து ஆச்சரியப் படலாம், பாராட்டலாம், முடிந் தால் கற்றுக்கொள்ளலாம்.

அதை விடுத்து ஒப்பிட்டுப் பார்ப்பதிலோ, அவரை எப்படி மட்டம் தட்டலாம் என்பதிலோ, யார் உயர்ந்தவர்கள் என்கிற போட்டியிலோ இறங்கினால், மிஞ்சுவது மனத்துயர் மட்டுமே!

பாவைப் பக்கங்களை, அதிகம் விரும்பிப் படிக்கிறீர்கள் என்பது நீங்கள் பகிர்ந்து கொள்ளும் விஷ யங்களிலிருந்தே தெரிகிறது. இது ஒரு நட்புப் பாலம். விமர்சித்து, குறைகளை இடித்துக் காட்டி இன்னும் நிறைய எழுதுங்கள்.

நட்புடன்
கிரிஜா ராகவன்.

பொட்டுக்கடலை மகிமை

1. பொட்டுக்கடலையை நைசாகப் பொடியாக்கி உப்பு, காரம் கலந்து வைத்துக் கொண்டால் உப்புமாவிற்கு இந்தப் பொடி யைத் தொட்டுக் கொண்டு சாப்பிட லாம். தோசைமேல் தூவியும் சாப்பிடலாம்.

2. பருப்பு இல்லாத நாளன்று பொட்டுக்கடலைப் பொடியைக் கரைத்துக் குழம்பு செய்தால் நன்கு ருசியாக இருக்கும்.

3. மிளகாய்ப் பொடி வறுக்கும் போது எண்ணெய் அதிகமாகி விட்டால் பொடிப்பது கடினம். இரண்டு பிடி பொட்டுக்கடலை சேர்த்துப் பொடித்தால் எண் ணெயே இருக்காது. சுலபமாகப் பொடியும்.

4. பொட்டுக் கடலையும் சர்க்கரையும் ஏலக்காய் சேர்த்துப் பொடியாக்கி வைத்துக் கொண் டால் தேவையான பொடி எடுத்து சூடான பால் சிறிதளவு ஊற்றி உருண்டையாகப் பிடித்துக் கொடுக்கலாம். குழந்தைகளும் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

5. காய்கறிகள் வதக்கும்போது எண்ணெய் அதிகமாகி விட்டால் எடுக்க முடியாது. நேரம் ஆக ஆக அடியில் தங்கி விடும். காய் கறிகளை இறக்குமுன் பொட்டுக் கடலை பொடி தூவி இறக்கினால் எண்ணெய் தங்காது. சுவையும் கூடும்.

— ஹேமா கோதண்டராமன்

டென்ஷனைக் குறையுங்கள்!



கங்கா ராமமூர்த்தி

மலைபோலக் குவிந்து கிடக்கும் வேலைகள், குழந்தைகள் ஒரு புறம், கணவர் இன்னொருபுறமாக விதம் விதமான பிரச்னைகளைக் கிளப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

- பிரச்னை எந்த உருவிலும் இருக்கலாம். பணப் பற்றாக் குறை. கணவரின் கெட்ட பழக்கங்கள், குடும்பத்தினருக்குப் பொதுவான தற்காலிக - நிரந்தரக் கவலைகள்! போராட்டங்கள் நிறைந்ததுதான் வாழ்க்கை. அதை ஒரு சவாலாக ஏற்றுப் போராடி வெற்றி கொள்ள வேண்டும்.

போராடுவது என்று சொல்லும் போது, அதில் அவரவருடைய சக்தியும் அளவும் அறிந்து போராட வேண்டும். பிரச்னையை எதிர்கொண்டு போராடும்போது, சக்திக்கு மீறிக் கவலைப்படுவதும் அளவு கடந்து மனம் வாடுவதும் உடலையும் அதன் ஆரோக்கியத்தையும் பாதிக்கும்.

கவலை என்பது ஒரு விஷயத்தில் 25 சதவிகிதம் இருந்தால் அதை அக்கறை என்று சொல்லலாம். 75 சதவிகிதத்திற்கு மேல் கவலைப்பட்டால் இரத்த ஒட்டம் அதிகரித்தலும், வயிற்றில் அமிலச் சுரப்பும்தான் ஏற்படும். இது நல்ல அறிகுறியல்ல.

இதன் விளைவு என்ன என்பதைச் சொல்லாமலே அறிந்து கொள்ளலாம். பிரஷர், அதனையடுத்து இதயநோய், அமிலச் சுரப்பால் அல்சர்.

உணவுக்கு உப்பு அவசியம். அதற்காக தேவைக்கு மீறி அதை உபயோகித்தால் உணவே பாழாகிவிடும். அதுபோலத்தான் தேவையான அளவு கலைப்பட்டால் போதும்.

நம்மால் எவ்வளவு முடியும்?

ஒவ்வொருவருக்கும் அவரவருக்குரிய மன ஆழத்திற்கு அளவு இருக்கிறது. உடம்பின் பலம், மனபலம் இதை யோசித்து எந்தப் பிரச்னையையும் எளிதாக்க முயலவேண்டும்.

எதிர் நிற்கும் பிரச்னையைச் சுத்தமாக மறந்துவிட்டு, சற்று நேரம் கண்களை மூடி தியானம் செய்யலாம். ஏதாவது மனதிற்குப் பிடித்த சங்கீதத்தைக் கேட்டு ரசிக்கலாம். உடம்பையும் மனதையும் 'டென்ஷனிலிருந்து' விடுபட்டுச் செயலாற்ற யோகாசனப் பயிற்சி எதையேனும் செய்யலாம்.

எந்த உடற்பயிற்சியும் தெரியாதவர்கள்கூட, வெளிக்காற்றை சுவாசித்தவாறு அரைமணி நேரம் உலாவிவிட்டு வரலாம். டென்ஷன் குறையும். பிரச்னைக்கு ஒரு விடிவும் பிறக்கும். குறைந்தபட்சம் பிரச்னையின் தீவிரம் நீர்த்துப் போகும்.

விலகுங்கள்

'டென்ஷன்' தரக்கூடிய விஷயங்களால்தான் பெண்களோ, ஆண்களோ நோய்வாய்ப்படுகிறார்கள். ஏதேனும் அதிர்ச்சியான செய்தி கேட்டதும் இரத்த ஒட்டம் ஸ்தம்பித்து, இதயம் பழுதடைகிறது. எந்தச் சிறிய விஷயமானாலும் பதற்றமின்றிச் செயல்படப் பழக வேண்டும்.

தினந்தோறும் ஏதாவது நல்ல நூல்களைப் படித்து வரலாம். கவலைகள் மனச்சுவரை அரிக்காமலிருக்க நண்பர்களோடு மனம் விட்டுப் பேசலாம். மனபலத்தை அதிகமாக்கிக் கொள்ள பயிற்சி செய்யலாம். பெரும் துயர்கள் வந்தாலும் எளிதாக விலகக்கூடிய மனப்பக்குவத்தைப் பயிற்சிகள் தருகின்றன.

வீட்டில் குழந்தைகளுடன் கத்தி விட்டு, கணவருடன் சண்டை போட்டு, அலுவலகத்தில் மேலதிகாரியுடன் கருத்து மோதல் கொண்டு - எல்லாவற்றையும் தன் மனதுக்குள் அழுத்தி வைத்துக் கொண்டிருக்கும் பெண்களைப் பார்க்கிறோம்.

அழுத்தி அழுத்தி அவை வேதனையாகி, குழந்தைகளிடம் வெறுப்பாக, கணவனிடம் எரிச்சலாக மாறும். எதையும் வெளியிட முடியாத நிலையில் உள்ளூரப் புழுங்குகிற அந்தப் பெண், நடமாடும் எரிமலையாகவே இருப்பாள்.

இத்தகைய கொடுமைக்கு ஆளாகலாமா? வெறுப்பா, கவலையா, துக்கமா, கோபமா...? மனப் பேழைக்குள் பதுக்கி வைக்க வேண்டாம். இவை பாதுகாக்கப்பட வேண்டியவை இல்லை! இவை தேவையில்லாத - உடலை வருத்தும் - உணர்வுகள்!

நண்பர்கள், உறவினர், அக்கம் பக்கம், பெற்றோர் என்று நெருங்கியவர்களுடன் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

சுமைகளாக இருந்து இதயத்தை அழுத்தும் உணர்வுகள், பகிர்ந்து கொண்ட பிறகு காணாமல் போய்விடுகின்றன.

- கோபம், கவலை, துன்பம் ஆகியவையெல்லாம் இல்லாத வாழ்வு மனித வாழ்வே இல்லை. அதனால் எதையும் அளவுக்கு மீறிப் போய்விடாமல் பார்த்துக் கொள்வது அவசியம்!

'டென்ஷனைக் குறைப்பதும், உணர்ச்சிகளுக்கு வடிகால் தருவதும் முக்கியம். வீட்டிலுள்ள அனைவரும் தங்கள் விருப்பம் போல சந்தோஷமான, 'டென்ஷன் இல்லாத' வாழ்க்கையைப் பெற - ஒருவருக்கு மற்றொருவர் துணை அவசியம் தேவை; இதை அனைவருமே உணர்ந்திருப்பதும் அவசியமாகும்.

குடும்பம் என்ற அமைப்பைக் கோயிலாகக் கட்டிக்காக்க வேண்டிய பெண்கள், தங்களுடைய மன வலிமையை வளர்த்துக் கொண்டு, பிறருக்கும் வழிகாட்ட வேண்டும்!

கடன் வாங்கினால்தான் வட்டி கொடுக்க வேண்டும், ஆனால் துன்பம், பிரச்னை இவையெல்லாம் கடனில்லாமலே வட்டி வசூலிக்கும் விஷயங்கள். எனவே இவற்றைப் பற்றி எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

பயிற்சி செய்வோமே! பலன்கள் நிச்சயம்!

	கேது		செவ்
சனி-வ			
	கிரகநிலை		சூரி புத
		குரு ராகு	சுக்

17.8.1994 முதல் 16.9.1994 வரை

பாலஜோசியர்
வித்வான். வே. லட்சுமணன்

கிரக மாறுதல்

31.8.1994 முதல் கன்னி – புதன்.

31.8.1994 முதல் துலா – சுக்கிரன்.

கிரக பாதசாரங்கள் :

சூரியன் – மகம் 1, சந்திரன் – மூலம் 2, செவ்வாய் – மிருகசீரிஷம் 4, புதன் – மகம் 2, குரு – சுவாதி 3, சுக்கிரன் – ஹஸ்தம் 2, சனி – சதயம் 3 (வக்), ராகு – விசாகம் 2, கேது – பரணி 4.

மேஷம் : *(அசுவினி, பரணி, கிருத்திகை 1 ஆம் பாதம் முடிய)*

உங்கள் ஜன்ம ராசியையும், ராசிநாதனையும், சனியையும் 7 இல் உள்ள குரு நோக்குவதால் அந்தஸ்தும், மதிப்பும் உயரப் பெறுவீர்கள். உடல் நலம் சீராக இருந்துவரும். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். துணிவோடும், தன்னம்பிக்கையோடும் செயல்படுவீர்கள். அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடிவரும். மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் உண்டாகும். இயந்திரப் பணியாளர்கள் சுபிட்சம் காண்பார்கள். அரசியல் ஈடுபாடு ஆக்கம் தரும். பொதுநலப் பணியாளர்கள் தங்கள் மதிப்பு உயரப் பெறுவார்கள். ஸ்பெகுலேஷன் துறைகள் லாபம் தரும். எதிரிகள் விலகிப் போவார்கள். போட்டிப் பந்தயங்களிலும் வழக்கு வியாஜ்ஜியங்களிலும் வெற்றி பெறச் சந்தர்ப்பம் சாதகமாக அமையும்.

கணவன் – மனைவி உறவுநிலை சீராகவே இருந்துவரும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் அளவோடு ஆதாயம் பெறுவார்கள். நிறுவன, நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு உற்சாகமான பாதை புலப்படும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மிகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். பயணம் பயன்படும். உத்தியோகஸ்தர்களும், தொழிலாளர்களும் தங்கள் இலட்சியம் ஈடேறப் பெறுவார்கள். 31 ஆம் தேதி முதல் வியாபாரிகளுக்கு வெளிச்சமான பாதை தெரியவரும். எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும் வரவேற்பு கூடப் பெறுவார்கள். கணிதம், எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் போன்ற இனங்கள் ஆக்கம் தரும். கலைஞர்கள் மந்தநிலை விலகப் பெறுவார்கள். மகளிரின் திறமை பளிச்சிடும். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் ஆகும். குடும்பத்தில் குதூகலம் கூடும். ஆகஸ்ட் 18,19,20,22,24,25,26,28,31 செப்டம்பர் 2,3,7,8,9,13,15 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, மேற்குத் திசைகள் அனுகூலமானவை. மிதுன, துலா, கும்ப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,8,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

ரிஷபம் : *(கிருத்திகை 2 ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிஷம் 2 ஆம் பாதம் முடிய).*

குரு, செவ்வாய் ஆகிய முக்கியமான கிரகங்கள் அனுகூலமாக உலவாததால் உங்கள் தேக ஆரோக்கியம் சீராக இராது. பேச்சில் கடுமையைக் குறைத்து இனிமையைக் கூட்டிக் கொள்வதன் மூலம் குடும்பத்திலும், வெளிவட்டாரத்திலும் உங்கள் செல்வாக்கைக் காத்துக் கொள்ளலாம். பொருளாதார நிலையில் விழிப்புணர்வு தேவை. ஸ்பெகுலேஷன், கொடுக்கல் – வாங்கல் இனங்கள் அதிகம் ஆதாயம் பெற இயலாது. கடுமையாக உழைத்தே பயன்பெற வேண்டி வரும். சோர்வுக்கு இடம் தரவேண்டாம். பெரியவர்களின் மனம் புண்படும்படியான காரியங்களில் ஈடுபடக்கூடாது. வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. எதிலும் பதற்றம் கூடாது. பொறுமையும் பக்குவமும் மிகவும் தேவை.

மாணவர்கள் படிப்பில் முழுமையான அக்கறை செலுத்தினால் ஓரளவு வளர்ச்சி காணலாம். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் ஆக்கம் தரும். வியாபாரிகள் தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் வழக்கமான வளர்ச்சி பாதிக்கப்படாது. பிற மொழி, மதங்களைச் சேர்ந்தவர்கள் தக்க தருணத்தில் முன்வந்து உதவுவார்கள். ஏற்றுமதி, இறக்குமதி இனங்கள், தோல் பொருள்கள் ஆகியவற்றால் வருவாய் கிடைத்துவரும். 31 ஆம் தேதி முதல் தொழில்துறையில் வளர்ச்சி காண முடியும் என்றாலும் சிறுசிறு பிரச்னைகளுக்கும் ஆட்படவேண்டிவரும். தெய்வ வழிபாட்டில் கவனம் செலுத்துவது நல்லது. ஆகஸ்ட் 19,20,22,24,25,26,28,31 செப்டம்பர் 2,3,7,8,9,15 தேதிகள் சுமாரானவை. வடக்கும், தென்மேற்கும் அனுகூலமான திசைகளாகும். சிம்ம, கன்னி, துலா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,4,5 எண்கள் அதிர்ஷ்டமானவை.

உங்கள் ராசி பலன்

மிதுனம் : (மிருகசீரிஷம் 3 ஆம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3 ஆம் பாதம் முடிய)

5 இல் உள்ள குரு உங்கள் அறிவாற்றலை வெளிப்படுத்துவார். பொருளாதார நிலையில் வளர்ச்சி காண வைப்பார். நல்லவர்களின் நேசத்தாலும் நலம்பெற முடியும். தெய்வானுகூலம் என்பது உண்டாகும். பக்தி மார்க்கத்திலும், ஞான மார்க்கத்திலும் ஈடுபாடு கூடும். அரசியல்வாதிகள், அரசுப்பணியாளர்கள் ஆகியோர் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். கலைத்துறை ஊக்கம் தரும். பெண்கள் தங்கள் குறிக்கோள் நிறைவேறப் பெறுவார்கள். திரவப் பொருள்கள் லாபம் தரும். மக்களால் மனமகிழ்ச்சி கூடப் பெறுவீர்கள். மக்களுக்கு ஆற்றவேண்டிய கடமைகளைப் பெற்றோரால் ஆற்ற முடியும். வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும்.

திருமணம் ஆகாதவர்கள் அதற்கான வாய்ப்பு கூடிவரப் பெறுவார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் வரவேற்பு கூடும். துணிச்சலான காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். மருத்துவர்கள் நற்பெயர் பெறுவார்கள். விஞ்ஞானிகளுடைய திறமை பளிச்சிடும். நிர்வாகம், கணிதம், எழுத்து, வியாபாரம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். தொலைதூரத் தொடர்பு ஆக்கம் தரும். உற்றார், உறவினரால் நலம் உண்டாகும். 31 ஆம் தேதி முதல் வெற்றி வாய்ப்புகள் அதிகமாகும். திடீர்ப் பொருள்வரவும் நிகழும். நிலபுலங்களால் அனுகூலம் உண்டாகும். கேளிக்கை, உல்லாசங்களிலும், விருந்து உபசாரங்களிலும் ஈடுபாடு கூடப் பெறுவீர்கள். ஜன்ம ராசியில் செவ்வாய் உலவுவதால் எதிலும் பதற்றத்தோடு ஈடுபடாமல் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. அதன்மூலம் இரட்டிப்புப் பயன்பெறவும், சங்கடங்களுக்கு ஆட்படாமலும் இருக்க வழி உண்டாகும். ஆகஸ்ட் 24,25,26,28,31 செப்டம்பர் 2,3,7,8,9,13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, வடமேற்குத் திசைகள் அனுகூலமானவை. கன்னி, துலாம், மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,6,7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கடகம் : (புனர்பூசம் 4 ஆம் பாதம் முதல், பூசம், ஆயில்யம் முடிய)

குரு, சனி, செவ்வாய் ஆகிய முக்கியமான கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிக்காததால் உங்கள் எண்ணங்கள் ஈடேறத் தடைகளும், குறுக்கீடுகளும் இருந்துவரும். மனதில் நிம்மதி குறையும். வீண் சண்டை, சச்சரவுகளில் ஈடுபட வேண்டிவரும். வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலமான போக்கைக் காண இயலாது. போட்டிப் பந்தயங்களில் வெற்றி காணத் தடையிருந்துவரும். மக்களுக்காகச் செலவு செய்யவேண்டிவரும். இயந்திரப் பணியாளர்கள், இஞ்சினீயர்கள் ஆகியோர் பொறுப்புடன் காரியமாற்றுவது நல்லது. பயணத்தை ஒத்திப்போடுவது அவசியமாகும். எரிபொருட்கள், கூரிய ஆயுதங்கள் ஆகியவற்றின் பக்கம் நெருங்கும்போது பாதுகாப்புத் தேவை. எதிலும் பதற்றம் அடியோடு கூடாது.

எதிர்ப்புகளின் கரம் வலுத்திருக்கும் நேரமிது என்பதால் யாரிடத்திலும் வெளிப்படையாகப் பழகவேண்டாம். பேச்சில் நிதானம் தேவை. தொழிலாளர்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் சோதனைகள் சூழும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்பை எண்ணிக் கைப்பொருளை வீணாக்கவேண்டாம். கைப்பொருளைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்வதும் அவசியமாகும். நல்லவர்களின் மனம் புண்படும்படியான காரியங்களில் ஈடுபடலாகாது. உடன்பிறந்தவர்களுக்கும், உங்களுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் சூழும். 31 ஆம் தேதி முதல் சுக்கிரபலம் கூடுவதால் கலைஞர்கள் வெளிச்சம் காண்பார்கள். நண்பர்களாலும், உற்றார், உறவினர்களாலும் நலம் உண்டாகும். புதிய பொருட்களின் சேர்க்கை நிகழும். பெண்கள் உற்சாகமான பாதையைக் காண்பார்கள். ஆகஸ்ட் 18,19,24,25,26,28,31 செப்டம்பர் 2,3,7,8,9,13,15 தேதிகள் சுமாரானவை. வடக்கும், தென்கிழக்கும் அனுகூலமான திசைகளாகும். சிம்மம், துலாம் ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,5,6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம் முடிய)

3 இல் உள்ள ராகுவும், 11 இல் உள்ள செவ்வாயும் உங்கள் ஆற்றலை வெளிப்படுத்துவார்கள். எதிர்ப்புகளையும், தடைகளையும் கடந்து வாழ்வில் வெற்றி காண்பீர்கள். போட்டிப் பந்தயங்களில் ஈடுபட்டுப் பயன்பெறச் சந்தர்ப்பம் கனிந்து வரும். வழக்கு விவகாரங்களில் நல்ல திருப்பம் உண்டாகும். செந்நிறப் பொருட்கள் லாபம் கொண்டுவரும். பெற்றோராலும், உடன்பிறந்தவர்களாலும் நலம் பெறுவீர்கள். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற இனங்கள் ஆக்கம் தரும். இயந்திரப் பணியாளர்கள், இஞ்சினீயர்கள் ஆகியோர் சுபிட்சம் காண்பார்கள். ஏற்றுமதி, இறக்குமதி இனங்களால் அனுகூலம் உண்டாகும். அயல்நாட்டுத் தொடர்பால் நலம் பெறுவீர்கள்.

நிறுவன, நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். மருத்துவர்களது திறமை பளிச்சிடும். அரசியல்வாதிகளும், அரசுப்பணியாளர்களும் தங்கள் மதிப்பு உயரப் பெறுவார்கள். வியாபாரம் வளர்ச்சி பெறும். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் வரவேற்பு கூடும். விஞ்ஞானிகள், இரசாயனத் துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோருக்கெல்லாம் வளர்ச்சிக்கான மார்க்கம் புலப்படும். உழைப்பு வீண்போகாது. 31 ஆம் தேதி முதல் குடும்பத்தில் குதூகலம் கூடும். பொருளாதார நிலையிலும் எதிர்பாராததொரு வளர்ச்சி உண்டாகும். பேச்சுத் திறமையாலும், மதியூகத்தாலும், வசீகரச் சக்தியாலும் மற்றையோரைக் கவர்ந்து, உங்கள் காரியங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். செல்வாக்கும், மதிப்பும்கூட உயரும்.

மக்களாலும், வாழ்க்கைத் துணைவராலும் ஓரிரு தொல்லைகள் ஏற்படக்கூடுமென்றாலும் சமாளிப்பீர்கள். ஆகஸ்ட் 18,19,20,26,28,31 செப்டம்பர் 2,3,7,8,9,13,15 தேதிகள் சிறப்பானவை. தென்திசை அனுகூலமானது. கன்னி, துலா, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,4,5,6,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கன்னி : (உத்திரம் 2 ஆம் பாதம் முதல், ஹஸ்தம், சித்திரை 2 ஆம் பாதம் முடிய)

குரு, சனி, செவ்வாய் ஆகிய முக்கியமான கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிப்பதால் உங்கள் செல்வாக்கும், மதிப்பும் உயரும். நல்லவர்களின் நேசத்தால் நலம் பல பெறுவீர்கள். குடும்பத்தில் குதூகலம் கூடும். செல்வநிலை உயரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல், வாங்கல் இனங்கள் ஆதாயம் கொண்டுவரும். இயந்திரப் பணியாளர்களுக்கும், இஞ்சினீயர்களுக்கும் செழிப்பான சூழ்நிலை உருவாகும். சமுதாய நலப் பணியாளர்கள் வரவேற்பு கூடப் பெறுவார்கள். தொழிலாளர்களும், விவசாயிகளும், உத்தியோகஸ்தர்களும் முன்னணிக்கு உயருவார்கள். உடன்பிறந்தவர்களால் ஓரிரு காரியங்கள் நிறைவேறும். கணவன், மனைவி உறவுநிலை சீராக இருந்துவரும். ஆசிரியர்களும், பேராசிரியர்களும் தங்கள் எண்ணம் ஈடேறப் பெறுவார்கள்.

எதிர்பாராத ஓரிரு செலவுகள் அவ்வப்போது ஏற்படும். பிறமொழி, மதக்காரர்களிடம் எச்சரிக்கையுடன் பழகுவது நல்லது. 31 ஆம் தேதி முதல் ராசிநாதன் புதன் உங்கள் ஜன்ம ராசிக்கே இடம் மாறுவதாலும், சுக்கிர பலம் கூடுவதாலும் பேச்சாற்றலும், வசீகர சக்தியும் கூடும். உடல் ஆரோக்கியம் சீர்பெறும். முக்கியமான ஓரிரு எண்ணங்கள் இனிது நிறைவேறும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடிவரும். வங்கிகள், சேமிப்பு நிறுவனங்கள், அரசாங்க கஜானாக்கள் ஆகிய பொருள் நடமாட்டமுள்ள இடங்களில் தொழிலாற்றுபவர்கள் சுபிட்சம் காண்பார்கள். கலைத்துறை ஊக்கம் தரும். பெண்கள் வெற்றிநடை போடுவார்கள். புனிதமான காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். அயல்நாட்டுத் தொடர்பு நலம் தரும். திருமணம் ஆகாதவர்கள் அதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். திருமணம் ஆனவர்கள் இல்லறத்தில் நல்லறம் காண்பார்கள். ஆகஸ்ட் 18,19,20,24,31 செப்டம்பர் 2,3,7,8,9,13,15 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, மேற்குத் திசைகள் அனுகூலமானவை. துலா, கும்ப, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,6,8,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

துலாம் : (சித்திரை 3 ஆம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3 ஆம் பாதம் முடிய)

5 இல் உள்ள சனி, 7 இல் உள்ள கேது, 9 இல் உள்ள செவ்வாய் ஆகியோரை வியாழன் நோக்குவதாலும், 11 இல் சூரியன், புதன் ஆகியோர் உலவுவதாலும் சங்கடங்களைக் கடந்து ஓரளவு வாழ்க்கையில் வெற்றி காண்பீர்கள். மனக்குழப்பங்கள் குறையும். வீண் அலைச்சலும் விரயங்களும் கட்டுக்குள் அடங்கும். கணவன், மனைவியிடையே சலசலப்புகள் குறையும். மக்களால் ஓரிரு எண்ணங்கள் ஈடேறும். தந்தையால் அனுகூலம் உணடாகும். அரசுப்பணியாளர்களும், அரசியல்வாதிகளும் செழிப்பான சூழ்நிலையைக் காண்பார்கள். நிறுவன, நிர்வாகத் துறையினருக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகமாகும். வியாபாரிகள் மந்தநிலை அகலப் பெறுவார்கள். தொழில்நுட்ப அறிவு மேம்படும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் ஆக்கம் தரும்.

31 ஆம் தேதி முதல் ராசிநாதன் பலம் பெறுவதால் முக்கியமான ஓரிரு எண்ணங்கள் நிறைவேறும். தோற்றப்பொலிவு பிரகாசிக்கும். கேளிக்கை, உல்லாசங்களிலும், விருந்து உபசாரங்களிலும் பங்கு கொள்வீர்கள். புதிய ஆடை, அணிமணிகள், அலங்காரப் பொருட்கள் ஆகியவற்றின் சேர்க்கை நிகழும். பெண்களுக்கு உற்சாகமான சூழ்நிலை உதயமாகும். சமுதாய நலப் பணியாளர்கள் பாராட்டுகளுக்கு உரியவர்களாவார்கள். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு வெற்றி வாய்ப்புகள் கூடும். பொருள் வரவு திருப்தி தரும் என்றாலும் எதிர்பாராத ஓரிரு செலவுகளைச் சந்திக்கவும் நேரும். ஆகஸ்ட் 18,19,20,24,25,26,31 செப்டம்பர் 2,3,7,8,9,13,15 தேதிகள் சிறப்பானவை. கீழ்த்திசை நலம் தரும். கும்ப, மேஷ, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,5 எண்கள் அதிர்ஷ்டமானவை.

விருச்சிகம் : (விசாகம், 4 ஆம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய)

ராசிநாதன் 8லும், சனி 4லும், குரு 12லும் உலவும் நேரமிது என்பதால் எதிலும் விழிப்புடன் ஈடுபடுவது அவசியமாகும். அவசரப் போக்குக்கு இடம் தரலாகாது. வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. பயணத்தைத் தவிர்ப்பதும் அவசியமாகும். நண்பர்கள், உற்றார், உறவினர்களால் அதிகம் நன்மையை எதிர்பார்க்க இயலாது. உடன்பிறந்தவர்களுக்கும், உங்களுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் கூடும். வீண் வழக்கு, வியாஜ்ஜியங்களில் ஈடுபடவேண்டாம். பேச்சில் சூடான வார்த்தைகளைத் தவிர்ப்பது நல்லது. அதன்மூலம் குடும்பத்திலும், வெளி வட்டாரத்திலும் உங்கள் மதிப்பை உயர்த்திக் கொள்ள முடியும். எரிபொருட்கள், கூரிய ஆயுதங்கள், இயந்திரங்கள் ஆகியவற்றின் பக்கம் நெருங்கும்போது பாதுகாப்புத் தேவை.

பொருளாதார நிலையில் கவனம் தேவை. வீண் செலவுகளைத் தவிர்ப்பது நல்லது. ஸ்பெகுலேஷன், கொடுக்கல் – வாங்கல் இனங்களில் ஈடுபடலாகாது. நிலபுலங்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. தொழிலாளர்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் பொறுப்புகள் கூடும். இடமாற்றம், நிலைமாற்றம் ஆகியவையும் உண்டாகும். அரசியல்வாதிகள், அரசுப்பணியாளர்கள், நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்கள், மருத்துவர்கள் ஆகியோர் தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். வியாபாரிகளுக்கு வழக்கமான முன்னேற்

றம் தடைபடாது. எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் நலம் கூடும். மக்களால் செலவுகள் ஏற்படும். ஞானமார்க்கத்திலும் பக்தி மார்க்கத்திலும் ஈடுபாடு உள்ளவர்களுக்கு மனநிம்மதி கிடைக்கும். நல்லவர்களின் தொடர்பை வலுப்படுத்திக் கொண்டு, நல்லவர் அல்லாதவர்களை விட்டு விலகுவதன் மூலம், சங்கடங்களுக்கு ஆட்படாமல் தப்பலாம். ஆகஸ்ட் 18,19,20,24,25,26,28 செப்டம்பர் 3,7,8,9,13,15 தேதிகள் சிறப்பானவை. கீழ்த்திசை அனுகூலமானது. சிம்ம, கன்னி ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,5,6,7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம் முடிய)

ராசிநாதன் குரு 11 இல் உலவுவதாலும், சனி பலம் கூடியிருப்பதாலும் உங்கள் அறிவாற்றல் பிரகாசிக்கும். செல்வநிலை உயரும். திறமைக்குரிய வரவேற்பு கிடைத்துவரும். சமுதாயநலப் பணியாளர்களுக்கு மதிப்பு உயரும். எண்ணெய் வகையறாக்கள், தாதுப்பொருட்கள் ஆகியவற்றால் ஆதாயம் கிடைத்துவரும். நிறுவன, நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். தெய்வப்பணிகளிலும், தருமப் பணிகளிலும் ஈடுபாடு கூடும். அரசியல்வாதிகள் தங்கள் செல்வாக்கு உயரப் பெறுவார்கள். வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஏற்கெனவே வேலையில் இருப்பவர்கள் பதவி உயர்வு, ஊதிய உயர்வு, இடமாற்றம் ஆகியவற்றைப் பெறுவார்கள்.

மருத்துவர்களது எண்ணம் ஈடேறும். ஆசிரியர்கள போற்றப்படுவார்கள். நிலபுலங்களால் ஆதாயம் கிடைத்துவரும். பெரியவர்களும் தலைவர்களும் உங்கள் வளர்ச்சிக்கு உற்ற துணையாக விளங்குவார்கள். அயல்நாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். பிற மொழி, மதங்களைச் சேர்ந்தவர்கள் உதவிக்கரம் நீட்டுவார்கள். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்கள் அளவோடு லாபம் தரும். 31 ஆம் தேதி முதல் வெற்றி வாய்ப்புகள் அதிகமாகும். பொருள் திரட்டுவதில் ஆர்வம் கூடும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களில் ஈடுபடவும், அதன்மூலம் ஆதாயம் பெறவும் சந்தர்ப்பம் கனிந்துவரும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள், மகளிர் ஆகியோர் செழிப்பான பாதையைக் காண்பார்கள். திருமணம் ஆகாதவர்களுக்கு அதற்கான வாய்ப்புக் கூடும். திருமணம் ஆனவர்கள் வாழ்க்கைத்துணைவரால் அனுகூலம் பெறுவார்கள். ஆகஸ்ட் 18,19,20,24,25,26,28, 31 செப்டம்பர் 7,8,9,13,15 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, மேற்குத் திசைகள் அனுகூலமானவை. கும்ப, சிம்ம, துலாம் ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,4,5,8 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மகரம் : (உத்திராடம் 2 ஆம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2 ஆம் பாதம் முடிய)

செவ்வாய் பலம் கூடியிருப்பதால் உங்கள் பராக்கிரமம் வெளிப்படும். சங்கடங்களைக் கடந்து வாழ்வில் வெற்றி காண்பீர்கள். பொறியியல் துறை ஆக்கம் தரும். நிலபுலங்களால் அனுகூலம் உண்டாகும். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். துணிச்சலான செயல்களில் ஈடுபாடு அதிகமாகும். நிறுவன, நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி வாய்ப்புகளைப் பெறுவார்கள். வியாபாரம் வளர்ச்சி பெறும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் போன்ற இனங்கள் ஆக்கம் தரும். தொலைதூரத் தொடர்பால் நலம் பெறுவீர்கள். பிறமொழி, மதங்களைச் சேர்ந்தவர்கள் உங்களுக்கு உதவ முன்வருவார்கள். ஏற்றுமதி, இறக்குமதி இனங்கள் லாபம் தரும்.

கணவன், மனைவியிடையே சிறுசிறு சலசலப்புகள் ஏற்படக்கூடும். விட்டுக் கொடுத்துப் பழகிவருவது நல்லது. பிறர் மனம் புண்படும்படியான வார்த்தைகளை உதிர்க்காமல் இருப்பது அவசியம். குறிப்பாகப் பெரியவர்கள் அதிருப்திக்கு ஆளாகாமல் இருப்பது நல்லது. வீண் அலைச்சலைக் குறைத்துக் கொள்வதன் மூலம் உடல் அசதி ஏற்படாமல் இருக்கும். 31 ஆம் தேதி முதல் நற்பணிகளில் ஈடுபடச் சந்தர்ப்பங்கள் கூடிவரும். தெய்விக மார்க்கங்களில் ஈடுபாடு கூடும். செய்து வரும் தொழிலில் வளர்ச்சி காண வாய்ப்புகள் கனிந்து வரும். உழைப்பு அதிகமானாலும் அதற்கான பயன் கிடைக்கப் பெறுவீர்கள். ஆகஸ்ட் 18,19,20,24,25,26,28,31 செப்டம்பர் 2,3,7,8,9,13,15 தேதிகள் சிறப்பானவை. தென்திசை அனுகூலமானது. மிதுன, கன்னி, துலாம் ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,4,5,9 எண்கள் நலம் தரும்.

கும்பம் : (அவிட்டம் 3 ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3 ஆம் பாதம் முடிய)

குரு 9 இல் அமர்ந்திருப்பதால் தெய்வானுகூலம் உண்டாகும். நல்லவர்களின் தொடர்பு கிட்டும். அதனால் நலமும் உண்டாகும். தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்கள், விவசாயிகள் ஆகியோர் தங்கள் திறமைக்கும், புத்திசாலித்தனத்துக்கும் உரிய வளர்ச்சியைக் காண்பார்கள். ஆன்மிகத்தில் நாட்டம் கூடும். நிறுவன, நிர்வாகத்துறையினருக்குச் செழிப்பான பாதை புலப்படும். மக்களால் பெற்றோருக்கும், பெற்றோரால் மக்களுக்கும் அனுகூலங்கள் உண்டாகும். பொருளாதார நிலையில் வளர்ச்சி காணச் சந்தர்ப்பம் கனிந்துவரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்கள் லாபம் தரும். தொலைதூரத் தொடர்பால் நலம் பெறுவீர்கள். வெளிநாட்டுப் பயணத்திட்டம் நிறைவேறும். நூதன நண்பர்கள் உதவுவார்கள்.

31 ஆம் தேதி முதல் புத, சுக்கிர பலம் கூடுவதால் முக்கியமான ஓரிரு காரியங்கள் நிறைவேறும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் ஆகும். பொருள் நடமாட்டமுள்ள வங்கிகள், சேமிப்பு நிறுவனங்கள், அரசாங்க கஜானாக்கள் ஆகியவற்றில் பணிபுரிபவர்களுக்கு உற்சாகமான சூழ்நிலை உருவாகும். புனிதப் பயணம் மேற்கொள்ளவும், சாதுக்கள்,

மகான்கள் ஆகியோரது தரிசனம் கிடைக்கப் பெறவும் சந்தர்ப்பம் கனிந்து வரும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றிநடை போடுவார்கள். வியாபாரம், கணிதம், எழுத்து, விஞ்ஞானம், மருத்துவம் போன்ற துறைகள் ஆக்கம் தரும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் கூடிவரும். கடுமையாகப் பாடுபடுபவர்கள் இரட்டிப்பு லாபம் பெறுவார்கள். ஆகஸ்ட் 18,19,20,24,25,26,28,31 செப்டம்பர் 2,3,9,13,15 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, வடமேற்குத் திசைகள் அனுகூலமானவை. மேஷ, துலாம் ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மீனம் : (பூரட்டாதி 4 ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

பெரும்பாலான கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிக்காததால் உங்கள் முயற்சிகள் பலிதமாகத் தடையிருந்துவரும். குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் சூழும். பொருளாதாரநிலை ஏற்றம், இறக்கமாகவே அமையும். பேச்சிலும், உணவு விஷயத்திலும் கட்டுப்பாடு தேவை. நூதனமானவர்களின் தொடர்பு வேண்டாம். நண்பர்கள், உற்றார், உறவினர்களிடம்கூட விழிப்புடன் பழகுவது அவசியமாகும். மக்கள் நலனில் அக்கறை தேவைப்படும். தொழிலாளர்கள், விவசாயிகள், உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் அகலக்கால் வைக்கலாகாது. வழக்கமாகச் செய்து வரும் வரும் காரியங்களிலும் கூட அதிக அக்கறை தேவைப்படும். நூதனமான முயற்சிகளை ஒத்திப்போடுவது நல்லது. உடன் பணிபுரிபவர்களிடம் அதிகம் நெருக்கம் வேண்டாம்.

பயணத்தின்போதும், இயந்திரங்களின் பக்கம் நெருங்கும்போதும் பாதுகாப்புத் தேவை. கணவன், மனைவி உறவுநிலை சாதாரணமாகவே காணப்படும். நல்லவர்களின் தொடர்பை வலுப்படுத்திக் கொண்டு, நல்லவர் அல்லாதவர்களின் தொடர்பை விட்டு விலகுவதன் மூலம் சங்கடங்களுக்கு ஆளாகாமல் தப்ப முடியும். சூரியன், புதன் ஆகியோர் 6 இல் உலவுவதால் பிரச்னைகளைச் சமாளிக்கக் கூடிய பக்குவம் உண்டாகும். அரசு விவகாரங்கள் ஆக்கம் தரும். நிர்வாகத் திறமையால் நலம் பெறுவீர்கள். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற இனங்கள் ஆக்கம் தரும். 31 ஆம் தேதி முதல் கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெளிச்சமான சூழ்நிலையைக் காண்பார்கள். மகளிரின் பிரச்னைகளும் ஓரளவு தீரும். இறைவழிபாட்டில் ஈடுபடுவதன் மூலம் மனஅமைதி பெறமுடியும். ஆகஸ்ட் 18,19,20,24,25,26,28,31 செப்டம்பர் 2,3,7,13,15 தேதிகள் சுமாரானவை. கீழ்த்திசை அனுகூலமானது. சிம்ம ராசிக்காரர்கள் அளவோடு உதவுவார்கள். 1,5 எண்கள் அதிர்ஷ்டமானவை.

இளைய அமுதம்

தயாரிப்பு : குண்டு மணி

நாடோடிக் கதை

பழிக்குப் பழி

நூறு வருஷங்களுக்கு முன்பு லூனி நதிக்கரையில் பக்கத்துப் பக்கத்து வீடுகளில் லக்ஷ்மணனும் மனோகர் சிங்கும் வாழ்ந்து வந்தனர். இருவரும் மிகுந்த நட்புடன் பழகினார்கள்.

ஒரு தடவை அந்தக் கிராமம் முழுதும் பஞ்சம் தலைவிரித்தாடியபோது லக்ஷ்மணன் தம்பதி நகரத்துக்குச் சென்று வேலை தேடிச் சம்பாதிக்கலாம் என்று புறப்படலாயினர்.

புறப்படுவதற்கு முன் லக்ஷ்மணன் தன் நண்பர் மனோகர் சிங் வீட்டுக்குப் போனான். அங்கே மனோகர் சிங் இல்லை. அவன் மனைவி மட்டும் இருந்தாள். அவளிடம் லக்ஷ்மணன், "நகைகளை நகரத்துக்கு எடுத்துச் செல்ல எங்களுக்கு விருப்பமில்லை. ஆகவே உங்களிடம் கொடுத்துச் சென்று விட்டு, திரும்பி வந்ததும் பெற்றுக் கொள்கிறோம்" என்றான். அப்போது மனோகர் சிங் வந்து விடவே அவனிடமும் விஷயத்தைச் சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

சில வருஷங்கள் லக்ஷ்மணன் தம்பதி மாளவ தேசத்தில் இருந்து நிறைய செல்வம் சம்பாதித்து, பின் தங்கள் கிராமத்துக்குத் திரும்பினர்.

இரண்டு நாள்கள் கழித்து லக்ஷ்மணன் தம்பதி மனோகர் சிங் வீட்டுக்குச் சென்று தங்கள் நகைகளைத் திருப்பித் தரும்படி கோரினார்கள். அவர்கள் ஆச்சரியப்படும்படி மனோகர் சிங்கின் மனைவி, "நகைகளை எலி தூக்கிச் சென்று விட்டது" என்று சொல்லிவிட்டாள். தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதை லக்ஷ்மணன் தம்பதி உணர்ந்தனர்.

சில நாள்கள் கழித்து லக்ஷ்மணன் மனோகர் சிங்கிடம், "நான் அடுத்த கிராமத்துக்குச் சென்று வர வேண்டியிருக்கிறது. என் தோட்டப்பயிரைப் பாதுகாக்க சில நாள்களுக்கு யாரையாவது அனுப்பி வைக்க முடியுமா" என்று கேட்டான். மனோகர் சி... தம் கடைசிப் பையனைக் கா... லுக்கு அனுப்பி வைத்தார்.


லக்ஷ்மணன் அந்தப் பையனை அடுத்த கிராமத்திலிருந்த ... உறவினர் வீட்டில் இருக்கும்படியும், தாம் திரும்பி வரும்வரை அங்கேயே இருக்கும்படியும் சொல்லிவிட்டுச் சென்றான்.

→

உங்களால் முடியுமா?

அரசன் தன் மணிமுடியைத் தவற விட்டு விட்டான். நீங்களாவது அரசனுக்குத் தன் மணிமகுடம் கிடைக்க உதவுங்கள்.





சில நாள்களில் ஊருக்குத் ரும்பிய லக்ஷ்மணன் மனோகர் ங்கிடம் சென்று, "நான் திரும்பி ரும்போது, ஒரு பெரிய கழுகு ன் பையனைத் தூக்கிச் சென்று ட்டது!" என்றான்.


கோபமுற்ற மனோகர் சிங் ந்தக் கிராமத்துத் தலையாரி டம் சென்று தன் பையனைப் ற்றிய நிகழ்ச்சியைக் கூறி முறை ட்டான்.

"எப்படி ஒரு கழுகு பதின் ன்று வயதுப் பையனைத் ாக்கிச் செல்லும்?" என்று லக்ஷ்ம ணனிடம் கேட்டான், தலையாரி.

"ஏன் செல்லாது? என் நகை ளையெல்லாம் எலி தூக்கிச் சல்லுமானால், கழுகு பையனைத் ாக்கிச் செல்லாதா?" என்று னவினான் லக்ஷ்மணன்.

வெற்றிச் சின்னம்!

ஹைதராபாத்தின் முத்திரைச் சின்னமாகத் திகழ்வது சார்மினார்! 'கிழக்கின் வெற்றிச் சின்னம்' என்று வர்ணிக்கப்படும் சார்மினாரை 1591ஆம் ஆண்டு சுல்தான் முகம் மது குலிகுதுப்ஷா நிர்மாணித்தார். இதனை உருவாக்குவதற்கு அந்தக் காலத்தில் புதிதாகத் தோன்றிய நகரில் பரவிக் கொண்டிருந்த தொத்து நோயைக் கட்டுப்படுத்து வதற்கு ஒரு நம்பிக்கைச் சின்ன மாகச் சார்மினார் உருவாக்கப் பட்டதாம். சார்மினாரைச் சுற்றித்தான் பிரசித்தமான முத்து. பவனம், நகை வாணிபக் கடைகள் உள்ளன!



தலையாரிக்கு முழு விவரமும் தெரிவிக்கப்பட்டதும், "மனோகர்! நீ நகைகளைத் திருப்பி லக்ஷ்ம ணனிடம் கொடு. அப்படியானால் தான் உன் மகனை அவன் உன் னிடம் சேர்ப்பான்!" என்று தலை யாரி முடிவு சொன்னான்.

மனோகர் சிங் வேறு வழியின்றி நகைகளை லக்ஷ்மணனிடம் கொடுத்தான். உடனே லக்ஷ்மணன் அடுத்த கிராமத்திலிருந்து சிறு வனை அழைத்து வந்து மனோகர் சிங்கிடம் சேர்ப்பித்தான்!

தீய செயல் என்றுமே நற் பயனை விளைவிக்காது!

ஹலோ யார் பேசறது?

—பி.வி. கிரி

"ஹலோ! யார் பேசறது?
அப்பா, அம்மா சௌக்கியமா?"

"அப்பா, அம்மா சௌக்கியமே!
அண்ணா நீயும் சௌக்கியமா?"

இப்படி நாளும் பேசிடலாம்
இதற்குப் பெயரே தொலைபேசி!

விந்தைக் கருவி இதுவாகும்
விளையும் நன்மை பலவாகும்!

வாழ்த்துச் செய்தி கூறிடலாம்
வாழ்க்கை பற்றியும் பேசிடலாம்!

அவசரத் தகவல் தந்திடலாம்
அலுவல் பலவும் பார்த்திடலாம்!

வீட்டில் இருந்த படியே நாம்
வெளி நாட்டிலுமே பேசிடலாம்!

அற்புதக் கருவி கண்டவர் யார்?
அலெக் சாந்தர் கிரகாம்பெல்!



முகத்தில் விழிக்காதே!


விஜயநகர மன்னன் கிருஷ்ண தேவராயரிடம் விகடகவி தெனாலி ராமன் மனம் நோகும்படி ஏதோ பேசிவிடவே, அரசர், "இனிமேல் நீ என் முகத்தில் விழிக்காதே!" என்று சொல்லி விட்டார்.


தெனாலிராமன் இரண்டொரு மாதங்கள் அரண்மனைப் பக்கமே செல்லவில்லை. ஒருநாள் அரண் மனைக்குள் முகத்தில் கரி பூசிக் கொண்டு, ஒரு பானையினால் முகத்தை மூடிக்கொண்டு, ஓர் உருவம் நுழைந்ததும் தர்பார் முழுவதும் விழுந்து விழுந்து சிரித்தது! கிருஷ்ணதேவராயரும் அந்த உருவத்தைப் பார்த்து நகைத்தார்! "ஏன் இந்தப் பொய் வேடம்?" என்று மன்னர் அந்த உருவத்திடம் கேட்டதற்கு, "அரசே! உங்கள் முகத்தில் விழிக்கக் கூடாதென்ற கட்டளையினால் இந்த வேஷத்தில் வந்தேன்!" என்றது அந்த உருவம். பிறகு அந்த உருவம் தெனாலிராமனே என அறிந்த மன்னர் கிருஷ்ணதேவ ராயரும் நகைத்தபடியே அவனை மன்னித்ததாகச் சொன்னார்! ●



நல்ல பழக்கம்!

மணிலா மிருகக் காட்சி சாலையில் உள்ள தெரசா என் பெண் யானை தன் ப ஆரோக்கியத்தைத் தானே பேணி கொள்கிறது! இந்த யானை மிருகக் காட்சிச் சாலைப் பணியா பல்லைத் தேய்த்து விடும்வரை தன் காலை ஆகாரத்தை தொடவே செய்யாதாம்!





வழி கண்டுபிடியுங்கள்!

இந்தப் படங்களிலுள்ள ஒரு கடிகாரம் ரிப்பேராகியுள்ளது. அந்தக் கடிகாரம் எது என்று கண்டு பிடித்து, ரிப்பேர்க் காரனைக் கையோடு அழைத்துச் சென்று வழிகாட்டுங்களேன், பார்க்கலாம்! ●

பொய்க்குத் தண்டனை

ஆடுகள் மேய்க்கும் சிறுவன் ன் ஆட்டு மந்தையுடன் காட் க்குச் சென்று வந்தான். காட் ல் தான் ஒரு நரியைப் பார்த்த ாகக் கத்தினான். ஊரிலுள்ள க்கள் கம்பு தடிகளுடன் ஓடி ந்தனர்! ஆடு மேய்க்கும் சிறுவன் பாய் சொன்னதாகக் கண்டறிந் னர். இரண்டாவது தடவையும் வன் பொய் தொடர்ந்தது. க்கள் ஏமாந்தனர். ஆனால் ன்றாவது தடவை நிஜமாகவே ரி வந்தபோது ஆடு மேய்க்கும் றுவன் கத்தினான். யாரும் வன் உதவிக்கு வரவில்லை. பாய்யாய்க் கத்துவதாய் எண்ணி ட்டனர். நரி ஆட்டுமந்தையை ழுதும் விழுங்கிவிட்டது! பொய் ன். தான் பேசிய பொய்க்குக் டைத்த தண்டனையை எண்ணி மனமுடைந்து போனான்! ●

பதிலுக்குப் பதில்!

ராஜ்புதனத்தைச் சேர்ந்த ஆள்வார் சுல்தான் மன்னர் சுவாமி விவேகானந்தரிடம், "மிகுந்த மேதா விலாசத்துடன் திகழும் தாங்கள் ஒரு வேலையுமின்றி இப்படி ஊர் ஊராகச் சுற்றுகிறீர்களே ஏன்?" என்று கேட்டார்.

சுவாமி விவேகானந்தர் இதற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் ஆள்வார் மன்னரிடம் ஒரு கேள்வியைப் போட்டார் : "நீங்கள் நாட்டுக்கு அரசர். மக்களுடைய நலனைக் கவனிப்பதே தங்கள் கடமை. ஆனால் நீங்கள் அதை விட்டு இப்படி வெள்ளைக்காரத் துரைகளுடன் விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடுகிறீர்களே, அது ஏன்?"

கோபமடையாமல் மன்னர், "அது எனக்குப் பிடித்திருக்கிறது!" என்று பதில் சொன்னார்.

"அதுபோல் எனக்கும் ஊர் சுற்றுவது பிடித்துப் போயிருக்கிறது!" என்றார் விவேகானந்தர்! ●

உங்களுக்குத் தெரியுமா?

❑ பிரான்ஸ் நாட்டு மன்னன் நெப்போலியன் மிகப் பிரசித்தி பெற்ற அரசன். ஆனால் இந்த அரசனுக்குப் பூனைகள் என்றால் நடுக்கமாம்!

❑ சீனர்கள் ஒரு பூனையின் கண்களைப் பார்த்தே நேரத்தைக் குறிப்பிட்டுச் சொல்லிவிடுவார்களாம்! இருட்டில் பூனையின் கண்கள் விரிவதையும், பிரகாசமான ஒளியைக் கண்டு சுருங்குவதையும் வைத்து நேரத்தைச் சீனர்கள் கண்டுபிடிக்கிறார்களாம்! என்ன விந்தை! ●



பூத்த புது நிலவே!

— எழிலவன்

நிலவே நிலவே தண்ணிலவே!
நிலத்தில் பூத்த புது நிலவே!
அருகில் வந்தது ஏன் நிலவே? – என்
அறிவைக் கொன்றது ஏன் நிலவே? (நிலவே)

கண்ணே யுந்தன் வடிவழகில் – என்
கண்ணைக் கவர்ந்தது ஏன் நிலவே?
வண்ணப் புதுவகை ஆடைகட்டி – என்
எண்ணம் இழுத்தது ஏன் நிலவே? (நிலவே


முல்லைப் பற்கள் சிரிப்பழகில் – புது
முத்துச் சரங்கள் கோத்தனவோ?
மயக்கும் மழலைச் சொற்களிலே – ஒரு
மயக்கம் வந்தது ஏன் நிலவே? (நில்வே



நாகரிகக் கோமாளி!

கவிதைப்போட்டி

இதோ படத்திலுள்ள நாகரிகக் கோமாளி பற்றி ஓர் அருமையான கவிதை படைத்து அனுப்பினால் சிறந்த கவிதைக்கு ரூபாய் 25 பரிசு வழங்கப்படும்! கவிதை 16 வரிகளுக்குள் இருக்க வேண்டும். சிறுவர் சிறுமியருக்கு ஓர் அரிய வாய்ப்பு! எங்கே எடுங்கள் உங்கள் பேனாவை! எழுதுங்கள் அழகிய கவிதையை! ●



வால் நட்சத்திரம்

புஷ்பா தங்கதுரை

இந்த இதழ் வருவதற்கு முன் வியாழன் கிரகத்தை "ஷூமேக்கர் லெவி 9" என்ற வால் நட்சத்திரம் மோதியிருக்கும்! அந்த மோதலால் ஏற்படும் விளைவுகளை விஞ்ஞானிகள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள்.

1. வால் நட்சத்திரத்திற்கு யார் ஷூமேக்கர் லெவி என்று பெயர் வைத்தார்கள்?

ஷூமேக்கர் என்பவரும் டேவிட் லெவி என்பவரும் 1993இல் இந்த வால் நட்சத்திரத்தைக் கண்டு பிடித்தார்கள். அதனால் அவர்களது பெயர் இதற்கு வழங்கப் பட்டது.

2. இந்த வால் திடீரென்று எங்கே கிளம்பியது? எப்படி வந்தது?

வால் நட்சத்திரம் எப்போது வருகிறது என்பதைப் பெரும்பாலும் கூற முடியாது. எந்தக் கணிப்புக்கும் அது ஒத்து வராது. திடீரென வருவதுபோல திடீரென மறைந்து விடவும் செய்யும். கண்டு பிடிக்கப்படாத வால் நட்சத்திரங்கள் எத்தனையோ உண்டு. பொறுமையாக டெலஸ்கோப்பை வைத்து வானத்தைப் பாருங்கள். நீங்களும் புகழ் அடையலாம்.

3. மற்ற நட்சத்திரங்களைப் போல் வால் நட்சத்திரம் வெறும் நெருப்புக் கோளமா?

இல்லை. நமது சூரிய மண்டலம் பிறந்த போது சிந்திப்போன பொருள்களால் ஆன ஒரு கூட்டம்.

4. அப்படியானால் எப்படி இவை பிரகாசிக்கின்றன?

சூரிய வெளிச்சம் அதன் மீது விழுந்து பிரதிபலிக்கிறது.

5. வால் நட்சத்திரம் ஒரு திடமான பொருளா?

நீள வாலோடு இருக்கிறதே! வால் நட்சத்திரத்துக்கு தலை ஒன்று உண்டு. தலையும் வாலும் அழுக்கு நிறைந்த பனிக்கட்டித் துண்டுகளால் ஆனது. வாலின் நீளம் பல மைல்கள் இருக்கும்.

6. வால் நட்சத்திரம் எப்படி கிரகங்கள் மீது மோதுகிறது?

வால் நட்சத்திரம் ஆயிரக் கணக்கில் ஆகாய வெளியில் சூரியனைச் சுற்றுகின்றன. இவை பயணிக்கும் வழியில் சமயங்களில் கிரகங்கள் இருப்பது உண்டு. அப்போது அவை கிரகத்தில் மோதிக்கொள்ளும். சில வால் நட்சத்திரங்கள் கிரகங்களின் சமீபமாகப் போகும்போது கிரகங்களால் இழுபடுவதும் உண்டு.

7. வால் நட்சத்திரம் மட்டும் தான் கிரகங்களை மோதுமா?

வால் நட்சத்திரத்தைத் தவிர ஆஸ்ட்ராய்ட் என்பதும் கிரகங்களை மோதும். ஆஸ்ட்ராய்ட் என்பது பறக்கும் பாறைகள்! சிருஷ்டியின் போது விடுபட்டுச் சுதந்திரமாகச் சூரியனைச் சுற்றுபவை இவை! இவையும் கிரகங்கள்மீது மோதுவதுண்டு.

8. மோதினால் என்ன நடக்கும்?

ஐந்து மைல் குறுக்களவுள்ள ஒரு பொருள் பூமியை மோதினால் அது நூறு மைல் குறுக்களவுள்ள குழியை உண்டாக்கிவிடும். அது மட்டுமல்ல! அப்படி மோதுவதால் ஏராளமான தூசித்துகள்களை ஆகாயத்தில் கிளப்பிவிடும். காற்று அவற்றைப் பூமியைச் சுற்றி வரப் பரப்பிவிடும்.

9. இதனால் ஆபத்தா?

இந்தத் துகள்கள் வானத்தில் நிறைந்து சூரிய வெளிச்சத்தைத் தடுத்து பகலை இரவாக்கி விடும். பல மாதங்கள் இப்படி சூரிய வெளிச்சம் இல்லாமல் இருந்தால் தாவர இனங்கள் அழிந்து போகும். மிருக இனங்களும் அழியும். பின்னர் மனிதனும் அழிந்து போவான்.

10. அது போல் எப்போதாவது நடந்திருக்கிறதா?

பூமி மீது படிவம் படிவமாக விழுந்திருக்கும் வண்டல்களை விஞ்ஞானிகள் ஆராய்ந்து பூமி என்னென்ன கஷ்டங்களைக்கடந்து வந்திருக்கிறது என்று கணித்துள்ளார்கள். அப்படிச் செய்யும் போது, பூமியில் பல தாவர இனங்களும் மிருக இனங்களும் திடீரென இறந்திருப்பதை அறிந்துள்ளார்கள். அப்படி நடந்ததற்குக் காரணம் இது போல் வால் நட்சத்திரம் அல்லது ஆஸ்ட்ராய்ட் முட்டித்தான் என்று கூறுகிறார்கள். டினோஸார் இனங்கள் முற்றிலும் அழிந்ததற்கு இது ஒரு காரணம் என்று பலர் கூறுகிறார்கள்.

11. சந்திரனில் இந்த மோதல்கள் ஏற்படவில்லையா?

நிச்சயம் நடந்துள்ளன! சந்திரனிலும், இதர கிரகங்களிலும் பெரிய பெரிய குழி வட்டங்கள் இருப்பதைப் பார்ப்பீர்கள்! இவை இந்த மோதலினால் ஏற்பட்ட விளைவுகள்.

12. சரி! இப்போது வால் நட்சத்திரம் அல்லது ஆஸ்ட்ராய்ட் பூமி மீது விழ வாய்ப்பு உண்டா?

மனம் விட்டுப் பேசுவோம்

★ ஒரே கல்லில் இரண்டு மாங்காய் எனச் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் தாங்களோ ஒரே கல்லில் ஆறு மாங்காய்களை அல்லவா வீழ்த்தியிருக்கிறீர்கள்! ஜுலை '94 'அமுதசுரபி' இதழின் அட்டையைத்தான் குறிப்பிடுகிறேன். ஆறு வண்ணப் படங்களும் புதுச்சேரி இலக்கியச் சிறப்பிதழுக்கு மகுடமாகவே அமைந்து விட்டன. கண்களையும், கருத்தையும் கவரும் எழிலான அட்டையைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலிருக்கிறது.

— திருமதி மஞ்சுளா பாய்,
வியாசர் காலனி.

★ 'அமுதசுரபி'யின் புதுச்சேரி இலக்கியச் சிறப்பிதழ், படித்துப் படித்து மகிழ வேண்டிய ஒன்று. 'காரையம்பதியும் தமிழ்ப் பண்பாடும்' கட்டுரை சிறப்பானது. 'பாரதியின் குயில் தோப்பு', 'பாவேந்தரே? ஏன் சிரித்தீர்?', 'காற்றோடு உலவும் புகழ்' ஆகிய கட்டுரைகள் இதழுக்கு மேலும் அழகு சேர்த்தன.

இவற்றிற்கெல்லாம் சிகரமாக கர்மயோகியின் 'மழை' கட்டுரையைப் படித்து ஸ்ரீஅன்னைக்குப் பிரார்த்தனை செய்யத் தீர்மானித்தபோதே எங்கள் ஊரில் சரியான மழை பெய்யோ, பெய் என்று பெய்தது. நிலம் குளிர்ந்தது. எங்கள் மனமும் குளிர்ந்தது.

'அமுதசுரபி'யின் இலக்கியப் பணி மேலும் மேலும் தொடர வாழ்த்துகள்.

— ஜி. கந்தசாமி, அந்தமங்கலம்.

★ ஜுலை '94 இதழில் ஆன்மிகக் கட்டுரை 'மழை' மிகவும் நன்றாக இருந்தது. திரு. கர்மயோகியின் 'மழை' பற்றி படித்தவுடன் ஐந்து நாள்களாக வெயில் கொளுத்திக் கொண்டிருந்த எங்கள் ஊரில் இரண்டரை மணி நேரம் நல்ல மழை பெய்தது. மிக்க நன்றி.

— ப.ரா. லலிதா, பாலக்காடு.

★ புஷ்பா தங்கதுரையின் அறிவியல் பகுதி பல விஞ்ஞான உண்மைகளை எளிதில் புரிய வைக்கிறது. இப்பணி தொடர வாழ்த்துகள்.

— அ. செபாஸ்டின்,
குமரி மாவட்டம்.

★ 'தரையைத் தொடாத மழை' என் இதயத்தைத் தொட்டு விட்டது. நாற்பது வயதாகியும் குடும்பத்திற்காக மாடாக உழைத்து வரும் 'ராஜி' போன்ற பெண்களின் மனதை, பெற்றோர் ஏனோ புரிந்து கொள்வதே இல்லை என்பதை எத்தனை தெளிவாகக் காட்டியிருந்தார் சிறுகதை ஆசிரியர். 'மாருதி'யின் ஓவியம் கதைக்கு பிளஸ் பாயிண்ட்.

— திருமதி என். ஆர்.,
வியாசர்பாடி.

★ ஒரு நாய், விருந்தினன், பெண் மனம் என வித்தியாசமான மூன்று கோணங்களில் முத்தான சிறுகதைகள் மூன்றும் இலக்கியச் சிறப்பிதழுக்கு மகுடம் சூட்டின.

— அன்பின் செபா, களியல் 629 101.

★ வாய் இல்லாத ஒரு ஜீவனின் மனப்போராட்டத்தைக் கதை வடிவில் படித்திட்டபோது மனது கனத்தது. ஆம், தெருவில் எங்காவது ஒரு நாயின் 'தோற்றம்' கண்டால் எனக்கு இக் கதைதான் நினைவுக்கு வரும்.

— திருமதி நாராயணராவ்,
சென்னை – 39.

★ புதுவையைப் பற்றி ஏற்கெனவே அறிந்திருந்தாலும் இம்முறை தாங்கள் எடுத்துச் சொன்ன புதுவைச் செய்திகள் எல்லாமே 'புதுமை'யாக இருந்தன. குறிப்பாக வரலாற்றில் மறக்க முடியாத நிகழ்ச்சி போட்டோக்கள் காணக்கிடைக்காத அரிய பொக்கிஷங்கள் எனலாம்.

— திருமதி விஜயா முரளி,
திருப்பத்தூர்.

★ விநாயகர் செய்த குறும்பினால் மகாவிஷ்ணு 'தோப்புக்கரணம்' போட்டு சக்கரத்தைத் திரும்பப் பெற முடிந்தது என்கிற விவரத்துடன் 'தோப்புக்கரணம்' தோன்ற முதல் காரணமாயிருந்தவர் மகாவிஷ்ணுதான் என்பதையும் விளக்கியுள்ளது அருமையாக இருக்கிறது.

— திருமதி இந்திரா ஆராவமுதன்,
ஸ்ரீரங்கம்.

★ 'காரையம்பதியும் தமிழ்ப் பண்பாடும்' என்ற என் கட்டுரையில் (பக்கம் 69, பத்தி 1, வரி 7இல்) 'தெற்கே' என்பது 'வடக்கே' என்று இருத்தல் வேண்டும். திருத்தி வாசிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

— புதுவை நாராயணசாமி,
புதுச்சேரி.

உண்டு! எனினும் பூமியின் ஆகாயவெளி காற்றும் தூசுகளும் நிரம்பி உள்ளதால் இவற்றில் உராய்ந்து அவை தீப்பற்றித் தூளாகிவிடும். வானத்தில் பல சமயம் எரி நட்சத்திரங்களைப் பார்க்கிறீர்கள்! அது அவைதான்! எனினும் வலுவான வால் நட்சத்திரம், கிரகங்களின் ஈர்ப்புகளைத் தாண்டி பூமி மீது விழுவதால், பெரும் ஆபத்துதான்.

13. வியாழன் மீது விழும் வால் நட்சத்திரம் என்ன விளைவு உண்டாக்கும்?

வால் நட்சத்திரம் ஒரு நீண்ட வண்டித்தொடர் என்று வைத்துக் கொள்ளுங்கள். இவை அப்படியே பக்கவாட்டில் வியாழனில் புதையப்போகிறது என்று கூறுகிறார்கள். வியாழன் ஆவிநிறைந்த கிரகம்! அந்த வால் நட்சத்திரம் இதனுள் முழுவதுமே பிணையப் பல மாதங்கள் ஆகும் என்கின்றனர். வியாழனில் இதன் காரணமாக ஏதாவது மாற்றம் நிகழ்வதானால் அதை ஆகஸ்ட் மாதத்தில் நாம் நேராக டெலஸ்கோப்பின் மூலம் பார்க்க முடியும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.



அன்பர் அனுபவம் - I

'கர்மயோகி'

அன்பர்கள் எழுதும் கடிதங்கள் ஏராள மானவை. அவற்றுள் சிலவற்றை ஆண்டு தோறும் வெளியிடுவது வழக்கம். பெரும் பாலும் கடிதங்கள் விளக்கமாகவே இருப்ப தால் மேலும் விவரம் எழுதவேண்டியிருக்கிறது.

பிரார்த்தனை பலித்தது என்ற கடிதங் களை இங்கு பிரசுரிக்கின்றேன். பிரார்த்தனை நம்பிக்கையால் பலிக்கும், பக்தியால் பலிக்கும், முயற்சியாலும் பலிக்கும். குறையாக விட்டுப் போனதை நிறைவு செய்தவுடன் பலிக்கும், காணிக்கையால் மட்டும் பலித்தவையுண்டு. அம்மா என்றழைக்கும் மனமுடையவருக்கு அழைப்பால் பலிக்கும். அமுது புரள்வதாலும் பலித்ததுண்டு. சொல்பவர் மீது நம்பிக்கை இருப்பதால் பலித்தவை சில. சமாதி தரிசனத் தால் பலிக்கும், தியானத்தால் பலிக்கும். பலிக்கும் முறைகள் பல. பலிப்பது ஒரே காரணத்தால், அன்னையின் அருளால். ஒரு வரியானாலும் உருக்கமானவற்றிலிருந்து அந்த ஒரு வரியையும் எழுதுகிறேன்.

1. "ஏற்கெனவே நான் எழுதியபடி கடந்த எட் டரை வருடமாக காது வழியால் தொந்தரவு அனுபவித்தேன். கடந்த சில நாள்களாக காதில் நீர் வடிவது பெரும்பாலும் குறைந்து விட்டது".

2. "அன்னையிடம் முறையிட்டு தங்களுக்கு கடிதமும் அன்னைக்குக் காணிக்கையும் அனுப்பிய உடனே படுத்த படுக்கையாய் இருந்த என் மனைவி எழுந்து நடமாடத் தொடங்கிவிட்டாள். அன்னையின் கரு ணையே கருணை!".

3. "என் சகோதரியின் திருமணம் முடிவாயிற்று என்ற சந்தோஷச் செய்தியை எழுதுகிறேன். பெற்றோர் மனக்கவலையும் பாரமுழு இறங் கிற்று. மாப்பிள்ளை நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்".

4. "அன்னையின் அருளால் நான் வேண்டிய படியே என் மாமனாரைப் பார்த்துக் கொள்ள ஆள்வந்து, அவர் உடல்நிலை சற்றே சரியான பின், எனக்கு மேற்படிப்பு கிடைத்துள்ளது".

5. "அன்னையே, என் கண்கண்ட தெய்வமே! என் துன்பங்களிலிருந்தும் துயரங்களிலிருந் தும் என்னைத் தூக்கிவிட்ட தெய்வமே! வணக்கம். முடிவடைய முடியாத பல பிரச்னைகளிலிருந்து முடிவுகளை ஏற்படுத் தினாய். தாயே! என் குடும்பத்தலைவரி லிருந்து தன் குழந்தைகட்கும் மனைவிக்கும் எப்படி பாதுகாப்பாக வருங்காலத்திற்கு ஏற்பாடு செய்வார்களோ, அதுபோல் செய்திருக்கின்றாயே. இந்தக் குறைகளை 6 மாதத்திற்கு முன் உனக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருந்தேன். என் மேல் இரக் கமும் பரிவும் கொண்டு மனிதர்கள் எவ்வளவு முயன்றும் சாதிக்க முடியாத உதவிகளைச் செய்துள்ளாய் தாயே!"

6. "அன்புள்ள அம்மா! மகளின் குறைகளைத் தாய் அறியாததா? இல்லை. எந்தச் சமயத் தில் எந்த இடர் ஏற்பட்டாலும் அன்னையே என்னைக் காப்பாற்று என்று அழைத்தால் போதும், அந்த இடர் இன்றுவரை நீங்கி வருகிறது. இந்த நம்பிக்கை என்னளவி லில்லாமல் எனக்குத் தெரிந்தவர்கள் உறவினர்கள் யாருமே தனக்குத் தீர்க்க முடியாத பிரச்னை என்று என்னிடம் கூறும் பொழுது என் அன்னையைப் பிரார்த்தி யுங்கள், உங்கள் துயர் துடைப்பார் என்று கூறி, கருணை மனு எழுதும் முகவரி அளிப்பதுடன் காணிக்கையும் அனுப்பும் படி கூறுவேன். இவ்வளவு ஏன்? என் கணவர் படுத்த படுக்கையாக ஆஸ்பத்திரி யில் 2 மாத காலம் ஆகாரம், நடமாட்டம் இல்லாமலிருந்தபொழுது, உன்னிடம் மன முருகி அவர் சகோதரர் பிரார்த்தனை செய்தபொழுது, இதோ நான் இருக்கிறேன் எனக் கூறி என் கண்முன் அவரை ஆகாரம் தானே விரும்பிச் சாப்பிட வைத்ததுடன் எழுந்து நடமாடவும் செய்தாய்".

7. "தங்களுக்கு என்னை நன்றாகவே தெரியும். ஒரு பெரும் மகிழ்ச்சியான செய்தியை தங்களுடன் பகிர்ந்து கொள்ள எழுதுகிறேன். எனக்கு அன்னையின் அருளால் கணிசமான சம்பள உயர்வு கிடைத்துள்ளது. சுமார் ரூபாய் 300க்கு மேல். நான் இதுநாள் வரை எதிர்பார்க்காத ஒன்று... அன்னையின் அருளால் அப்போதைக்கு அப்போது ஏற் படும் பலன்களையும், எதிர்பாராமல் நடக்கும் காரியங்களையும் சொல்லித்தான் பகிர்ந்து கொள்ள வேணும்".

8. "நாங்கள் ஸ்ரீ அன்னையை ஏற்றுக் கொண்டதும் அன்னையிடம் வேண்டிக் கொண்ட கோரிக்கைகள் விரைவில் நடந்தேறின".

9. "அன்னையின் குழந்தை வணக்கமாய் எழுதுவது. என் தங்கையின் கல்யாணத்திற்கு, பணம் கஷ்டமாயிருக்கிறதாய் எழுதியிருந்தேன். நீங்கள் பணம் கிடைக்கும் என்று எழுதியிருந்தீர்கள். அதேபோல் அன்னையின் அருளால் ஒரே நாளில் பணத்தைப் புரட்டி கல்யாணம் அன்னையின் அருளால் முடிந்தது... அருள் எங்கள் வீட்டிற்குப் பரிபூரணமாகக் கிடைத்து மூன்று தங்கைகளுக்குத் திருமணம், தம்பிக்கு வேலை, எந்தப் பொறுப்பும் இல்லாத என் தந்தையாருக்கு இப்பொழுது ஒரு கடையில் உட்கார்ந்து வியாபாரம் செய்யும் அளவுக்கு சக்தி ஆகியவற்றை அன்னை அருள் புரிந்திருக்கிறார்.

10. "இதைத் தவிர ஓர் அதிசயம் என்னவென்றால், செப்டம்பர் 7 ஆம் தேதி எங்கள் புதுக்கோட்டை அருகில் ஒரு கல்யாணத்திற்கு எங்கள் குடும்பத்தோடு சென்றிருந்தேன். நான் நெக்லஸ் ஒன்றை அணிந்து கொண்டிருந்தேன். நான் அந்தக் கல்யாண வீட்டிற்கு வரும்பொழுது அது கீழே விழுந்து விட்டது. சிறிது நேரம் கழித்துத்தான் நான் கவனித்து, தேடினேன். அது கிடைக்கவில்லை. நான் அன்னையிடம் மனம் உருகி வேண்டிக்கொண்டேன். பிறகு 5 மணி நேரம் கழித்து ஊருக்குக் கிளம்பும் சமயத்தில் ரூபாய் 20,000 மதிப்புள்ள அந்த நகை ரோடில் யாரோ கண்டெடுத்ததாக, அந்தக் கல்யாண வீட்டில் ஒருவர் கொண்டு வந்து கொடுத்தார்".

11. "அன்னையின் அருளால் இப்போது குடும்பத்தில் அமைதியும், கணவன் - மனைவியிடையே சுமுகமான நல்லுறவும் நிலவுகின்றன. இந்த இனிய சூழ்நிலை நிலைத்து நிற்க அன்னையின் அருளை வேண்டுகிறேன்".

12. "அன்னையின் அருளால் பணவரவு திருப்திகரமாயுள்ளது".

13. "அன்னையின் அருளால் எனது குடும்பத்தில் எல்லாம் இனிதாக நடைபெறுகிறது... மூத்த பெண், சொந்த வீட்டுடன் சௌக்கியமாக இருக்கிறாள். இரண்டாவது பெண், பல பிரச்னைகளிலிருந்து விடுபட்டு இப்பொழுது கணவனுடன் சௌக்கியமாக இருக்கிறாள். என்னுடைய 5 குழந்தைகளும் எதற்கும் எப்பொழுதும் அன்னையின் அருளைப் பெறுகின்றனர்".

14. "எனது மகன் திருமணத்திற்குப் பிறகு குடும்பத்தில் சில பல சிக்கல்கள் ஏற்பட்டும் வீட்டில் நாங்கள் யாவரும் 'கையறு நிலை' என்பார்களே அப்படி எந்தப் பற்றுக்கோடும் இன்றிப் பரிதவித்தது இன்று நினைத்தாலும் சங்கடப்படுகிறது. ஆனால் அந்நிலையில்தான் அன்னையை முதலில் வணங்க ஆரம்பித்தேன். அனுதினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அன்னையைப் பிரார்த்தித்துக் கொண்டேன். 2 அல்லது 3 நாள்கள் என நினைக்கிறேன். துன்பம் மேலீட்டால் அழுது ஆர்ப்பரித்து அன்னையே சரண் என்று பிரார்த்தித்த பொழுது திடீரென மனதில் ஓர் ஒளி - மிகவும் பிரகாசமான ஒளி தோன்றியது. 1 நிமிஷம் அல்லது அதற்குக் குறைந்த நேரம்தான் அவ்வொளி என் மனதில் கண்டேன். உடல் லேசாகி, மனம் சந்தோஷத்தால் ஆர்ப்பரித்து, மிதப்பதுபோல் சொல்லொணா சந்தோஷம் ஏற்பட்டது. எல்லாமே சில நிமிஷங்கள்தான் இருக்கும். அதன்பின் மனநிலை சாதாரண நிலைக்கு வந்து விட்டது. அதன்பின் நாங்கள் எதிர்பார்த்ததற்கும் மேலாக பல மாற்றங்கள் ஏற்பட்டன. மகனின் நிலையில் மாற்றம் ஏற்பட்டது. அதுமட்டுமல்ல. எனக்கு 45 வயது நிறைவேறப் போகிறது. நிம்மதி என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கும் அளவுக்கு எப்பொழுதும் ஏதோ ஒரு பாரம் அழுத்திக் கொண்டிருக்கும். ஆனால் இப்பொழுது அன்னைமீது முழு நம்பிக்கை வைத்து, அன்னையிடம் பாரத்தை விட்டு, எங்கள் முயற்சி என்பது எதில் உண்டோ அவற்றை எங்களது திறமைக்கு ஏற்ப செயல்பட்டு வருகிறோம். வருகிறோம் என்று ஏன் எழுதுகிறேன் என்றால் அதன்பின் என் மகள், என் மகன், என் கணவர் யாவருமே அன்னை பக்தர்கள்தாம்".

15. "அன்னையை வணங்கி வருகிறோம். என்னுடைய அண்ணனுக்கு அதுவரை ஒரு நல்ல வேலை கிடைக்காமலிருந்தது. தற்காலிகமாக வேலை செய்து வந்தான். அன்னையிடம் முறையிட்டு வேண்டிக் கொண்டதன் விளைவாக மூன்று மாதம் கழித்தவுடன் அவனுக்கு ONGCஇல் Junior Engineer வேலைக்கு interview வந்தது. அன்னையின் அருளால் அவனுக்கு அவ் வேலை கிடைத்தது".

16. "என்னுடைய உயிர்த்தோழியும், என் இன்ப துன்பங்களிலெல்லாம் பங்கு கொண்டவளு

மான ஒருத்தியின் கணவனுக்கு திடீரென்று மார்வலி என்று சென்னை ஆழ்வார்ப்பேட்டையிலுள்ள Trinity acute clinicகில் 24 ஆம் தேதி சேர்த்தார்கள். அன்று இரவு அவருடைய நிலை மோசமானது. தோழி அன்னையையே பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். Critical Condition நீங்கிவிட்டது".

17. "ஏழு மாதங்களுக்கு முன் ஒரு நண்பருக்காக - அவர் கால் விரலில் புண் வந்து அழுகி விரல்களை Operate செய்ய வேண்டுமென்ற நிலை வந்தபோது - அன்னையிடம் பிரார்த்தனை செய்து Blessing packet வேண்டுமெனப் பிரார்த்தித்தேன். Blessing packet வந்த தேதிதான் ஆபரேஷனுக்குக் குறித்த நாள். Blessing packet வந்தபின் ஆபரேஷன் இல்லாமலே சரியாகி விட்டது".

18. "எங்கள் பெண் புஷ்பாவுக்கு நல்ல இடத்தில் (ஒரு Engineer அல்லது Charted Accountant) திருமணம் ஆகவேண்டும் என்று அன்னையிடம் பிரார்த்தனை செய்து வந்தோம். அது கைகூடி செள. புஷ்பாவுக்கு ஒரு Engineerஉடன் திருமணம் வருகிற நவம்பர் 10 ஆம் தேதி நடக்க இருக்கிறது".

19. "24.9.89 பகல் இரண்டு மணிக்கு அன்னையின் சமாதியைத் தரிசித்துவிட்டு சென்னைக்கு வந்தேன். 5.10.89 முதல் ஒரு பிரபலமான எக்ஸ்போர்ட் கம்பெனியில் வேலை கிடைத்தது".

20. "பெரிய தலைவலியாக இருந்த என் வீட்டுப் பிரச்னை அன்னையின் அருளால் ஒரு வாறாக Settle ஆகிவிட்டது".

21. "5 மாதங்களுக்குப் பின் உங்களுக்கு எழுதுகிறேன். இந்த மாதம் கல்கத்தாவிலிருந்து அன்னைக்குக் காணிக்கை அனுப்பினேன். இன்னும் பிரசாதம் வரவில்லை. அன்னையின் அருளால் சென்னைக்கு மாற்றல் கிடைத்து என் குடும்பத்துடன் சேர்ந்து கொண்டேன்".

22. "ஸ்ரீ அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் உள்ள படம் ஒன்றை சுமார் ஒரு மாதத்திற்கு முன் என் மருமகள் கொடுத்தாள். அதை எங்கள் பூஜையில் வைத்துள்ளோம். எனக்கும் முடிந்த படி ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரை நினைத்து முடிந்த அளவு தியானம் செய்கிறோம். அதிலிருந்து நல்ல நாள்கள் ஆரம்பித்துவிட்டன என்ற நம்பிக்கை எனக்கு மிகவும் வந்துவிட்டது. மன அமைதி, நல்ல காரியங்கள் முதலியவை கிடைத்து வருகின்றன".

காஞ்சி மாமுனிவர் தரிசன அனுபவங்கள்



இவ்வருடம் மே 25-ஆம் தேதி வைகாசி அனுஷத்தன்று ஸ்ரீ பெரியவாளின் திருவ வதாரத் திருநாள் - 101 வது ஜயந்தி... காஞ்சி ஸ்ரீமடத்திலும் உலகெங்கும் கோடானுகோடி பக்தர்களால் அருட்பணிகட்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு தூய நல்வாழ்வு நடத்தும் சங்கல் பத்துடன் ஸ்மரணாஞ்சலியாக அனுஷ்டிக்கப்பட்டது.

37 ஆண்டுகளாக- 1957 முதல் 1993 வரை முற்பிறப்பின் நற் பயனால் முனிபுங்கவரை அடிக் கடி தரிசிக்கும் பெறற்கரிய பேறு பெற்ற என் நினைவு கடந்த காலப் பாதையில் 11 ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றது.

ஸ்ரீபெரியவாளின் 90-ஆவது ஜயந்தி 1983 மே 26-ஆம் தேதி விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. அப்போது தவசிரேஷ்டர் ஆந்திர மாநிலத்தில் மெஹ்பூப் நகரில் எழுந்தருளியிருந்தார்கள். முன் தினம் மாலையே நான் அங்கு சென்று சேர்ந்திருந்தேன். என்னுடன் என் 2-ஆவது புதல்வி சௌ. உமா திரிபுரசுந்தரி, அவ ளது கணவர் சிரஞ்சீவி சந்த்ர சேகர், என் நேர்முத்த சகோதரர் ஸ்ரீநிவாசன் ஆகியோர் வந்திருந் தனர். பத்ரிநாத் க்ஷேத்ரத்தில் பிரதிஷ்டை செய்வதற்கான ஸ்ரீசங்கரபகவத் பாதரின் தந்த விக்ரஹத்திற்கு மாதிரியாக ஸ்ரீ பெரியவாளின் அங்கீகாரத்திற் காக சந்தன விக் ரஹமொன்றை அன்று சமர்ப்பிக்கும் பாக்கியம் கிடைத்திருக்கிறது. ஆர்வத்தோடு அதை அங்கீகரித்து தான் அமர் திருந்த சிறு முற்றத்தின் மாடப் பிறையில் கொலுவிருத்தினார் மறுநாள் (மே 26) திருவவதாரத் திருநாளன்று திருப்பள்ளி எழுச்சித் திருக்கோலம் காண சுப்ரபாத தரிசனத்திற்காக அதிகாலை 3.00 மணி முதலே பக்தர்கள் குழுமி யிருந்தனர்.

இருள் பிரியும் முன் துயி லெழுந்து அமர்ந்து அபயகர முயர்த்தி அனுக்ரஹித்த அருள் வேந்தருக்கு சுமங்கலிகள் தீப ஆரத்தி எடுத்தனர். கற்பூரச் சுடரொளியில், நெய்விளக்குகளின் பொன்நிற ஒளியில், புருஷோத்த மனின் புனிதமேனி பவக்கடலி லிருந்து மீண்டு கரைசேர வழி காட்டும் கலங்கரையாய்ப் பிர காசித்தது. ஒவ்வோர் ஆண்டும் போல் நான் அர்ப்பணித்த கவின் மிகுந்த ஏலக்காய் மாலையை (ஏலக்காய் வாரியத் தலைவனாக அண்ணல் அருளால் ஆன 1970 -முதல் இது வழக்கம்) ஸ்ரீ சங்க ரரின் சந்தன விக்ரஹத்திற்கு அணிவித்து பக்தி ரசானுபவத் தில் லயித்து நின்றார் குருநாதன்.

முற்பகல் 11.30 வரை அலை மோதும் ஜனசமுத்திரம், அதன் பின் அனுஷ்டானங்களுக்காக - ஆகாரத்திற்காக - அலுவலகளுக் காக என்று மக்கள் பிரிந்து செல்லவே, கூட்டம் வெகுவாகக் குறைந்திருந்தது. ஞால மகாசக்தி பெற்ற ஞானமகன், தான் வீற் றிருந்த முற்றத்திலிருந்து இறங்கி அருகிலிருந்த ஒரு மரத்தின் நிழலில் வந்து அமர்ந்தார்கள். உடன் வந்து பக்கத்தில் நின்ற

டி.வி. சுவாமிநாதன்
ஐ.ஏ.எஸ்., (ஓய்வு)

ன்னிடம், "இது என்ன மரம் தெரியுமா?" என்று கேட்டார்கள். வழக்கம்போல், "பெரியவர் சொல்லித் தெரிஞ்சுக்கறேன்" ன்றேன். வினயத்தினால் ட்டுமல்ல, அறியாமையினா லுமே இந்தப் பதில். கருணா மூர்த்தி தன்னிகரற்ற தன் குரலில் சொல்லலானார்:

"இது அங்கோல விருக்ஷம். தமிழ்லே ஏறழிஞ்சில்னு சொல் லுவா. இதுலே விசேஷம் இந்த மரத்தோட விதையெல்லாம் கீழே விழுந்ததும் மெல்ல நகர்ந்து மேலே ஏறி மரத்துப் பட்டையிலே ஒட்டிண்டுடும். பகவத்பாதாள் சிவானந்த லஹரியிலே இதைப் பத்திச் சொல்லியிருக்கா."

இந்த இடத்தில் அருள் மொழியை நிறுத்தி அருகில் நின்ற கண்ணனிடம் (தனது 12-ஆவது பிராயம் முதலே கண் காணும் தெய்வத்தின் பணி விடையிலும் அவரது அருள் ஆக்ஞைகளை நிறைவேற்று வதிலுமே வாழ்வை அர்ப்பணித் துக் கொண்ட புண்ணியசாலி) 'சிவானந்த லஹரி' பிரதியைக் கொண்டு வரப்பணித்தார்.

ஓரிரு நிமிடங்களில் வித் வத்தும் வயதும் முதிர்ந்த ஒருவர் (பெயர் நினைவில்லை) முகாம் அலுவலகத்திலிருந்து புத்தகத் துடன் வந்தார்.

"இதுலே ஆச்சார்யாள் அங் கோலம் பத்திச் சொல்லியிருக்கிற ஸ்லோகத்தைப் படி" என்று ஸ்ரீ பெரியவாள் கூறினார்.

அங்கோலம் நிஜபீஜஸந்ததி
அயஸ்காந்தோபலம் ஸூசிகா
ஸாத்வீ நைஜவிபும் லதா க்ஷிதிருஹம்
ஸிந்துஸ் ஸரித் வல்லபம்
ப்ராப்னோதீஹ யதா ததா பசுபதேः
பாதாரவிந்த த்வயம்
சேதோவ்ருத்தி ருபேத்ய திஷ்டதி
ஸதா ஸா பக்திரித் யுச்யதே

ஸ்லோகத்தை ஆழ்ந்த கவனத் துடன் லயித்துக் கேட்டபின் அருளாளர் தொடர்ந்தார்:

"பகவத் பாதாள் பக்தியின் லக்ஷணத்தை இதுலே விவரிச் சிருக்கா. இந்த அங்கோல மரத் தோட விதை கீழே விழுந்தாலும் மறுபடி மேலே ஏறி பட்டை யோடு ஒட்டிண்டு கொஞ்ச நாள்லே மரமாயிடறது. அதே மாதிரி பரமாத்மாவிடத்தி லிருந்து ஜனிக்கிற ஜீவாத்மாக் களை, கடைசிலே பரமாத்மாவி லேயே ஐக்கியமாகச் செய்யறது பக்தி. இரும்பு ஊசி காந்தத்துலே ஒட்டிண்டுடறது. தர்மபத்தினி தன்னோட பர்த்தாவையே சேர்ந் திருக்கா. கொடி ஆதாரத்துக்கு மரத்தைச் சுத்திண்டுடும், நதி பிரவகிச்சு சமுத்திரத்திலே சங் கமம் ஆயிடறது. அதைப்போல மனசு பரமேஸ்வரனோட திரு வடிகளை நாடி எப்பவும் சஞ் சலமில்லாம நிலைச்சிருக்கிறது தான் பக்தின்னு ஆசார்யாள் அற்புதமாகச் சொல்லியிருக்கா."

காருண்ய லாவண்யமும் சாந்த ஞானமும் அருள் எனும் அழியா அழகும் விகசிக்கச் சிரித்துவிட்டு முனிபுங்கவர் அனுஷ்டானத்தைத் தொடங் கினார்.

♧ ♧ ♧

கலைமகள் காரியாலயத்தார் வெளியிட்டிருக்கும் "ஆச்சாரிய சுவாமிகள் உபந்நியாசங்க"ளில் இதே பொருள் பற்றி ஸ்ரீபெரிய வாள் பேசியிருப்பதைப் பிறகு உய்த்துணர நேர்ந்தது. அதில் ஒரு பகுதி:

"இந்த ச்லோகத்தில் ஐந்து திருஷ்டாந்தங்களைச் சொல்லி, பக்தி பக்தி என்றால் பக்தனு டைய உள்ளம் வேறு எந்தப் பிர யோஜனத்தையும் கருதாது சதா பரமாத்ம ஸ்வரூபத்தையே அணைந்து கொள்வதாக கவிந்து கொள்வதாக இருக்க வேண்டும் என்று லட்சணம் சொல்கி றார்கள். நமக்குத் தனி ஸ்வரூபம் இல்லை. எல்லாம் பரமாத்ம ஸ்வரூபந்தான். பிரிந்து இருக்கிற வரையில் சாந்தி கிடையாது. அங்கே கலந்தால்தான் சாந்தி; ஆனந்தம். நாம் என்பதே இல்லை. எல்லாம் அந்தப் பரமாத்மா ஸ்வரூபந்தான்."

♧ ♧ ♧

வடமொழியிலுள்ள ஆத்மிக நூல்களின் ஞான ஒளியைப் பரப்புவதில் அபரிமித சேவை செய்துள்ள "அண்ணா" அவர் கள் தனது சிவானந்த லஹரி பாஷ்யத்தில் (ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் பிரசுரம்) இந்த 61-ஆவது ஸ்லோகத்திற்கு பதம் பதமாகப் பொருள் விளக்கியிருக்கிறார்கள். நன்றியுடன் அதை எடுத்தாள் கிறேன்;

"(அங்கோலம்) ஏறழிஞ்சில் எனப் பெயர் பெற்ற மரத்தை (நிஜ) அதனுடைய (பீஜ ஸந்ததி) விதை வரிசைகளும், (அயஸ் காந்தோபலம்) இரும்புக் காந்தக் கல்லை (ஸூசிகா) ஊசியும்; (நைஜ) தன்னுடைய (விபும்) நாயகனை (ஸாத்வீ) பதிவிரதையான ஸ்த்ரீ யும்; (க்ஷிதிருஹம்) மரத்தை (லதா) கொடியும்; (ஸரித்வல்லபம்) ஸமுத்திரத்தை (ஸிந்து) நதியும்; (யதா) எவ்வாறு (இஹ) இவ் வுலகில் (ப்ராப்னோதி) ஒவ் வொன்றும் நாடி அடை கின்றதோ (ததா) அவ்வாறு (சேதோவ்ருத்தி) மனத்தின் நாட்டம் (பசுபதே) பரமசிவனு டைய (பாதாரவிந்தத்வயம்) திரு வடித் தாமரைகளிரண்டையும் (உபேத்ய) அடைந்து (ஸதா) எப் போதும் (நிஷ்ட்டதி) நிலைபெற் றிருந்தால் (ஸா) அதுதான் (பக்தி:இதி) பக்தி என்று (உச்யதே) கூறப்படும்.

♧ ♧ ♧

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் அருள்வாக்கை யும், "அண்ணா" அடிக்குறிப்பில் சேர்த்திருக்கிறார்:

"ஒரு தாய்க்குத் தன் குழந்தை யிடமும், ஒரு பதிவிரதைக்குத் தன் கணவனிடமும், ஓர் உலோபிக் குத் தான் சேர்த்து வைத்த பணத்தினிடமும் உள்ள ஆர்வம் எல்லாம் ஒன்று சேர்ந்தாற் போன் றது பக்தனுக்கு, பகவானிடம் உள்ள பிரேமை.

நன்றி : கலைமகள்
காரியாலயம்
ஸ்ரீ ராமகிருஷ்ணமடம்.

தமிழில் தவறுகளை அறிவோம்

டாக்டர் தி. முத்து கண்ணப்பர்

அலுவலகங்களில் இப்போது வழங்கப்பட்டுவரும் தமிழ்ச் சொற்றொடர்களும் அவற்றின் முறையான - சரியான தமிழாக்கமும்

இனி, அரசு அலுவலகங்களில் இப்பொழுது தமிழில் எழுதப்பட்டுவரும் சொற்றொடர்கள் சிலவற்றையும், அவை தமிழ் முறைப்படி - மரபுப்படி எவ்வாறு எழுதப்படல் வேண்டும் என்பதையும் அறிவோம்.

இவற்றை அறிவதற்கு முன்னர் வியங்கோள் வினைமுற்றுப் பற்றித் தெரிந்துகொள்வது அவசியமானது.

வியங்கோள் வினைமுற்று

பல மொழிகளில் இல்லாத சிறப்புமிக்க வினைமுற்றுத் தமிழில் உள்ள இவ் வியங்கோள் வினைமுற்று.

வினைமுற்று

வியங்கோள் வினைமுற்று, பொதுவாக மரியாதையோடு, அன்போடு உத்தரவிடுதல், கேட்டல், வேண்டுதல், அறிவித்தல் முதலிய பொருள்களில் வரும். 'ஏவல் வினைமுற்று' என்றும் மற்றோர் வினைமுற்று உள்ளது. அது கட்டளை இடும் பொருளில் (அதிகாரத் தோரணையில்) வரும். அது முன்னிலையில் மட்டும்தான் வரும். ஆனால், வியங்கோள் வினைமுற்று தன்மை இடம், முன்னிலை இடம், படர்க்கை இடம் ஆகிய மூன்று இடங்களுக்கும் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின்பால் ஆகிய ஐந்து பால்களுக்கும் பொதுவாக வரும்.

ஆங்கிலத்தில் 'please', 'kindly' எனவரும் மரியாதைக்கும் அன்புக்கும் உரிய பொருள்களை உள்ளடக்கியது இந்த வியங்கோள் வினைமுற்று.

(எ-டு) வருக, செய்க, நிற்க, தருக, எழுதுக - இப்படி வருவன வியங்கோள் வினைமுற்றுகள். ஆனால் ஏவல் வினைமுற்று, வா, செய், நில், தா, எழுது என இவ்வாறு கட்டளை இடும் பொருளில் வரும். வியங்கோள் வினைமுற்றில் வருக, செய்க, நிற்க, தருக, எழுதுக என்பன முறையே ஆங்கிலத்தில் please/kindly come; please/kindly do; please/kindly stand or stop; please/kindly give; please/kindly write என வழங்கப் பெறும்.

அலுவலகங்களில் அலுவலர்கள், அதிகாரிகள் முதலியோர் தம் உத்தரவுகள்; அறிக்கைகள், குறிப்புகள் முதலியவற்றில் இப்போது எழுதிவரும் ஆங்கில முறையிலான உத்தரவு, அறிக்கை, குறிப்பு முதலியனவற்றை மாற்றி இவ்வியங்கோள் வினைமுற்றைப் பயன்படுத்தித் தமிழ் முறையில், தமிழ் மரபுப்படி எழுதினால் மிகச் சிறப்பாகவும், பொருத்தமாகவும் இருக்கும். ஆங்கில முறை வாக்கியங்கள் பெரும்பாலும் படர்க்கையில் அமைந்திருக்கும். ஆனால் தமிழ்முறை பொதுவாக முன்னிலையில் அமைந்திருக்கும்.

இவ்வியங்கோள் வினைமுற்றின் விகுதிகளை முதலில் தெரிந்துகொள்ளல் வேண்டும். அவை :-

வியங்கோள் விகுதி : எடுத்துக்காட்டு

அ - வாழிய (வாழி + அ)

க - வாழ்க (வாழ் + க)

அல் - அஞ்சல் (அஞ்சு + அல்)

இய - வாழிய (வாழ் + இய)

இயர் - வாழியர் (வாழ் + இயர்)

இ - வாழி (வாழ் + இ)

உம் - எழுதவும் (எழுத + உம்)

வேண்டும் (வேண்டு + உம்)

இவற்றுள் 'க', 'உம்' இவை மிகமிக முக்கியமானவை. மிகுதியாகப் பயன்படுத்தக் கூடியவை.

இனி, பழைய முறைப்படி (ஆங்கில முறைப்படி) அலுவலகங்களில் எழுதப்பட்டு வரும் சில சொற்றொடர்களையும், தமிழ் மரபுப்படி அவை எப்படி எழுதப்படலாம் என்பதையும் சில எடுத்துக்காட்டுகள் மூலம் காண்போம்.

பின்வரும் வாக்கியங்களும், சொற்றொடர்களும், சில அலுவலகக் குறிப்புகள், சுற்றறிக்கைகள், உத்தரவுகள் முதலியவற்றினின்றும் திரட்டப்பட்டவை. இவையனைத்தும் ஆங்கில முறையில் எழுதப்பட்டவை.

1) விண்ணப்பம் அனுப்புமாறு அறிவிக்கப் படுகிறது

2) என்று எதிர்பார்க்கப்படுகிறது/நம்பப் படுகிறது

3) கப்பல் மூழ்கிவிட்டதாக அஞ்சப்படுகிறது

4) மாநிலங்கள் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளன.

இவை ஆங்கிலத்தில் முறையே (1) .... (applicants) are informed to send their application .... (2) ..... is expected/believed .... (3) .... it is feared that the ship had sunk (4) .... States have been requested .... என்று எழுதப்படும்.

இவற்றைத் தமிழ் முறைப்படி பின்வருமாறு எழுதலாம்:-

1) விண்ணப்பம் செய்க/அனுப்புக/அனுப்ப வேண்டும் இவற்றில் 'க', 'உம்' ஆகியன வியங் கோள் வினைமுற்று விகுதிகள்.

2) என்று எதிர்பார்க்கிறோம்/நம்புகிறோம் - என்பதே போதும்.

3) கப்பல் மூழ்கி விட்டிருக்கும் என்னும் ஐயம்/கவலை/அச்சம் உள்ளது.

4) மாநிலங்களுக்கு அறிவித்திருக்கிறோம்/ மாநிலங்களைக் கேட்டுக் கொள்கிறோம்/ மாநிலங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

என உரியவாறு எழுதலாம். அதுதான் தமிழ் மரபு.

இத்தகைய உத்தரவுகளை (ஆணை களையோ, குறிப்புகளையோ, அறிவிப்பு களையோ) மேலதிகாரிகள் தமக்குக் கீழுள்ள அலுவலாளர்களுக்கு விடுப்பதாயின் 'செய்க', 'அனுப்புக', 'அனுப்புதல் வேண்டும்', 'இது அரசின் ஆணை', 'விரைவில் செயல்படுத்துக', 'காலதாமதத்தைத் தவிர்க்கவும்' என்றெல்லாம் வியங்கோள் வினைமுற்று விகுதியைப் பயன் படுத்தி எழுதினால் தமிழ் முறைப்படி மிகப் பொருத்தமாய் இருக்கும்.

அறிவிக்கப்படுகிறது, கேட்டுக் கொள்ளப் படுகிறது, அஞ்சப்படுகிறது - என்பன சரியான - முறையான வாக்கிய அமைப்பில் ஆனவை அல்ல. அவை ஆங்கில முறைப்படியானவை.

பணியாளர்கள், சற்றுக் கீழ்ப்பதவியிலுள்ள வர்கள் தங்கள் உயர் அதிகாரிகளுக்கும், மேல் நிலையாளர்களுக்கும் எழுதவேண்டுமானால் "...... இவற்றை அன்புகூர்ந்து கவனித்து உரிய ஆணையிடுமாறு/உத்தரயிடுமாறு வேண்டு கிறேன்"; "..... தங்கள் மேலான கவனத்துக்குக் கொண்டுவருகிறேன்...."; "தங்கள் பார்வைக்கு அனுப்புகிறேன்"; "உரிய உத்தரவை அன்போடு எதிர்பார்க்கிறேன்"; "தங்கள் பார்வைக்கு/ கவனத்துக்குப் பணிந்து அனுப்புகிறேன்"; "உரியன செய்யவேண்டுகிறேன்" - இவ்வாறு எழுதுவதுதான் தமிழ் முறை-மரபு.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் அலுவலாளர்களும் அதிகாரிகளும், ஆங்கி லத்தில் சிந்தித்துத் தமிழில் எழுதுவதை விடுத்துச் செய்திகளைச் சொந்தமாகவே சிந் தித்துத் தமிழில் எழுதினால் இந்தச் சிக்கல்கள் வாரா.

இவ்வாறே, ஆங்கில முறைப்படி எழுதப் படும் சொற்றொடர்கள் இன்னும் சிலவற்றையும் அவற்றைத் தமிழ் முறைப்படி எப்படி எழுத லாம் என்பதையும் காண்போம்.

இவையும் சில அலுவலகக் குறிப்பேடு களிலிருந்து திரட்டப்பட்டவை.

ஆங்கில முறை

1) இவ்வறிவுரைகளை அனைவரும் தவறாது பின்பற்ற வேண்டுமெனவும் அறிவிக்கப் படுகிறது.

(இவ்வாக்கிய அமைப்பே பிழையானது. இதில் எது எழுவாய்?)

தமிழ் முறை

இவ்வறிவுரைகளை அனைவரும் தவறாது பின் பற்றல்வேண்டும்.

இவ்வறிக்கைகளை அனைவரும் தவறாது பின்பற்றுக/பின்பற்றவும்.

ஆ.மு.

2) தலைவர்கள்/பணியாளர்கள் வேண்டப் படுகின்றனர்.

இவ்வாக்கியத்தைப் பிரித்துப் படித்தால் 'தலைவர்கள்/பணியாளர்கள் (செய்யுமாறு மேற் கொள்ளுமாறு/செயல்படுத்துமாறு) எங்களால் வேண்டப்படுகின்றனர்', எனவாகும். எதற்கு இப்படிச் சுற்றி வளைத்துப் படர்க்கையில், ஆங்கில முறையில் எழுதுவது; 'க', 'உம்' என் னும் வியங்கோள் வினைமுற்றுகளில் தகுதி யானவற்றைப் பயன்படுத்தித் தெளிவாகத் தமிழில் எழுதலாமே.

த.மு.

தலைவர்கள்/பணியாளர்கள் செயல்படுத்தல் வேண்டும்.

தலைவர்கள்/பணியாளர்கள் செய்க; செய்யு மாறு வேண்டுகிறேன்.

→

அரிக்க மேடு:-
புதுவை அரியாங்குப்பம் பகுதியில் புதுவை பிரஞ்சு வாழ்மக்கள் பண்டைய கல் வெட்டு, பயன்படுத்திய பொருள்கள் கிடைத்துள்ளன. இது மிகச் சிறப்பாய் புதுவை சரித்திரத்தை உணர உதவு கிறது.

ஜிப்மர்:- புகழ் பெற்ற மருத்துவமனை இங்கு உள்ளது.

எழுத்தாளர்கள்:-
ஸ்ரீ அரவிந்தர், பாரதி, பாரதிதாசனைப் பின்பற்றி இன்றும் புகழ் பெற்ற எழுத்தாளர்கள் வளர்ந்து வருகின்றனர். அவர்களில் கரிசல் காட்டு கி. ராஜநாரா யணன், பிரபஞ்சன் குறிப்பிடத் தக்க வர்கள்

ஆ.மு.

3) .... அலுவலகச் செலவில் கடும் சிக்க னத்தை மேற்கொள்ளுமாறு அனைத்து அலு வலர்கள்/பணியாளர்கள் அறிவிக்கப்படு கின்றனர்.

(கடும் சிக்கனம் – 'கடும்' என்பது பொருத்த மற்ற சொல். 'strict' என்னும் ஆங்கிலச் சொல்லின் நேர்மொழிபெயர்ப்புப் போலும்)

த.மு.

அனைத்து அலுவலர்களும்/பணியாளர்களும் மிகுந்த சிக்கனத்தை மேற்கொள்ளுதல் வேண்டும் – என்பதைக் கவனத்தில் கொள்க.

ஆ.மு.

4) மாநிலக் கணக்காய்வுத் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

த.மு.

மாநிலக் கணக்காய்வுத் தலைவரைக் கேட்டுக் கொள்கிறேன். (அல்லது) மாநிலக் கணக்காய்வுத் தலைவர் (இதனைச்) செய்க; செயல்படுத்துக.

ஆ.மு.

5) அந்த அறிக்கையின் நகல் ஒன்றனை அனுப்பும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

த.மு.

அந்த அறிக்கையின் நகல் ஒன்றனை, மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பிவைக்கவும்/ அனுப்பிவைத்தல் வேண்டும்/அனுப்புக.

ஆ.மு.

6) அனைத்துத் துறைத் தலைவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அறிவுறுத்தப் படுகின்றனர்.

த.மு.

அனைத்துத் துறைத் தலைவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் (இதனை) அறிந்துகொள்க/அறிந்துகொள்ளல்/கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

ஆ.மு.

7) இயக்குநர்களே ஏற்பளிக்கலாம் என ஆணையிடப்பெறுகிறது.

த.மு.

இயக்குநர்களே ஏற்பளித்தல் வேண்டும்/ இயக்குநர்களே ஏற்பளிக்கலாம் என்பது அரசு ஆணை.

ஆ.மு.

8) ..... இத்திட்டத்தை இவ்வாணையிடும் நாளி லிருந்து பெயர் திருத்தம் செய்து ஆணையிடப் படுகிறது.

த.மு.

இத்திட்டம் இவ்வாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து செயலாக்கம் பெறுகிறது. (ஆணை பிறப்பித்தல்/உத்தரவு பிறப்பித்தல் – என்பதை 'ஆணையிட்ட/உத்தரவிட்ட அல்லது 'ஆணை யிடப்பட்ட/உத்தரவிடப்பட்ட' – என்று சொல்வதே போதும். பிறப்பித்தல் வேண்டாமே!)

ஆ.மு.

9) மாவட்ட அதிகாரிகளே, அந்தத் துறை யிலிருந்து ஒய்வுபெறும் அலுவலர்களுக்கு ஓய் வூதியப் பயன்களை வழங்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

த.மு.

மாவட்ட அதிகாரிகளே, அவ்வத்துறையி லிருந்து ஒய்வுபெறும் அலுவலர்களுக்கு ஓய் வூதியப் பயன்களை வழங்கலாம்/வழங்குக/ வழங்க வேண்டும்.

ஆ.மு.

10) முதல் கூட்டம் 5.11.93 அன்று நடைபெறும் என அறிவிக்கப்பெறுகின்றனர்.

த.மு.

முதல்கூட்டம் 5.11.93 அன்று நடைபெறும்.

இவ்வாறு ஆணைகள், குறிப்புகள், செய் திகள் முதலியவற்றில் பொதிந்துள்ள உண்மைப் பொருளை/கருத்தை நன்கு புரிந்துகொண்டு அவற்றைத் தமிழிலேயே சிந்தித்து எழுதினால், நல்ல தமிழில் தெளிவாய் விளக்கும் நிலை இயல்பாகவே வந்துவிடும்.

கண்ணதாசனுக்கு அஞ்சலி

தஞ்சைவாணன்

● சேலம் கவியரசு கண்ணதாசன் சிலை அமைப்பு இசை நிகழ்ச்சியின் இடையே கவிஞர் தஞ்சைவாணன் எழுதிக் கொடுத்த இந்தப் பாடலுக்கு உடனே இசையமைத்து மெல்லிசை மன்னர் எம்.எஸ். விசுவநாதனும், மாஸ்ட்ரோ இளையராஜாவும் பாடினார்கள்.



பாட்டெழுதும் கவிஞர்களும்
பண்ணிசைக்கும் கலைஞர்களும்
எண்ணி எண்ணிப் பார்க்கின்றோம்
எங்களுக்கே புரியவில்லை!

இப்படியோர் பெருங்கவிஞன்
எம்முடனே வாழ்ந்தானா!
எப்பொருளும் மெய்ப் பொருளாய்
இசை உலகில் தந்தானா!

அப்பப்பா! கற்பனைக்குள்
அடங்காது அவன் பாடல்
அவதரித்த திருத்தலமோ
தென்பாண்டிச் சிறு கூடல்

பண்ணிசைக்கும் அனைவருக்கும் பைந்தமிழ் உலகம்
பாமரரும் அறிவுபெறும் பல்கலைக் கழகம்
புண்ணியம்தான் எங்களுக்குப் புகழ்ந்திடும்போது
கண்ணதாசன் பாடல் செவியில் தவழ்ந்திடும்போது.

ஆசைகளை விடவில்லை அனுவளவேனும்
அறநெறியும் விடவில்லை தனைமறந்தேனும்
அறிவியலை விடவில்லை ஒரு சிறிதேனும்
ஆன்மிகம் விடவில்லை துயர்வரும் போதும்!

உலகியலை விடவில்லை அயர்வுறும் போதும்
உரிமைகளை விடவில்லை தளர்வுறும்போதும்
பொருளியலை விடவில்லை கடன் வரும்போதும்
உயிரை மட்டும் விட்டுவிட்டார் புகழ்விடவில்லை!

கவியரசா - சங்கத்
தமிழரசா - அன்புப்
புவியரசா - எங்கள்
கண்ணதாசா!!

ராஜேந்திரகுமார்

தனி மரத் தோப்பு

5

குளியலறையில் சீறும் பொய் மழையிலான ஷவர் கீழே நின்று குளித்துக் கொண்டிருந்தாள் அனாமிகா. புதியதாகப் பூசிய கேச கறுப்பு வண்ணத்தைக் கரைய விட்டு, ஷாம்பு போட்டு அலசினாள். தலைக்கு மேல் அறைவது போல நீரின் சீற்றம் –

ஒரு சில விநாடிகளில் நினைவு வந்தது.

கல்லூரி நாளில் போன பிக்னிக்கில் குற்றாலம் அருவியில் இதே போலத்தான் சீற்றமாகக் கொட்டிய அருவி, கால் சறுக்கி விட – நிலை தடுமாறிச் சாய –

சட்டென்று தாங்கிக் கொண்டான், சஞ்சீவி. அவன் மட்டும் தாங்கி இருக்காவிட்டால் கதை என்றோ முடிந்திருக்கும்.

"விட மாட்டேன்" என்றான்.

"யாரை? எதுக்கு விடமாட்டே?"

"உன்னைச் சாக விடமாட்டேன். உன்னைச் சுற்றி எத்தனை கனவுகளைப் படர விட்டிருக்கேன்? அவ்வளவு லேசிலே சாக விட்டுடுவேனா?"

"என்ன கனவு?"

"உன்னை சைட் அடிப்பதுக்கு உத்தேசம்".

உதட்டை மென்று சிரித்தாள். "அதைவிட பேசாமல் என்னை விழ விட்டிருக்கலாம். அது தேவலாம்" என்று திரும்பி நடந்தவள் –

பின்னால் 'ஓ'வென்ற சத்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தாள். தடுப்புக் கம்பிக்குக் கீழே அபாயகரமாகத் தொங்கிக் கொண்டிருந்தான்.

இவள் நெருங்க நினைக்கும்போதே கை சறுக்கி சீற்றமாகப் பாயும் நீரில் விழுந்து விட்டான்.

படபடப்போடு இவள் போய் எட்டிப் பார்க்கும்போது அவ்வளவு கோபமாக சீறிப் பாயும் நீரையும் எதிர் நீச்சல் போட்டு வந்து மீண்டும் கம்பியைப் பிடித்து நிமிர்ந்து சொன்னான் : "எதிர் நீச்சல் போடுவதென்றால் எனக்கு ரொம்பவும் பிடிக்கும். அது தண்ணி ஆனாலும் சரி, கன்னியானாலும் சரி".

சிரிப்புடன் நெருங்கியவள் "உனக்கு நீச்சல் நல்லா வருமா?"

"இன்சல்ட்! இன்னுமா சந்தேகம்! பிரமாதமாக வரும்".

"அப்ப மறுபடியும் நீந்தி ஏறு" என்றவள் அவன் முறைக்க – அவன் முகத்தை உள்ளங்கையால் அழுத்தித் தள்ளி விட்டாள் – சிரித்தாள்.

சிரித்தாள். முழு நீளக் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள். சட்டென்று பத்து வயது குறைந்த மாதிரி தெரிந்தவளுக்கு மேலும் சிரிப்பு வந்தது. உதட்டை மென்றபடி சிரித்துக் கொண்டாள்.

வயதைக் குறைக்கிறேன். ஏன்? சிநேகிதன் வந்து இருக்கிறான். அதனாலா?

சிநேகிதனா? மாஜி காதலனா?

வெட்கமாக முகத்தைப் பொத்திக் கொண்டாள்.

உடம்பைத் துடைத்து அதே துவாலையால் மார்பு வரை மறைத்து மறைத்து முடிச்சுப் போட்டு வார்ட்ரோப்பைத் தள்ளித் திறந்து நீண்ட நேர ஆராய்ச்சிக்குப் பின் – நீண்ட காலத்திற்குப் பிறகு – சிவப்புச் சேலையும் அதற்கு மேட்சாக சிவப்பு ரவிக்கையும் எடுத்துக் கொண்டாள். லாக்கரைத் திறந்து பார்த்தாள். நகைகள், வைரமும் முத்துமாகக் கலந்து பளீரென்றன.

'எத்தனை நாளாகிறது, நீங்க என் உடம்பில் தவழ்ந்து?'

கண்ணீருடன் பார்த்து, கையை நீட்டி எடுத்தாள், ஒன்று ஒன்றாக.

கீழே ஹாலில் – வரவேற்பறையில் அமர்ந்திருந்த மானேஜர் படுக்கை மாதிரியிருந்த லெட்ஜரில் தீவிரமாக எழுதிக் கொண்டிருந்தவரை மாடிப்படியின் ஓசை ஈர்க்கவே நிமிர்ந்து பார்த்தவரின் கண்களில் வியப்பு வந்தது.

"என்ன இது, மானேஜர் ஐயா! ஒரு மணிக்கு சாப்பிட வந்து உட்காருவாங்க. மணி இரண்டாகப் போகுது இன்னும்..." பேசிக் கொண்டே சமையலறையிலிருந்து வந்த ராஜாத்தி நின்று விட்டாள் ('எஜமானியா இது?')

"என்ன மானேஜர், கல்யாணமெல்லாம் நல்லா நடந்ததா?"

"நடந்ததும்மா".

"என்ன அப்படிப் பார்க்கறீங்க? ஒரு விதவையின் கோலமா இதுன்னு பார்க்கறீங்களா?"

"இல்லேம்மா. நான் பழமைவாதிதான். இன்னும்கூட சாமி, பூஜை, சென்டிமெண்ட் என்றெல்லாம் இருக்கிறவன்தான். ஆனா, நானும் மனுஷன்தான். மனித உணர்வுகளை, ஆசைகளைப் புரிஞ்சுக்க என்னால் முடியும். உங்க மனசு மாறணும், மத்தவங்களைப் போல வாழணும்னு வேண்டாத தெய்வத்தையெல்லாம் வேண்டிகிட்டிருக்கேன்".

"ராஜாத்தி! சாப்பாடு தயாரா?"

"தட்டு வைச்சாச்சும்மா".

"பதினாறாம் நம்பர் காட்டேஜுக்கு சாப்பாடு அனுப்பியாச்சா?"

"ஆச்சும்மா. அந்தப் பாப்பா நம்ப தோட்டத்து மல்லிகைப் பந்தலைப் பார்த்து கொஞ்சம் பூ பறிச்சுக்கட்டுமான்னு ஆசையாக் கேட்குது. சரின்னு சொல்லிடவா?"

"வேணாம். சொல்லாதே!"

"அம்மா!"

"நீயே கொஞ்சம் பறிச்சுக் கொண்டு போய்க் கொடுத்துடு".

"சரிம்மா".

"என்ன மானேஜர், பார்க்கறீங்க?"

"அந்தப் பதினாறாம் நம்பர் காட்டேஜுக்கு வந்தவங்க இன்னும் அட்வான்ஸ் தரலை. கேட்கட்டுமா?"

"வேணாம்".

"மேடம்! லெட்ஜர்லே என்ட்ரி போட்டாச்சு. நாளைக்கு ஆடிட்டர் வருவாரே?"

தன் கைப் பையிலிருந்து ஒரு கட்டு பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்து சாப்பாட்டு மேஜை மேல் வைத்தாள். "இதை வைச்சு அவர் பெயரால் பில் போட்டு எடுத்துப் போய்க் கொடுத்திடுங்க. போங்க".

புரியாமல் பார்த்தார்.

"மானேஜர்! நான் உங்களைப் போகச் சொன்னேன்". நகர்ந்தார்.

ராஜாத்தி பரிமாறிய பாதாம் அல்வாவைப் பார்த்தவளின் கண்கள் கலங்கின.

பாதாம் அல்வா!

நினைவு நழுவியது.

அப்போது அவர்களின் நெருக்கம் அதிகமாகியிருந்தது. அவர்களைச் சுற்றிலும் காற்றில் காதல் வாசனை இருந்தது.

குட்டையான கொத்தாக இரண்டு பக்கமும் புஸ்ஸென்ற ஜடையுடன் ஸ்கர்ட் அணிந்து அழகு பிம்பமாக ஓடிவந்தாள். நின்றாள். நிறைய மூச்சிறைத்தாள். இப்போதெல்லாம் அவள் கலகலப்புக்கு மாறியது, சஞ்சீவிக்குப் பிடித்திருந்தது.

"நான் ஒண்ணு நினைக்கிறேன். அது என்னன்னு சொல்லு பார்க்கலாம்?"

கீழுதட்டைக் கசக்கியவாறு அவளைச் சுற்றி வந்தான், சஞ்சீவி. "சரியாகச் சொன்னால் என்ன பரிசு தருவாய்?"

"நீ எதைக் கேட்டாலும் தருவேன்" தோள்களை உயர்த்தி, கைகளை விரித்தாள், "எதைக் கேட்டாலும் பிரச்னையில்லை".

"வம்புல மாட்டிக்கப் போறே".

"ஏனோ?"

"முத்தம் கேட்கிறதாக வை!"

"உடனே கிடைக்கும்".

"கையைப் பிடித்து இழுத்தால்?" அவள் கத்துவதைப் பார்க்கும் ஆசையில் கேட்டான் : "அப்ப?"

"எதிர்ப்பே சொல்ல மாட்டேன்" அழுத்தமாகச் சொன்னாள், "இதுக்கும் மேலே ரெடி. ஆனா ஒண்ணு. நான் தோற்றால் மட்டும்தான்".

அவன் முகத்தில் யோசனை வந்தது. "என்ன இவ? எதைக் கேட்டாலும் சரி, சரி என்கிறாள்? என்ன விஷயமாக இருக்கும்?"

"ஓஹ்ஹோ!" கண்களில் சலிப்புக் காட்டினாள், "இது என்ன பெரிய விஷயம்? சிம்பிள். இப்ப நான் நினைக்கிறதை என் மனசைப் படிச்சிட்டு என்னன்னு சொல்லணும். இது ஒரு பெரிய விஷயமா?"

விரலால் சொடுக்குப் போட்டான், "என்னைப் பற்றி..."

"அதுதான் எப்பவும் நினைக்கிற சங்கதியாச்சே".

"புரிஞ்சு போச்சு. ஐஸ்கிரீம்".

"ச்சீய். நான் என்ன சின்னப் பாப்பாவா? ஐஸ்கிரீமுக்கும் சாக்லேட்டுக்கும் ஆசைப்பட?"



கைகளை உயர்த்தி விட்டான். "தோல்வியை ஒப்புக்கறேன். நீயே சொல்லு".

சின்னக் குழந்தை போல கையைத் தட்டிச் சிரித்தாள். "தோத்துட்டியா? நாளைக்கு நம்ப காலேஜ் லீவாச்சே. அதைத்தான் நினைச்சு கிட்டிருந்தேன்".

அவனுக்கு இது செய்தி. "காலேஜ் நாளைக்கு லீவா? ஏன்? எதுக்கு?"

"நாளைக்குத் தெலுங்கு வருஷப் பிறப்பு. யுகாதி பண்டிகை".

"இது தமிழ்நாடு. இதுக்கெல்லாம்கூட லீவு தருவாங்களா என்ன?"

"விட்டிருக்காங்களே! எங்க தாத்தா கட்டின காலேஜ்தான். ஆனாலும் இப்ப இருக்கிற போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ் அத்தனை பேரும் மனவாடுகள்தானே? ஐ மீன் தெலுங்குக் காரங்க தானே?" இடுப்புகளைத் தாங்கி நின்றாள் : "தயாராயிரு".

புரியாமல் பார்த்தான், "எதுக்கு?"

"ஜெயிச்சவ நான். தோற்றது நீ. பந்தயப்படி இப்ப நான் என்ன சொன்னாலும் நீ செய்யணும்".

மென்று விழுங்கினான், "என்ன செய்யணும்?"

"நாளைக்குப் பூரா என்கூடத் திரியணும். நான் சொல்ற இடத்துக்கெல்லாம் கூட்டிட்டுப் போகணும். நான் ஆசைப்படறதையெல்லாம் வாங்கித் தரணும். ஓ.கே?"

மகிழ்ச்சிக்கு மாறிய முகத்துடன் சொன்னான்: "செலவு என்னோடது"

"கஷ்டப்படப் போறே" கைகளைப் பரபரவென்று தேய்த்து விட்டுக்கொண்டு தயாரானாள். "நீ என்ன பண்றே? காலையிலே ஆறு

மணிக்கெல்லாம் காலேஜ் வாசலுக்கு காரோட வந்துடறே?"

"வந்து... உனக்காக தேவுடு காக்கிறேன். அப்புறம்?"

"அப்புறம்? அப்புறம் சொல்றேன்" காரை நோக்கிப் பறந்து போனாள். சாவியைச் செலுத்தி கார்க் கதவைத் திறந்தவள் அங்கிருந்தே கத்தினாள். "ஏ...ய்..." கூவினாள் "நிறையப் பணம் கொண்டு வா. நீ உங்க அம்மாவை ஏமாத்துவியோ, இல்லே அப்பா பர்ஸ்லே கை வைப்பியோ எனக்குத் தெரியாது"

"எவ்வளவு?" என்றான், இரைச்சலாக.

"அது தெரியாது. ஆனால் ஒண்ணு மட்டும் நிச்சயம். என் காதல் ரொம்பவும் காஸ்ட்லி யானது" கையசைத்தாள். "பை... பை".

மறுநாள் காலை ஆறு மணிக்கெல்லாம் அப்பாவைக் கெஞ்சிக் கூத்தாடி மாருதி காரை வாங்கிக் கொண்டு கல்லூரி வாசலில் காத்து நின்றான்.

விநாடிகள் விரைந்தன. நிமிடங்கள் நில்லாமல் ஓடின. மணி மாறியது. ஏழரை மணி வரை அவள் வரவேயில்லை.

கோபமும் சலிப்புமாக இவன் கிளம்பும் போது -

"ஏய், கஞ்சப் பிசாசே! காசு மிச்சம்னு ஓடப் பார்க்கறியா? உனக்கு முன்னால் வந்து அந்த மரத்துக்குப் பின்னால் நின்று உன்னை வேடிக்கை பார்த்தேன்"..

"நான் போறேன்".

"ஏய்... என்ன ஆச்சு?"

"ஆறு மணிக்கு வரதாகச் சொல்லி ஏழு மணிக்கு வருகிற காதல் கிராதகி எனக்கு வேண்டாம்".

"நான் என்ன பண்ணட்டும்?" கையைப் பிசைந்தாள் : "எங்கெங்கே போகலாம்? எப்படியெல்லாம் உனக்கு செலவு வைக்கலாம்னு யோசிக்கிறதுக்குள்ளேயே நேரமாயிடுச்சு. வாட்டு டு?"

"சரி, கடைசியில என்னதான் நிகழ்ச்சி நிரல்?"

"முதல்ல டிரைவ் - இன் ஹோட்டலுக்குப் போ. வர்ற அவசரத்தில வீட்டில எதுவும் சாப்பிடாமல் வந்துட்டேனா? இப்ப செமப் பசி. முதல்ல செமத்தியான டிபன். அப்புறம் மகாபலிபுரம் போறோம்".

"வாட்? மகாபலிபுரமா?"

"உம்! அங்கே கடற்கரைக் கோயில் பக்கத்துல மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்து டூயட் பாடறோம். 'மதனமோகன ரூப சுந்தரா... அலங்காரான்னு'

"ப்பூ. இவ்வளவுதானா? நீ என்னமோ காஷ்மீருக்கு பிளேன்ல கூட்டிட்டுப் போகச் சொல்லுவாயாக்கும்னு எக்கச்சக்கமான பணத்தோட வந்தேனே!"

"அதெல்லாம் ஒரு நாளில் முடிகிற சங்கதியில்லே" கத்தினாள் : "முதல்ல டிரைவ்-இன்".

"போறேன்" என்றவன் காரை நகர்த்தினான்.

டிரைவ்-இன் ஹோட்டலில் காரில் அமர்ந்தவாறே பாதாம் அல்வாவை பட்டர் பேப்பரில் இருந்து பிரித்து ஸ்பூனால் அள்ளி வாயில் போட்டுக் கொண்டு, "வாவ்! டேஸ்ட்டி. வெரி டேஸ்ட்டி" என்றாள்.

"ஏய்..." அவன் கேட்டான்: "உன் வீட்டாருக்கு விஷயம் தெரியுமா?"

"எதைச் சொல்றே நீ? இந்த பாதாம் அல்வா திங்கிறதையா? இல்லே இன்னைக்குப் பூராவும் உன்னோட ஊர் சுற்றப் போறேனே அதையா?"

"நம்ம காதல் விவகாரத்தைச் சொன்னேன்".

"அது உனக்கும் எனக்கும் மட்டுமே இருக்க வேண்டிய சமாசாரம். அதை ஏன் வீட்டில சொல்லணும்?"

"உளறாதே. உன் கல்யாணத்தை நடத்தித் தர வேண்டியவர் உங்கப்பாதான்".

"ஓ! அதுவா? மெல்ல சொல்லிக்கலாம்".

"எப்ப? நம்ம குழந்தையை எல்கேஜியிலே சேர்த்தப்புறமா?"

"உம்! ஆசை. அந்தப் பேச்சை எடுக்க எப்படியும் இன்னும் ஒரு வருஷம் ஆயாகணும். ஸ்டில் ஐயாம் மைனர். அப்பா என் கல்யாணப் பேச்சை எடுக்கிறச்ச நானாகச் சொல்லிட்டுப் போறேன். என்ன இப்ப? அந்த உன் பாதாம் அல்வாவையும் எனக்குக் கொடு!"

"உனக்கு வேணுமானால் கேளு இன்னொண்ணு வாங்கித் தரேன். நான் தின்ன எச்சிலைக் கேட்காதே".

"பரவாயில்லை. பழகிக்கறேன்" எனப் பிடுங்கிக் கொண்டதையும், தின்பதையும் -

சற்றுத் தள்ளி நிறுத்தியிருந்த காரிலிருந்து இரண்டு கனவான்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"ஏன் வாசுதேவன்!" ஒருவர் கேட்டார் : "அங்கே காரில் தெரிகிறது உன் மகள் அனாமிகா மாதிரியில்லே?"

"மாதிரி என்ன? என் அனாமிகாதான். நீ போய்ச் சேர்" என்ற ஒருவர் கார்க் கதவைத் திறந்து இறங்கிக் கொண்டார்.

நடந்து இவர்கள் காரை நெருங்கி, பின்சீட் கதவைத் திறந்து ஏறி அமர்ந்து கொண்டார்.

திரும்பிப் பார்த்த இவள் வெலவெலத்துப் போய் "ப்...பா..." "அப்பா" என்று தவிக்க - அவன் மிரள -

கரகரப்புக் குரலில் சொன்னார் : "காரெடுத்து நேரே என் வீட்டுக்குப் போ!" என்றார், அதிகாரமாக.

"ஆனா, அப்பா! நாங்க இன்னமும் காப்பி சாப்பிடலை".

"எல்லாம் வீட்டுக்குப் போய் சாப்பிட்டுக்க லாம். தம்பி! நீ வண்டி எடு".

"ஆனால், ஸார்...!" பதறினான் அவன். "பில் இன்னும் தரலை".

தண்ணீர் கொண்டு வந்த சப்ளையரிடம் பெரியவர் நூறு ரூபாய் நோட்டு ஒன்றை விட்டெறிந்தார். "மிச்சம் எவ்வளவு ஆனாலும் அதை உனக்கு டிப்ஸாக வைச்சுக்க. நீ வண்டியை எடுத்து நேராக எங்க வீட்டுக்குப் போ. வழியில் எங்கேயும் திரும்பவும் கூடாது. நிறுத்தவும் கூடாது" என்றார், கணீரென்ற குரலில்.

நடுங்கினார்கள். கார் குபீரெனப் பாய்ந்தது.

வீட்டுக்குள் போனதும் அனாமிகா எச்சில் கூட்டி விழுங்கினாள். "அப்பா! இவர் என் சிநேகிதர்".

"தெரியும். பின்னே எதிரியோடயா ஒட்டலல உரசிகிட்டுச் சாப்பிடுவே?"

"இவர் பேரு..." சொல்ல முயன்றவள், அவர் கையமர்த்தியதும் நிறுத்தி விட்டாள்.

"நான் கேட்டுக்கறேன். நீ போய் மூனு பேருக்கும் காப்பி கொண்டு வர்ற வழியைப் பாரு" அவள் போனதும் திரும்பிப் பார்த்துக் கேட்டார் : "உன் பெயர் என்ன தம்பி?"

"சஞ்சீவ் குமார். சஞ்சீவின்னு கூப்பிடு வாங்க" தயக்கமாகச் சொன்னான் : "உங்க மகளோட கிளாஸ் மேட்".

"காதலன். அதையும் சொல்லி விடேன்".

"ஆமாம்" என்றதும் -

ஒரே வார்த்தை சொன்னார் : "மறந்துடு".

கெஞ்சினான். காதலைப் பற்றி நிறையச் சொன்னான்.

"வாயை மூடு. அவளுக்கு நான் பார்த் திருக்கிற மாப்பிள்ளை பெரிய டாக்டர். அவர் அபாய்ண்ட்மெண்ட் கிடைக்கணும்னாலே மாசக் கணக்கில காத்திருக்கணும். நீ இன்னமும் படிப்பை முடிக்கலை. எதிர்காலமே கேள்விக் குறியாக இருக்கிற உனக்கு என் ஒரே மகளைக் கொடுத்து அவளை வறுமையில புரளவிட நான் தயாராயில்லே. தவிர, கிளாஸ்மேட்டாகப் பழகினதைத் தவிர, அவளைப் பற்றிப் பேச உனக் கென்ன தகுதி இருக்கு? கெட் லாஸ்ட் ஐ ஸே!"

"நோ. அவ்வளவு சீக்கிரமா என் காதலைத் தியாகம் செய்ய முடியாது".

"அப்போ தியாகம் பண்ணாதே. விலைக்கு வித்துடு. அவள் எதிர்காலம் நல்லா அமை யணும்னு உண்மையிலேயே நீ விரும்பினா, இந்தா" செக் புத்தகத்தை எடுத்து வெறும் கையெழுத்தை மட்டும் போட்டு விட்டு நீட்டி னார். "ப்ளாங்க் செக். எத்தனை லட்சம், எத்தனை கோடி வேணுமானாலும் எழுதிக்க. இந்தப் பணத்துக்காகத்தானே என் மகள் பின்னால நாய் மாதிரி அலையறே? எடுத்துக்க. கையெழுத்துப் போட்ட கையோட அவளை மறந்துடு. என் மகளை விட்டுடு".

வெறித்துப் பார்த்தான்.

—தொடரும்

போக்குவரத்து:-
சாலை, ரெயில், சப்பல், ஆகாய விமானம் என்று எல்லா வழிப் போக்குவரத்தும் தன்னகத்தே கொண்ட பகுதி புதுவை.

தொழிற்பேட்டை:-
சுமார் 2,500க்கும் மேற்பட்ட பல்வேறு தொழிற்சாலைகள் இங்கு உள்ளன.




புதுவையில் சாலைகளின் பெயர்கள்

1) மகாத்மா காந்தி வீதி
2) நேரு வீதி
3) சாஸ்திரி வீதி
4) படேல் சாலை
5) அண்ணா சாலை
6) பாரதி வீதி
7) பாரதிதாசன் வீதி
8) கண்ணதாசன் வீதி
9) கவிஞர் வாணிதாசன் வீதி
10) காமராசர் சாலை- மற்றும் பல-

தில்லை கூத்தரசன்

"அன்புள்ள தங்கைக்கு...!"





பிறந்த வயிறும்
ஒன்றே தான்!
வளர்ந்த வீடும்
ஒன்றே தான்!
அருந்திய அமுதும்
உறங்கிய தோளும்
அப்பாவும் அம்மாவும்
ஒன்றே தான்!

எத்தனை வருடங்கள்
ஒன்றாய் இருந்தோம்!
எத்தனை யுகங்கள்
ஒன்றாய் வளர்ந்தோம்!

சுண்டு விரல்நீளப்
பென்சிலுக் காகப்
போட்ட சண்டைகள்
எத்தனையோ...

இண்டு இடுக்கெலாம்
ரப்பரைத் தேடி
'டூ'விட்ட நாள்கள்
எத்தனையோ...
சாயம் போன
ரிப்பனுக் காகக்
காயமாய்க் கிள்ளிய
காலம் எத்தனையோ..

சண்டைகள் இருந்தன!
பிணக்குகள் இருந்தன!
கோப தாபங்கள்
எல்லாமே இருந்தன!
சின்ன வயசுச்
சண்டைகள் எல்லாம்
பெரிதாய் வளர்ந்ததும்
சிறிதாய் ஆனது!

ஒரு தட்டினிலே
உணவை உண்டோம்!
ஒரு படுக்கையிலே
தூக்கம் கொண்டோம்!

அக்கா தங்கை
உறவின் இனிமை
புரியத் துவங்கிய
காலம் அதுதான்!
அதற்குள் நமக்குக்
கல்யாண காலம்
வந்து விட்டதால்
கணவனால் பிரிந்தோம்!

அவரவர் புகுந்தகம்!
அவரவர் உலகம்!
அவரவர் வீடு!
அவரவர் குடும்பம்!

சின்னப் பிள்ளையாய்ச்
சுற்றிய நீயோ
துணைவரின் பின்னால்
தொலை தூரத்தில்!

பென்சிலும் வேண்டாம்!
ரப்பரும் வேண்டாம்!
பிணக்குகள் இன்றிநாம்
மகிழ்ந்திட வேண்டும்!

அக்கா தங்கை
அருகாமை வேண்டும்!
ஒருவரை ஒருவர்
தாங்கிட வேண்டும்!
என்பது இனிமேல்
மறுபிறவி யில்தான்!

கணவன் குழந்தை
என்பதாய்த் தொடரும்
உறவுகள் நடுவே
சகோதரி உறவைச்
சிந்திக்கக் கூடச்
சிந்தையில் சிறிதும்
இடமே இல்லை
என்பது உண்மை!

பென்சிலுக் கான
சண்டையைத் தீர்க்கக்
குழந்தைகள் என்னைக்
கூப்பிடு கின்றனர்!

அவசரம் இன்றிநான்
அடுத்த கடிதத்தை
அடுத்த ஜென்மத்தில்
நிதானமாய் எழுதுவேன்!

அதுவரைக்கும் ரேஷன் பாசத்துடன் , உன் சகோதரி...!

— ஆண்டாள் பிரியதர்சினி

நினைவுச் சின்னம்

தென்னார்க்காடு மாவட்டம் எனும் நெக்லசில் பதக்கம் பதித்ததைப் போன்ற அழகுடன் அமைந்த நகரம் புதுவை. ஒவ்வொரு முறையும் புதுவைக்கு வரும்போதெல்லாம் மனம் குழந்தையின் மகிழ்ச்சியுடன் துள்ளும். வயதென்னவோ அறுபதுக்கு அண்மையில் இருந்தாலும், மனம் இருபதிலேயே வட்டமிடுகிறது.

இருபது வயதில்தான் நான் புதுவையை விட்டுப் பிரிந்து சென்னைவாசியானேன். தகப்பனாரின் மறைவு, வாழ்ந்த வீடு பழகிய நண்பர்கள்... இனிமையான நினைவுச் சின்னங்களாக மனதில் உறைய, சென்னைக்குக் குடி பெயர்ந்தேன். காலம்தான் எவ்வளவு வேகமாய் நகர்கிறது...? இப்போது நாற்பது வருடங்கள் பறந்தோடி... தலை நரைத்து.. உடல் தளர்ந்து, எவ்வளவு மாற்றங்கள்!.... ஆனால், மனம் மட்டும் மாறாமல் இன்னும் இளமையாக இருபதிலேயே இருக்கிறதே... அது எப்படி?

முதலில் சென்னைக்கு வந்த புதிதில் வாழ்வே போராட்டமாக இருந்தபோது, புதுவையின் பிரிவு என்னை அதிகம் பாதிக்கவில்லை. போராடி எனக்கென ஓர் இடத்தைத் தக்க வைத்துக் கொண்ட பிறகு - வாழ்க்கையில் வசதியாக செட்டில் ஆன பிறகு மனத்தின் மூலையில் ஒரு வெற்றிடம்... எங்கோ... ஓர் ஏக்கம்...

சிதம்பரத்தில் ஒரு திருமணத்திற்காகப் புறப்பட்டு, புதுவையை நெருங்க.... நெருங்க.... மனம் புலானது. வண்டியை ஊருக்குள் ஒவ்வொரு தெருவாகப் போகச் சொன்ன போது ஒவ்வோர் இடமாக நான் ஓடி... ஆடி.... விளையாடிய.... பழகிய... தெருக்களைப் பாசத்துடன் பார்த்தபோது.... அதோ நான் வசித்த வீடு... என் தகப்பனார் உயிரோடு இருந்த போது அவருடன் நாங்கள் வாழ்ந்த வீடு.... அந்த வீட்டை மெதுவாகக் கடக்கும்படி டிரைவரிடம் சொல்லிவிட்டு, சாய்ந்து உட்கார்ந்து கொண்டேன்.

வீட்டின் முன்புறம் மட்டும் சிறிது மாற்றங்கள். உள்ளே அதன் பழைய முகம் தெரிந்தது. கடைத் தெரு வழியாகக் கடற்கரையை அடைந்தது கார். கடைத்தெரு முழுதும் மாறி விட்டது. மொத்தத்தில் புதுவை நகர் நான் பார்த்தபோதிருந்த சட்டையைக் கழற்றிவிட்டு வேறு ஒரு சட்டை போட்டிருந்தது. மாறுதல் இல்லாதது இந்தக் கடல் மட்டுமே... எவ்வளவு நாள்கள் இந்தக் கடற்கரையில் விடிய விடிய... நானும் என் நண்பர்களுமாகப் பேசி இருப்போம்!

அந்த நண்பகல் நேரத்தில் நான் மட்டும் தனியாக அமர்ந்து கடலலையைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது தான் என் நண்பன் ரங்கசாமியைப் பார்த்தேன். ஸ்கூட்டரில் வந்து கொண்டிருப்பவன் என்னை சந்தேகத்துடன் பார்த்து நிறுத்தினான். நானும் அவனைப் பார்த்து "ரங்கா.... ரங்கசாமி தானே." என்றேன். ரங்கசாமியும் என்னை அடையாளம் கண்டு கொண்டான்.

"என்னடா... நம்ம 'மதி' மாதிரி இருக்கே. மதிவாணன் தானா.. என யோசித்தேன். நீயே என்னைக் கூப்பிட்டவுடன் சந்தேகம் தீர்ந்தது. நீ எங்கே இந்தப் பக்கம்?" விவரம் யாவும் சொன்னேன்.


"எவ்வளவு நாளாகி விட்டது? வா.. வா... வீட்டிற்கு..." கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்றான். அவன் தந்தைக்குப் பின், அந்தப் பெரிய துணிக் கடையை அவன் மேலும் வளர்த்து பல கிளைகள் திறந்திருக்கிறான். இழுத்துப் போர்த்தியபடி வந்த மனைவியையும், தோள்வரை வளர்ந்த பிள்ளைகளையும் அறிமுகப் படுத்தினான்.

பிறகு தோப்பு வீட்டிற்குப் போகலாமென, பக்கத்திலிருக்கும் தென்னந்தோப்பிற்கு, அழைத்துப் போனான். சுற்றிலும் தென்னை மரங்கள் சூழ, நடுவில் அழகான சிறிய வீடு. வீடு நிறைய சிறுசிறு கண்ணாடி அலமாரியில் புத்தகங்கள்... படிப்பதற்கு வசதியாக சாய்வாக அமைக்கப்பட்ட கட்டில்கள்.

"ரொம்ப டென்ஷன் ஆக இருக்கும்போது இங்கே வந்து உட்கார்ந்து கொள்வேன். எனக்கு மிக... மிக... ஆறுதலான விஷயமே. இந்த வீடுதான்... இரண்டு நாளைக்கு ஒருமுறை இங்கே வருவேன். ஏதாவது சாப்பிடுகிறாயா?" சாப்பிடுகிறாயா என்பதை ஓர் அர்த்தத்துடன் என்னைப் பார்த்தான்.

"இல்லை வேண்டாம். சென்னை வாழ்க்கையில் பெரும் பகுதியான நேரத்தை, பணம் சம்பாதிப்பதற்கும், குடும்ப வாழ்க்கைக்கும் செலவிட்டேனே தவிர, இதற்கெல்லாம் நேரமோ... தேவையோ... ஏற்படவில்லை."

அவனும் மகிழ்ச்சியாகப் புன்னகை புரிந்தான். "இதுவரை நானும் அதைத் தொட்டதில்லை. பாண்டிச்சேரியைச் சொந்த ஊராகக் கொண்டவர்களுள் பெரும்பாலோர் குடிப்பதில்லை. அவர்களுக்கு இலக்கிய ஆர்வம் இருக்கும். ரசனையில் உயர்ந்த தரம் இருக்கும். இந்த உண்மை நிறையப் பேருக்குத் தெரிவதில்லை. இங்கு வருடாவருடம் மே மாதம் இரண்டாவது வாரத்தில் நடைபெறும், 'கம்பன்



விழா'விற்கு ஒருமுறை வநது பார். நம் ஊர் மக்களின் ரசனை புரியும்" எனக்கூறிவிட்டு, ரங்க சாமி குழந்தையாய்ச் சிரித்தான்.

அதன்பிறகு நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் புதுவைக்கு வருவது வழக்கமாகி விட்டது. என்னைப் பார்த்தவுடன் ரங்க சாமி துணிக்கடையை உதறி விட்டு என்னோடு ஒட்டிக் கொள் வான். சின்னக் குழந்தையின் உற்சாகத்துடன் ஊரைச் சுற்று வோம். சில நேரங்களில் கடை யில் அவன் இல்லாத போது கணக்குப்பிள்ளை என்னை மிக்க மரியாதையுடன் ரங்கசாமி வரும் வரை கவனித்துக் கொள்ளுவார்.

இளமை நினைவுகளுடன் ஊரைச் சுற்றும் போது, அடிக் கடி தெரிந்தவர்கள் கண்களில் மாட்டிக் கொண்டு ரங்கசாமி அசடு வழிவதை நான் ரசித்துப் பார்ப்பேன்.


அவனுக்குச் சிரிப்பு என்பது முற்றுப்புள்ளி போல ஒவ்வொரு வாக்கியத்தையும் ஒரு சிரிப்புடன் முடிப்பான். அதுவே அவனது பலம்கூட. காந்தமாய் அனை வரையும் இழுத்துக் கொள்ளும். அன்று மாலை ஊருக்குப் போவ தற்கு முன் மணி அய்யர் கடையைத் தேடிப் பிடித்து ரவா தோசை சாப்பிட்டோம். கடை அவன் மூத்த பையன் நிர்வாகத் தில் இருந்தது. மணி அய்யர் காலத்தில் இருந்ததைப் போலவே மாறாமல் இருந்தது. சுவை உட்பட... நான் வண்டியில் ஏறி அமர்ந்தவுடன் எவ்வளவு மறுத்தும் கேளாமல் பழங்கள் வாங்கிக் கொடுப்பான். இந்த முறை பழங்களுடன் ஒரு

புத்தகமும் இருந்தது. அவல
சமீபத்தில் எழுதி வெளியால
புத்தகம். எனக்கு சமர்ப்பண
செய்து எழுதி இருந்தான். முத
பக்கத்தில் -நட்புக்காக - ம
வாணன் - என்று அதற்கு மே
என்னால் படிக்க முடியவில்லை
கண்களில் நீர் திரையிட்டது.

அடுத்த புதுவைப் பயண
எனக்கு இரண்டு ஆண்
களுக்குப் பிறகுதான் கிடைத்த
என் மூத்த மகன் அவசரமா
என்னை அமெரிக்காவுக்கு வ
மாறு அழைத்ததன் பேரி
அங்கே சென்று இரண்டு வருட
தங்க வேண்டிய நிர்ப்பந்த
ஏற்பட்டு விட்டது. ரங்கசா
யுடன் இரண்டு முறை கடித
மூலம் தொடர்பு கொண்டதுட
சரி.

ரங்கசாமி என்னைப் பார்த்
மிகவும் சந்தோஷமடைவான் எ
மன்தில் மகிழ்ச்சி ஊற்றுக
பொங்க... பாண்டி வந்
சேர்ந்தேன். பஸ் ஸ்டாண்ட் இட
மாறிப் புதிதாய் இருந்தது. எங்கு
கூட்டம்... கூட்டம்... ரிக்ஷாக்க
பெரும் அளவுக்குக் குறைந்

வசந்த குமார்



கடற்கரை:- புகழ் பெற்ற கடற்கரை. காந்தியின் மிகப் பெரிய 20-அடி உயர சிலையும் எதிரில் நேருஜியின் சிலையும் உள்ளது. புதுவை கடற்கரைச் சாலை முடியும் பகுதியில் பிரஞ்சுக்கவர்னர் டுப்ளெக்கு சிலை மிக சம்பிரமாய் நிற்கிறது.

— தில்லை கூத்தரசன்.

போய்விட்டன. ஆட்டோக்கள் ஆக்கிரமித்துக் கொண்டன. சாலைகள் பெரிதாக்கப்பட்டு, சோடியம் விளக்குகள் பிரகாசிக்க நகரமே புதுமைக் கோலம் பூண்டிருந்தது.

பஸ் ஸ்டாண்டை விட்டு வெளியே வந்தேன். திருவிழாக் கூட்டம் போல் முடிச்சு முடிச்சாக மனிதர்கள்... திடீர் திடீரென முளைத்த நடைபாதைக் கடைகள்... ஆட்டோ பிடித்து கடையை அடைந்தேன். ரங்கசாமியின் பையன் உட்கார்ந்திருந்தான் என்னைப் பார்த்ததும், சற்று தயங்கி அடையாளம் தெரிந்து கொண்டான். "சௌக்கியமா?" என்றபடி நிமிர்ந்த நான் திடுக்கிட்டேன். அங்கே என் நண்பன் ரங்கசாமி படம் மாட்டப்பட்டு மாலையுடன் இருந்தார். தூக்கி வாரிப் போட்டது எனக்கு. எப்போ.... எப்போ.... இது..?"

"ஒரு வருஷமாச்சுங்க...." உங்களுக்குத் தகவல் கொடுத்தோம். நீங்க ஊர்ல இல்லைனு சொன்னாங்க."

'என் இரண்டாவது மகன் ?தை என்னிடம் தெரிவிக்கவில்லையே...' மனம் பாறாங் கல்லாய்ச் சுமையானது. அப்படியே இடிந்து போய் உட்கார்ந்தேன்.

"நீங்க கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்குங்க." என்றபடி கணக்குப் பிள்ளையைப் பார்த்தான். புரிந்து கொண்டேன்- வியாபாரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் எழுந்து கொண்டேன். கணக்குப் பிள்ளை என்னைத் தோப்பு வீட்டிற்கு அழைத்துச் சென்றார். புத்தகங்கள் காணவில்லை. அவற்றைச் சின்ன முதலாளி ஒரு நூலகத்திற்கு நன்கொடையாய்க் கொடுத்து விட்டதாகவும், இந்த வீடு இப்போது விருந்தினர் மாளிகையாக இருக்கிறது என்றும் கணக்குப் பிள்ளை தெரிவித்தார். ஆம். மனிதர்கள் மாறுதலுக்கு உட்பட்டவர்கள். தந்தையைப் போல் மகன் இருப்பதில்லை. மகனைப் போல அவன் பிள்ளை இருப்பதில்லை.

ரங்கசாமி இல்லாமல் என்னால் அங்கிருக்கப் பிடிக்கவில்ல. ரங்கசாமியின் மகனிடம் விடை பெற்று, வெளியே வந்து, ஆட்டோ பிடித்து ஊரைச் சுற்றினேன். எல்லா இடமும் நானும் அவனும் சேர்ந்து சுற்றியவை என்பதால் ஒவ்வோர் இடமும் அவனையே மீண்டும் மீண்டும் எனக்கு நினைவூட்டின. திடீரென்று எதிர்ப்பட்டது, அந்த இடுகாடு... "இன்று இவர். நாளை... நீ!" என்ற வாசகம் என்னைச் சிந்திக்க வைத்தது. ரங்கசாமியைச் சந்திக்க ஆர்வத்தோடு அமெரிக்காவிலிருந்து வந்த நான் அவனது நினைவுச் சின்னத்தை மட்டுமே காண நேர்ந்தது.

அன்று இரவு புதுவையை விட்டுத் திரும்பும் போது இழந்தது நண்பனையா? அல்லது புதுவையையா? புரியவில்லை. ஜன்னல் வழியாக பவுர்ணமி அடுத்த இரண்டாம் நாள் நிலவு சோபை இழந்தது போல எனக்குத் தெரிந்தது. வெகுநேரம் விடை கொடுக்க முடியாமல் பஸ்ஸுடன் போட்டியாய் ஓடி வந்து கொண்டிருக்கும் நிலவையே பார்த்துக் கொண்டிருந்தேன் நான்.


ஃஃஃ

ஐயருக்குப் பயணமில்லை...

பாரதி வசந்தன்

1910-ஆம் ஆண்டு. ஓர் அதி காலை நேரம். ஒரு பூ மலர்வதைப் போல பொழுது விடிந்து கொண்டிருந்தது. அருகிலிருந்து வீசிய கடற்கரைக் காற்றின் சிலுசிலுப்பில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் நின்றிருந்த அரச மரங்களும்... அடர்த்தியாய் இருந்த மஞ்சள் கொன்றை மரங்களும் மெல்ல அசைந்து கொண்டிருக்க... ஒரு வனாந்திரம் போல இருந்த புதுச்சேரி ரயில்வே ஸ்டேஷனின் உறக்கத்தைக் கலைப்பதற்கு நிலக்கரிப் புகையைக் கக்கியபடி காலை ஐந்தரை மணி ரயில் வண்டி வந்து நின்றது.

22 வயது இளைய தோற்றம். ஒடிசலான தேகம். நாலுமுழ வேட்டி கட்டிக் கொண்டு மேலே கதர் ஜிப்பா சகிதமாய்... மீசை இல்லாமல்... தேஜஸ் நிறைந்த ஆகிருதியோடு வ. ரா. ரயிலில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தார். கண்கள் துறுதுறுவென்று யாரையோ எதிர்பார்ப்பது போல அலைந்து கொண்டிருக்க... எதிரே கம்பீரமாய் இந்தியாவின் 'மோன்மார்த்ரு' என புதுச்சேரி மக்களால் புகழப் பெற்ற திரு இருதய ஆண்டவர் கோயில் பார்வையில் பட்டது. ஸ்டேஷனை விட்டு வெளியே நடந்து வந்த வ.ரா.வுக்கு இலத்தீன் சிலுவை வடிவமைப்பில், 'கொத்தீக்' கலைத் திறமையோடு செம்மண்ணைக் குழைத்துப் பூசியது போன்று திரு இருதய ஆண்டவர் கோயிலைக் கட்டியிருந்தது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. "என்ன ஒரு நேர்த்தியான கட்டடக் கலை அமைப்பு!..." என வியந்தபடியே வ.ரா. சாலையைக் கடந்த போது எதிரே குதிரை வண்டிகள் வரிசையாக நின்று கொண்டிருப்பது தெரிந்தது. "வெகு சீக்கிரம் போய்ச் சேர்ந்தாக வேண்டும்..." என்று அவர் குதிரை வண்டியை நோக்கிப் போனபோது 'புஷ்' வண்டியை இழுத்துக் கொண்டு ஓர் ஆள் அவர் முன்னே வந்து நின்றான்.



அந்த வண்டியைப் பார்க்க வ.ரா.வுக்கு மேலும் ஆச்சரியமாய் இருந்தது. சாலையில் அதேபோல் பல 'புஷ்' வண்டிகள் ஓடிக் கொண்டிருந்தன. நாலு சக்கர வண்டியின் மேலே ஒரு கூடு போட்டு அதிலே ஆட்களை ஏற்றிக் கொண்டு முன்னே ஒருவன் உட்கார்ந்து சுக்கானைப் பிடித்தபடி வண்டியை இயக்க... பின்னே ஒருவன் வண்டியைத் தள்ளிக் கொண்டே ஓடுவதைப் பார்க்க ரொம்பப் புதுமையாயிருந்தது. வ.ரா. ஆர்வத்தோடு வண்டியிலே ஏறி உட்கார்ந்து கொண்டு வண்டி ஓட்டுபவனைப் பார்த்துக் கேட்டார்.

"மிஸ்டர்!.... உமக்குப் பாரதி யார் வீடு தெரியுமோ...?"

அவன் வ.ரா.வை ஏற இறங்கப் பார்த்தான்.

"என்ன... அப்படிக் கேக்கறீங்க?... பட்டணத்துல இருந்து வந்திருக்காரே... பாட்டுப் பாடற சாமி... மீசையெல்லாம் வச்சிருப்பாரே... அவருதானே? பிச்சேரியில அவரு இருக்கிற இடம் எனக்கு நல்லாத் தெரியும்... உட்காருங்க..."

வண்டிக்காரன் இப்படிச் சொன்னதும் வ.ரா.வுக்கு எல்லையில்லா ஆனந்தம் உண்டாயிற்று. 1910-ஆம் ஆண்டுக்கு முன்னமேயே பாரதியின் சுதேச கீதங்களைப் படித்துப் படித்து அதில் பரவசமாகிப் போயிருந்த வ.ரா.வுக்கு இன்றைய நாள் அவரை நேரில் போய்ப் பார்க்கப் போகிறோம் என்ற நினைப்பே சந்தோஷமாய் இருந்தது.

'புஷ்' வண்டி ஓடிக் கொண்டிருந்தது. புதுச்சேரி நகரின் அழகும், தூய்மையும்... நேர்க்கோடு போல ஒழுங்காக அமைந்திருந்த மேடு பள்ளம் இல்லாத விசாலமான சாலையும்... பிரெஞ்சுக் கட்டடப் பாணியில் அமைந்திருந்த வீடுகளும்... பார்க்கப் பார்க்கப் பரவசமாயிருந்தது அவருக்கு. சாலையில் போய்க் கொண்டிருந்த அநேக ஆண் பிள்ளைகள் கோட்டும் சூட்டும் போட்டுக் கொண்டு தலையில் தொப்பியுடன் காலில், 'சப்பாத்து' மாட்டிக் கொண்டு போவதும்... கூடவே பெண் பிள்ளைகள் குட்டைக் கவுனும், குதி கால் 'சப்பாத்து'ம் போட்டுக் கொண்டு, உதட்டில் சிவப்புச் சாயம் பூசிக் கொண்டு ஆண்களோடு சமமாய் உரசிக் கொண்டே பிரெஞ்சு மொழியில் சிரித்தபடி பேசிக் கொண்டு போவதும்... யாரும் கண்டு கொள்ளவே இல்லை. இதுவரையிலும் பிரிட்டிஷ் ராஜாங்கத்தின் பழக்க வழக்கங்களை மட்டுமே பார்த்து வந்திருந்த வ.ரா.வுக்கு முதன்முதலாகப் புதுச்சேரி தேசத்தின் பிரெஞ்சு மக்களைப் பார்த்துக் கொண்டு போனது வேடிக்கையாகத் தோன்றியது.

'புஷ்' வண்டி ஈஸ்வரன் தர்ம ராஜா கோயில் வீதியின் கோடியில் உள்ள ஒரு பழைய வீட்டின் முன்பு போய் நின்றது. வண்டிக்காரன் இறங்கிக் கொண்டான்.

"ஐயா! நீங்க கேட்ட பாட்டுச் சாமி இருக்கிற வீடு இதுதான்!..."

வ.ரா. அந்த வீட்டை ஆர்வத்துடன் பார்த்தார். ஒரு கோயிலைப் பார்ப்பது போன்ற பக்தி உணர்ச்சி அவருக்குள் பிரவாகமெடுத்தது. இளம் பிறைகளைக் கவிழ்த்து வைத்தது போன்று வளைவான மாடங்களை இரும்புக் கிராதிகள் கொண்டு வரிசைப் படுத்தி வைத்திருந்த வாசல். சுவற்றில் சுண்ணாம்புக் காறைகள் பெயர்ந்து போய்... மக்கி உளுத்துப் போன மரச் சட்டங்களால் ஆன சாளரங்களோடு... அந்தக் காலத்து வீடு என்பதைப் பார்த்த உடனே தெரிந்து கொள்ளும்படியான தோற்றம்.

'இந்தச் சின்னஞ்சிறிய பழைய வீட்டுக்குள் தானா சுப்ரமண்ய பாரதி எனும் சூறாவளிக் காற்று சுற்றி வருகிறது?..... என்ன கொடுமை?... என்ன கொடுமை?...

வ.ரா.வுக்குக் கண்கள் கலங்கின. நடுங்கிய உள்ளத்தோடு மெல்ல அடியெடுத்து வைத்துக் கதவைத் தட்டியதும்... "யாரது?..." என்று கம்பீரமாய் குரல் ஒலித்தது.' மறுபடியும் கதவைத் தட்டலாமா வேண்டாமா என்று வ.ரா. யோசிக்கும் வேளையில் 'படீரென்று' கதவு திறந்து கொள்ள பாரதி பட்டப் பகல் சூரியனைப் போல பிரகாசமாக வெளிப்பட்டார். நெற்றியில் குங்குமப் பொட்டும்.. முறுக்கிய மீசையுமாகத் துடிக்கும் உதடுகளோடு உணர்ச்சிப் பிழம்பான தோற்றம்... கறுப்பு மேல் சட்டையைப் போட்டுக் கொண்டு தலையில் பஞ்சாபிக் கட்டு கட்டியபடி... கண்களில் தீட்சண்யம் பொங்க மகா புருஷனைப் போல் நின்றிருந்த பாரதியைக் கண்டதும், வ.ரா. தன்வசம் இழந்தார். கண் இமைக்கும் நேரத்தில் வ.ரா. பாரதியின் காலில் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்காரம் செய்யவும்... பாரதி அதே வேகத்தில் சட்டென்று குறுக்கே பாய்ந்து வ.ரா.வைத் தூக்கி நிறுத்தி....

"இங்கு பாரும்.... நமஸ்காரம் வேண்டாம். நீர் யார்....? வந்த காரியத்தைச் சொல்லும்...?"

என்று அதட்டலோடு கட்டளையிடுவது போலப் பேசினார். வ.ரா.வுக்கு ஒன்றும் புரியவில்லை. நாக்குழறியது. ஆங்கிலத்தில் பேசத் தொடங்கினார்.

"போதும்... நிறுத்துமய்யா. ஒரு தமிழன் மற்றொரு தமிழனோடு இன்னும் எவ்வளவு காலம் ஆங்கிலத்திலேயே பேச வேண்டும்?... தமிழிலே பேசப் படாதா?...."

–என்று பாரதி வேதனை கலந்த பார்வையுடன் பேசவும் வ.ரா.வுக்கு அழுகையே வந்து விட்டது.

"நமது கொடியாலம் ரங்கசாமி அய்யங்காருடைய குருநாதர் நாகை ஜபதா யோகியார் மகா சமாதி அடையும் சமயம்... 'தமிழ் நாட்டுக்கு அண்மையில் வரப் போகும் உத்திரயோகி ஒருவரை நீ எனக்குப் பிறகு குருவாகக் கொள்ளலாம்' என்று சொல்லி விட்டார். அதன் பேரில் உத்திர யோகியைப் பார்த்துப் போய்

விவரம் சொல்ல எனக்கு உத்திரவு. தாங்கள் தான் உதவ வேண்டும்...”

வ.ரா.முடிக்கும் முன்பு பாரதி இடைமறித்துக் கேட்டார்.

“உத்திரயோகியா?... அது யாரய்யா...? விவரமாகச் சொல்லும்...?

“அரவிந்தர்தான்...?”

“அப்படியா சங்கதி?... நம்ம பாபுதானே! மண்டயம் சீனிவா சாச்சாரியுடன் இன்று சாயங் காலமே பாபுவைச் சந்தித்து விட லாம். நீர் கவலையை விட்டுத் தள்ளும்...”

என்று படபடவென்று பேசி விட்டுப் பாரதி பக்கத்தில் திரும்பி அங்கு நின்று கொண்டிருந்த ஓர் இளம் வயதுப் பையனிடம்...

“அம்பி.... பாபு பாவம்! அவ ருக்கு இருக்க இடமில்லை... உடுக்க உடையில்லை. உண்ண உணவு மில்லை. நம் தெற்குத் தேசத்தைத் தேடி வந்த ஓர் அதிதியை விட்டு விடுவதா?... இது தர்மமா?... போய் ஒரு வேஷ்டி கொண்டு வா. எனக்காக அல்ல. பாபுவுக்குக் கொடுக்க வேண்டும். ஏக வஸ்திரத் தைத் தவிர அவர் உடுத்துவதற்கு வேறொன்றுமில்லை....”

என்று சொன்னதோடு நில்லா மல் அரவிந்தருக்கு வேஷ்டி கிடைக்க ஏற்பாடு செய்துவிட்ட பிறகே வேறு வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினார் பாரதி.

பாரதி அரவிந்தரை, பக்தியு டனும், அன்புடனும் பாபு என்று தான் அழைப்பது வழக்கம். அர விந்தர் புதுச்சேரி வந்து தலை மறைவு வாழ்க்கை வாழத் தலைப் பட்ட போது அவர் தங்குவதற்கு எந்த ஒரு வீடும் கிடைக்காத சமயத்தில் பாரதிதான் தம் நண் பரான கலவை சங்கரன் செட்டி யாரிடம் சொல்லி அவர் வீட்டி லேயே தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுத்தார்.


கலவை சங்கரன் செட்டியார் அந்நாளில் மிகப் பெரிய செல்வ ராக விளங்கியவர். புதுவைத் தேச

பாவேந்தன் பார்வை

நா.மணிமாறன்

(முன்னாள் கல்வி அமைச்சர், புதுவை அரசு)

பாவேந்தர் பார்வையில்
மொழி விழியானது!
இனம் மணமானது! மனமானது!
நாடு வீடானது!
பகுத்தறிவு பகல்வெளிச்சமானது!
மாதாவின் பால் மழலைக்கானது!
மாத்தமிழ்ப் பால் இளமைக்கானது!
எனவேதான் பாவேந்தர்
தமிழ் எங்கள் இளமைக்குப் பால்
என்றார்
தாய்மொழிக் கல்வியே தரணிக்கேற்றதெனும்
தத்துவம் தந்த வித்தகன்!
‘இன்பத்தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்’
என்றுரைக்கும் நிலை எய்தி விட்டால்
துன்பங்கள் நீங்கும் சுகம்வரும், நெஞ்சினில்
தூய்மையுண்டாகிடும்! வீரம் வரும்
என்றே விளக்கம் இயம்பிய வேந்தன்!
எங்கள் தமிழ்உயர்வென்று
நாம் சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்
குறைகளைந் தோமில்லை
தகத்தகாயத் தமிழைத்
தாபிப்போம் வாரீர்! என்றார்!
சொன்னதோடு நில்லாமல்
எப்படியெல்லாம் தமிழைத்
தாபிக்க வேண்டு மென்றும் கூறுகிறார்:
“எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்!
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்!
வெளியுலகில் சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும்
பெயர்க ளெல்லாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு
சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச்
செய்வதுவும் வேண்டும்!
தமிழ்மொழியை மதங்களிலே
சாய்க்காமை வேண்டும்!
இலவசநூற் கழகங்கள்
எவ்விடத்தும் வேண்டும்!
மொழி என்றால் என்னவென்றும்
மொழி வளர்க்க வழி என்னவென்றும்
மொழிந்திட்ட பாவேந்தர் உண்மையில் ஓர்
இனமானக் கவிஞரெனில் மிகையில்லை!



☆ ☆ ☆

பக்தர்களின் உற்ற நண்பராகத் திகழ்ந்து அவர்களைப் பல்வேறு ஆபத்துகளில் இருந்து காப்பாற்றியவர். பாரதி புதுவைக்கு வந்த புதிதில் அவருக்குக் கலவை சங்கரன் செட்டியார் செய்த உதவிகள் அநேகம். அவர் வீட்டில் தான் இப்போது அரவிந்தரும் தங்கி இருந்ததால் தினமும் பாரதியும் மண்டயம் சீனிவாசாச்சாரியும், வ.வே.சு. அய்யரும் அங்கே போய் மணிக்கணக்கில் கூடிப் பேசுவது வழக்கம்.

மாலை நான்கு மணி இருக்கும். பாரதி மண்டயம் சீனிவாசாச்சாரியாருடன் வ.ரா.வை அழைத்துக்கொண்டு அரவிந்தரைப் பார்க்க கலவை சங்கரன் செட்டியார் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார். செட்டியார் வீடு அந்தக் காலத்திலேயே பர்மா தேக்கினால் கட்டப்பட்ட பிரம்மாண்டமான மூன்று மாடிக் கட்டடம். அந்த வீட்டின் மூன்றாவது மாடியில் தான் அரவிந்தர் தங்கி இருந்தார். கண்களில் ஒளி தவழ... குறுந்தாடியும் மீசையுமாய்... தலைமுடி தோளில் புரள... மெல்லிய சரீரத்தோடு ஒரு மூலையில் ஒதுக்குப்புறத்தில் அரவிந்தர் தன்னந்தனியே உட்கார்ந்து கொண்டிருந்தார். பாரதியும், மண்டயம் சீனிவாசாச்சாரியாரும், வ.ரா.வும் அரவிந்தரை நமஸ்காரம் செய்து அவர் அருகில் உட்கார்ந்ததும் பாரதி, வ.ரா.வைத் 'தமிழ்நாட்டு தேச பக்தன்' என்று அரவிந்தருக்கு அறிமுகம் செய்து வைத்தார். வ.ரா. கொடியாலம் ரங்கசாமி அய்யங்கார் அனுப்பி வைத்திருக்கும் நோக்கத்தைச் சொல்லி அரவிந்தருக்கு உதவும் பொருட்டுத் தாம் புதுச்சேரியிலேயே கொஞ்ச காலம் தங்கியிருக்க அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அன்றைய இரவு நேரம் போனதே தெரியாமல் எல்லாரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பாரதிக்கு பிரெஞ்சு சங்கீதத்தின் மீது அபாரமான பிரேமையுண்டு. அந்நாளில் 'அந்துவான் அர்லோக்' எனும் பிரெஞ்சு வாத்தியார் பியானோ வாசிப்பதிலும், பிரெஞ்சுப் பாடல்களைப் போலவே இலத்தீன் பாடல்களைப் பாடுவதிலும் நல்ல பயிற்சி பெற்றிருந்தார். ஏற்கனவே கர்நாடக சங்கீதத்தில் அபாரஞானம் உள்ள பாரதிக்குப் பிரெஞ்சு வாத்தியாரின் தொடர்பு ஏற்பட அவரின் சங்கீத ஞானம் மேலும் ஒரு புதிய பரிமாணத்தில் விரிவடைந்திருந்தது. அதன் விளைவாகப் பாரதி பிரெஞ்சு சுதந்தர கீதத்தை மிக அருமையாகக் கற்றுக் கொண்டிருந்தார்.

அந்த வீரம் பொருந்திய பிரெஞ்சு சுதந்தரப் பாடலைப் போலவே தமிழிலும் வேகத்தோடு, கேட்பவரை ஈர்க்கும் வகையில் ஒரு பாடலைப் பாடி வைக்க வேண்டும் என்று நெடுநாளைய ஆசை ஒன்று பாரதியின் நெஞ்சில் கனன்று கொண்டேயிருந்தது. ஆனால், அதற்கான காலம்தான் கனிந்து வரவில்லை. எல்லாக் காலத்திலும் அழியாத ஜீவனுள்ள கவிதைகள் எப்போது ஜனனமாகுமென்று யாருக்குத் தெரியும்...?

இந்தக் காலகட்டத்தில் புதுச்சேரியின் அரசியல் நிலைமை மிகவும் மோசமாயிருந்தது. பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து நூற்றுக்கணக்கான போலிசார் புதுச்சேரிக்கு வந்து முகாமிட்டு பாரதி, அரவிந்தர், வ.வே.சு. அய்யர் உள்ளிட்ட எண்ணற்ற தேச பக்தர்களை இங்கிருந்து வெளியேற்றிவிட வேண்டும் என்று மறைமுகமாக முயன்று கொண்டிருந்தார்கள்.

அதன் பொருட்டு, பிரெஞ்சு அரசாங்கம் கொண்டு வந்த ஒரு புதிய சட்டத்தின்படி (அந்நியர் சட்டம்) அது செயல்பாட்டுக்கு வந்த தேதிக்கு முன்னால் ஒரு வருஷகாலம் புதுச்சேரியில் வசித்து வரும் அந்நியர்கள் ஐந்து ஆனரரி மாஜிஸ்ட்ரேட்களிடம் இருந்து கையெழுத்து வாங்கிப் பிரெஞ்சு போலிசாரிடம் தம்மைப் பதிவு செய்து கொண்டால்தான் தொடர்ந்து அவர்கள் புதுச்சேரியில் குடியிருக்கலாம் என்ற புதிய பிரிவு புகுத்தப்பட்டது.

இந்தச் செய்தி உடனே பாரதிக்கு எட்டியது.

"தலைமறைவு வாழ்க்கைக்குத் தடை வந்து விட்டாலும் கூட நமக்குப் பயமில்லை. ஆயினும்... இங்கிருக்கும் தேசாபிமானிகளை வெளியேற்றி விட்டால் பிறகு நாம் எப்படித் தேச விடுதலைக்குத் திட்டமிடுவது...? இதை எங்ஙனமாயினும் தடுத்து நிறுத்தியாக வேண்டும்..."

கண நேரத்தில் முடிவெடுத்த பாரதி உடனே ஐந்து மாஜிஸ்ட்ரேட்களைப் பிடித்துப் புதுச்சேரியிலேயே தொல்லையின்றி இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தலைப்பட்டார். அன்றிரவே யாருக்கும் தெரியாமல், மண்டயம் சீனிவாசாச்சாரியாரும், வ.வே.சு. அய்யரும் கூடி என்ன செய்யலாம் என்பது குறித்து ஆலோசித்தனர். பாரதி ஒரு தீர்மானத்துக்கு வந்தவராய் பக்கத்தில் இருந்த வ.ரா. விடம் கண்களில் உற்சாகம் துள்ள, கணீரென்ற குரலில் பேசினார்...

"நீர்.... நாளைக் காலையில் நம்மை வீட்டில் வந்து பாரும். வேண்டியது செய்யலாம். காளி அருள் செய்வாள். கவலையை விட்டுத் தள்ளும்..."

மறுநாள் காலையில் வ.ரா. பாரதியை அவர் வீட்டில் சந்தித்தார்.

"வாரும்... உம்மைத்தான் எதிர்பார்த்திருந்தேன். உடனே தாமதம் செய்யாது சங்கரன் செட்டியார் வீட்டுக்குப் போக வேண்டும்... ம்... புறப்படும்..."

என்றபடி பாரதி, வ. ரா.வை, அழைத்துக் கொண்டு தமது முறுக்கிய மீசையைக் கையால் தடவியபடி... தன் மார்பை முன் தள்ளி ஒரு போர் வீரனைப் போல் கம்பீரமாகக் குதித்து நடந்து சென்றார்.

இருவரும் சங்கரன் செட்டியார் வீட்டை அடைந்த நேரம், செட்டியார் வாசல் அருகே ஓடி வந்து வரவேற்றார்.

"வாருங்களை... வாருங்கள்... என் வீடு தேடி வந்தது நான் செய்த பாக்யம்... இப்படி அமருங்கள்.." என்று கூடத்தில் ஆடிக் கொண்டிருந்த ஊஞ்சலைக் காட்டினார். பாரதி சட்டென்று துள்ளிக் குதித்து செட்டியார் அருகில் போய் நின்று கொண்டு பேசினார்...

"செட்டியாரே!.... மன்னிக்க வேண்டும். நான் இங்கு அமர்வதற்கு நேரமில்லை... உம்மால் ஒரு காரியம் ஆக வேண்டும்... செய்வீரா?..."

"அதென்ன கேள்வி?.... உத்திரவிடுங்கள்... உடனே செய்யச் சித்தமாயிருக்கிறேன்..."

"பிரிட்டிஷ்காரன் நம்மையும், நம்மைப் போன்ற தேசாபிமானிகளையும் பிடிப்பதற்குப் பொறி வைத்திருக்கிறான். நீர்தான் எப்படியாவது நாங்கள் புதுச்சேரியிலேயே தங்கி இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும்..."

"என்ன பிரமாதமான காரியம்?... இரண்டு மணி நேரம் அவகாசம் கொடுங்கள். எல்லாவற்றையும் சரி செய்து விடுகிறேன். நீங்கள் கவலையே பட வேண்டாம்..." என்று சொன்ன கலவை சங்கரன் செட்டியார் கையெழுத்துப் போட வேண்டிய முக்கியமான ஆவணங்களையெல்லாம் எழுதித் தன்னிடம் ஒப்படைத்து விடுமாறு பாரதியிடம் கேட்டுக் கொண்டார்.

"சபாஷ்... செட்டியாரே...! அப்படியே செய்கிறோம்..." என்று பாரதி சொன்னதும் அதற்காகவே காத்திருந்தவர் போல கலவை சங்கரன் செட்டியார் குறுக்கிட்டு, தமது இரு கைகளையும் கட்டிக் கொண்டு பேசினார்.... "இந்தக் காரியம் நான் செய்கிறேன். தாங்கள் உடனே ஒரு பாட்டுப் பாட வேண்டும்..."

செட்டியார் கேட்டு முடிக்கவில்லை. பாரதி கலகலவென்று வெண்கலம் போன்ற குரலில் சிரிக்கத் தொடங்கினார்.

புதுவை பிராந்தியப் பகுதிகள்:- புதுவை- காரைக்கால் மாஹி, ஏனாம் பகுதிகள் ஆகும்.

ஆசிரமம்:- அரவிந்தர் ஆசிரமம், கம்பளிசாமிமடம், ஒங்கார சாமி மடம், சித்தானந்த சுவாமிமடம், அக்கா சாமிமடம், சிதானந்தா-மடம்

திருவக்கரை:- பத்திர காளியம்மன் கோயில் உள்ளது. இங்கு பல மில்லியன் ஆண்டு காலம் முன்பு இருந்த மரம்- கருங்கல் பாறையாய் இறுகி உள்ளது.

புதுவைப் பகுதிகள்:- முத்தியாலுப் பேட்டை, முதலியார் பேட்டை கருவடிக்குப்பம், கரடிக்குப்பம், சேதாபட்காட்டேரிக்குப்பம்- திருபுவனை,

கவிஞர்கள்:- பாவேந்தர் பாரதிதாசன், கவிஞர் வாணிதாசன், கவிஞர் புதுவை சிவம் புகழ்பெற்ற கவிஞர்கள். தற்காலத்தில் கவிஞர் அரிமதி தென்னகன் மிகப் புகழுடைய எளிய கவிஞர். சுமார் 95 நூல்கள் வரை எழுதியுள்ளார்.

— தில்லை கூத்தரசன்

"உம்மைப் போன்றவர்களுக்கு இல்லாத பாட்டா?... இதோ ஒரு நொடியில்...."

பாரதி கூண்டிலிருந்து அவிழ்த்துவிடப்பட்ட ஒரு சிறுத்தையைப் போல கைகளைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டு.... அப்படியும் இப்படியுமாக விழிகளை உருட்டியபடி அந்த வீட்டுக்குள் உலாவத் தொடங்கினார். உணர்ச்சிப் பிழம்பாகி நெருப்புக் கங்குகளாகச் சிவந்திருந்த தம் கண்களை மூடிய படி ஆவேசத்துடன் நடந்த போது 'லா-மர்ஸியேஸ்' பிரெஞ்சு சுதந்தர கீதம் வீர உணர்ச்சியோடு பாரதியின் மனப் பிரதேசம் எங்கும் எதிரொலித்தது. நடந்து கொண்டிருந்தவர் சட்டென்று நின்று கண்களை அகல விரித்து வெறி பிடித்தவரைப் போல பலமாகச் சிரித்து...

"செட்டியாரே!... இந்தாரும் நீர் கேட்ட பாட்டு..." என்று சொல்லி கடகடவென்று இடிஇடிப்பது போன்ற ஓசையுடன் பாடத் தொடங்கினார்...

பல்லவி

"ஜயமுண்டு பயமில்லை மனமே - இந்த
ஜன்மத்திலே விடுதலையுண்டு
நிலையுண்டு (ஜய...)

அனுபல்லவி

பயனுண்டு பக்தியினாலே -
நெஞ்சிற்
பதிவுற்ற குலசக்தி சரணுண்டு
பகையில்லை. (ஜய...)

சரணம்

புயமுண்டு குன்றத்தைப் போலே -
சக்தி
பொற்பாத முண்டு அதன்மேலே
நியம மெல்லாம் சக்தி நினை
வன்றிப் பிறிதில்லை
நெறியுண்டு; குறியுண்டு; குலசக்தி
வெறியுண்டு (ஜய...)
மதியுண்டு செல்வங்கள் சேர்க்கும்
- தெய்வ
வலியுண்டு தீமையைப் போக்கும்
விதியுண்டு தொழிலுக்கு
விளைவுண்டு; குறைவில்லை
விசனப் பொய்க் கடலுக்குக்
குமரன்கைக் கணையுண்டு
(ஜய...)
அலைபட்ட கடலுக்கு மேலே -
சக்தி
அருளென்னுந் தோணியி னாலே
தொலையெட்டிக் கரையுற்றுத்
துயரற்று விடுபட்டுத்
துணிவுற்ற குலசக்தி சரணத்தில்
முடிதொட்டு (ஜய...)

பெருங்குரலெடுத்து ராகம் போட்டுப் பாடிய பாரதியின் துடிப்பு மிகுந்த இந்தப் பாட்டில் கரைந்து போய், கலவை சங்கரன் செட்டியாரும், வ.ரா.வும் வாய் பேசாது நின்றிருந்தார்கள். வெளியே புதுச்சேரி நகரத் தெருக்களில் ஏற்றி வைத்த விளக்குகளின் ஒளியிலிருந்து இருள் மறைந்து மெல்ல மெல்ல வெளிச்சம் பரவிக் கொண்டிருந்தது.

சுமதிக்குத்தான் அந்த மசால் தோசை என்றால் எவ்வளவு ஆசை! பத்து ஆண்டுகளுக்கு முன்பு, கல்யாணமான புதிதில் அவளை ஒருமுறை பட்டணத்து ஓட்டல்களைப் பார் என்று அந்த நட்சத்திர ஓட்டலுக்கு அழைத்துப் போய் வாங்கிக் கொடுத்தது... அப்போதே அதன் விலை ஒன்பது ரூபாய் ஐம்பது காசு.

இத்தனை ஆண்டுகளாகியும் அவள் மனதில் பசுமையாகவும் நாக்கில் ,இனிமையாகவும் நின்றுபோன சுவை அது. அடிக்கடி அவள் அதை நினைவு கூர்ந்திருக்கிறாள்.

'என்னமா வெண்ணெய் மாதிரி மிருதுவா... நெய் நெறைய ஊத்திமிருப்பாங்க போலிருக்கு. மசாலாகூட காரமும் இல்லாம சப்புன்னும் இல்லாம ப்..பா.. என்ன ருசி! இப்பக் கூட நாக்கிலேயே நிக்குதுங்க' என்று சமீபத்தில் கூடச் சொன்னாள்.

தற்போது அந்த மசால் தோசையின் விலை இருபத்து மூன்று ரூபாய் என்று தெரிந்து கொண்ட கணபதி, தனக்கு வாழ்க்கைப்பட்டு மாடாய் உழைத்துத் தேய்ந்து, வரிசையாக மூன்று குழந்தைகளைப் பெற்று நாளும் அல்லாடும் சுமதிக்கு, மூக்குத்தியா...கம்மலா... கேவலம் அவள் ஆசைப்படும் ஒரு மசால் தோசை கூட வாங்கித்தர, தன் ஊதியம் இடந்தரவில்லையே என்று புழுங்கினான்.

ஜவுளிக் கடையில் கிடைக்கும் அறுநூறு ரூபாய் சம்பளத்தில் குடும்பத்தோடு வந்து நட்சத்திர ஹோட்டலில் ஒருமுறை அந்தத் தோசை சாப்பிட வேண்டுமென்றால் நடக்கக் கூடியதா? ஒரு தோசையின் விலையில் ஒரு நாளையே தள்ளிவிடலாம் என்கிற நிலையில் இதுவெல்லாம் எங்கே சாத்தியம்?

ஓட்டலில் சர்வர் வேலை பார்ப்பவர்க்காவது டிப்ஸ் என்று மேல் வரும்படிக்கு வழியுண்டு. ஜவுளிக் கடையில் பீஸ் துணி கிழித்துக் கொடுப்பவனுக்கு என்ன கிடைக்க வாய்ப்புண்டு? ஒரு நாளைக்குக் கிடைக்கிற நாலு ரூபாய் பேட்டாவில் என்ன தான் சிக்கனமாக டீ சாப்பிட்டுக்

மனைவியின் ஆசை

புதுவை சந்திரஹரி



கொண்டு நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் என்று மிச்சம் பிடித்தாலும் இருபத்து மூன்று ரூபாய் சேர்ப்பதற்குள் ஒன்று கிடக்க ஒன்று என்று செலவு வந்துவிடுகிறது. கடைக்குட்டி கோபுவுக்கு காய்ச்சல் என்று மருந்து வாங்க வேண்டி வரும். பெரியவளுக்கு கட்டுரை நோட்டு வாங்க வேண்டியிருக்கும். இரண்டாமவள் சிலேட்டுப் பலகையை உடைத்துக் கொண்டு அழுவாள். அல்லது சுமதி ரேஷனில் பாமாயில் கொடுக்கிறார்கள் என்பாள். எனவே குடும்ப நலம் முக்கியம் என்னும் பட்சத்தில் தோசை வாங்கித்தரும் திட்டம் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடும். இருப்பினும் ஒருநாள் சுமதிக்கு அந்த மசால் தோசையை வாங்கிப்போய் அவள் சற்றும் எதிர்பாராத விதத்தில் அவள் முன் வைத்து அவளை ஆச்சரியப்படுத்த வேண்டும் என்ற ஆசை மட்டும் தலைதூக்கிக் கொண்டே இருந்தது.

அன்று பலநாள் சேமித்த இருபத்தைந்து ரூபாயைப் பையில் போட்டுக் கொண்டு அந்த பிரமாண்டமான ஓட்டலில் நுழைந்தான் கணபதி. வாட்ச்மேன் கூட கண்ணாடிக் கதவைத் திறந்து அவனுக்கு வழிவிடுவதா வேண்டாமா என்று அவனை ஏளனமாகப் பார்த்தான். தன்னை எங்கே உள்ளே அனுமதிக்காது மறுத்து விடுவார்களோ என்று பயந்த கணபதி "முதலாளி பார்சல் வாங்கி வரச் சொன்னார்" என்று பொய் சொல்லிவிட்டு உள்ளே நுழைந்தான்.

மசால்தோசை ஆர்டர் செய்துவிட்டு அந்தக் குளிர் அறையில் நாற்காலிகள் இருந்தும் கூட உட்கார அஞ்சி ஒதுங்கி நின்றிருந்தான். ஒரு வழியாக கவர்ச்சியான பாலிதீன் பையில் பார்சல் வரவும் பெற்றுக் கொண்டான். பில் தொகைக்கு சர்வரிடமே இருபத்தைந்து ரூபாய் கொடுத்து மீதி சில்லரைக்காகக் காத்திருந்து அது வராது போகவே, 'இங்கேயெல்லாம் டிப்ஸ் தரவேண்டுமே... அதைத் தான் எடுத்துக் கொண்டார்கள் போலும்' என்று தன்னைத் தேற்றிக்கொண்டு வெளியில் வந்தான்.

பேருந்தில் செல்வதற்குக் கூட காசில்லாத நிலையில், அதுவும் சரிதான். நடந்தால்தான் நேரம் போகும். பிள்ளைகளும் தூங்கி விடுவார்கள். சுமதியும் தனியாக இருப்பாள்' என்று நினைத்த படியே தாமதமாக வீட்டினை அடைந்தான்.

"ஏங்க... இவ்வளவு நேரம்?"

"பசங்க தூங்கிட்டாங்களா?"

"எப்பவோ தூங்கிட்டாங்களே... ஏன்?"

"சரி... உள்ளே வா..." என்று அவளை அழைத்துச் சென்று பையிலிருந்த பார்சலை எடுத்துப் பிரித்தான்.

"நீ சொல்லுவியே... பெரிய ஓட்டல் மசால் தோசைன்னு... இதுதான்... இந்தா... சாப்பிடு சுமதி!'" அவள் முன் வைத்தான்.

"என்னமா நெய் வாசனைங்க... அது மாறவேயில்லைங்க" என்ற சுமதி சட்டென்று, "சசி..கலா..கோபு.. எந்திரிங்க... அப்பா என்ன வாங்கி வந்திருக்கார் பாருங்க" என்று பட்பட்டென்று தட்டி மூன்று பிள்ளைகளையும் எழுப்பி விட்டாள்.

கணபதி... "சுமதி! என்ன இது... ஏன் பிள்ளைகளை எழுப்பறே...?" என்பதற்குள்,

"ஹை...தோசை" என்று மூன்று பிள்ளைகளும் தோசையைச் சூழ்ந்துகொண்டு ஆளுக்கு ஆள் கைவைத்து தோசையைப் பிய்த்துத் தின்னத் தொடங்கி விட்டனர்.

சற்றைக்குள் இலையில் ஒரு சிறு துண்டு தோசையும் மிகச் சிறிதளவு மசாலாவும்தான் மீதமிருந்தது. அதை அள்ளி வாயில் போட்டுக் கொண்டு இலையை வழித்து விரலை வாயில் வைத்துச் சூப்பிய சுமதி, "நல்லா இருக்குங்க" என்றாள் சிரித்தபடியே.

"என்ன சுமதி... இப்படி செய்திட்டே?' கேட்க நினைத்த கணபதியின் கண்களில் கண்ணீர் முத்திட்டது.

நிறைவோடு சிரித்துக்கொண்டிருந்த சுமதியைப் பார்த்து, 'ஒரு துளி மட்டுமே சாப்பிட்ட இவளால் எப்படி முழு தோசையையும் வயிற்றுக்குள் இறக்கிய திருப்தியை அடைய முடிந்தது?' என வியந்தவனுக்கு–

"அம்மா...ம்மா...தோசை நல்லா இருந்திச்சில்லே?" என்ற குழந்தைகளின் குரல்–

'அன்று ஆசை மனைவி சுமதிக்கு இருந்ததோ ஒரு வயிறு. இன்று அன்னைப் பறவை சுமதிக்கு இருப்பதோ பல வயிறுகள்' என்ற உண்மையை உணர்த்திற்று.

புதுவை

1) கவிஞர் பாரதிதாசன் பிறந்த ஊர்.

2) கவிஞர் பாரதி அடைக்கலமாக வாழ்ந்த ஊர். அவரது நினைவு வீடு, அரசு சின்னமாய் விளங்குகின்றது.

3) அரவிந்தர் ஆசிரமம், அவரது சமாதி- சுத்தம், அமைதியின் முதல் இடமாய் திகழ்கிறது.

4) நடிகர் சங்கரதாஸ் சுவாமிகள் இறந்த ஊர் இது. அவரது உடல் கருவடி குப்பம். சுடுகாட்டில் புதைக்கப்பட்டுள்ளது. இவர் "நாடகக் காவலர்" என்று அழைக்கப்படுகிறார்.

5) "வில்லியனூர் மாதா". உலகின் மிகப் புகழ் பெற்றவர். இது புதுவையில் இருந்து 6-கிமீ தொலைவில் உள்ளது.

6) "திருவெண்டார் கோவில்"- புகழ் பெற்ற சிற்பக்கலைச் சித்திரம் அமைந்த சிவன் கோவில் இங்குதான் உள்ளது.

7) புதுவைக்கு "வேதபுரி" என்ற மறுபெயர் உண்டு. இங்கு உள்ள சிவன் கோவிலில் "வேத புரீஸ்வரர்"தான் மூலவர்.

8) புதுவை மருத்துவமனையில் பிரசவ வார்டில் ஒவ்வோர் அறையிலும் தொலைக்காட்சிப் பெட்டிகள் உள்ளன. தன்வந்தரி சிலையும் இங்கு உள்ளது.

9) மத்தியப் பல்கலைக் கழகம் ஒன்று உள்ளது. இதன் பெயர் பாண்டிச்சேரிப் பல்கலைகழகம்.

10) சம்பை மாதா கோவில்- இது பிரச்னைக்குரிய இடமாய் உள்ளது. இங்கு முன்பு சிவன் கோவில் இருந்ததாய்ச் சொல்கின்றனர்.

— தில்லை கூத்தரசன்

இவர் என் அப்பா இல்லை

ப. முருகேசன்

"ஜெயந்தி...!"

"எஸ் சார்!"

"சாருமதி...!"

"எஸ் சார்!"

வருகைப் பதிவேட்டில் கவனமாய் இருந்த ஆசிரியர் பூபதி பக்கத்தில் ஏதோ நிழலாடுவது கண்டு வருகைப் பதிவைப் பாதியில் நிறுத்திவிட்டு நிமிர்ந்தார்.

அனுமதி பெறாமல் மேசை வரை வந்திருந்தான் அந்த ஆள். கறுத்த தேகம். தடித்த உருவம். கணகள் இரண்டும் மிளகாய்ப் பழம்போல் சிவந்திருந்தன. பார்க்கும்போதே மனதில் பீதியைக் கிளப்பும் தோற்றம்:

"யார் நீ? என்ன வேணும்?" - பூபதியின் குரல் சற்று கடுமையாகவே இருந்தது.

"என் பொண்ணு ஜெயந்தியைக் கொஞ்சம்... பார்க்கணும்!"

உருவத்தில் இருந்த முரட்டுத்தனம் அவன் குரலில் இல்லை. சற்றுக் குழைவாகவே கேட்டான்.

பூபதி ஆசிரியர் அவனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ஜெயந்தியின் பக்கம் திரும்பினார். அவள், சுவடியில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். தன் தந்தை வந்திருப்பதைக் கண்டுகொண்டதாகவே தெரியவில்லை.

"ஜெயந்தி! உங்க அப்பா வந்திருக்கார்... இங்கே வா!" என்று பூபதி அவளை அழைத்தார்.

அங்கிருந்தபடியே அந்த ஆளை யாரோ ஓர் அந்நியனைப் பார்ப்பதுபோலப் பார்த்த ஜெயந்தி, "சார்! இவர் என் அப்பா இல்லை!" என்று கூறிவிட்டுத் தன் வேலையைத் தொடர்ந்தாள்.

ஜெயந்தியின் பதில் பூபதியை அதிர்ச்சி அடைய வைத்தது.

"என்ன சொல்றே! இவர் உன் அப்பா இல்லையா?"- சந்தேகத்துடன் கேட்டார்.

"இல்லை!" ஜெயந்தி அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள்.

ஜெயந்தி சொன்னதைக் கேட்டதும் பூபதிக்குக் காலையில் செய்தித் தாளில் படித்த செய்தி 'சட்'டென்று பொறி தட்டியது. சந்தேகத்துடன் அந்த ஆளைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவன் முகத்தைக் கவிழ்த்துக்கொண்டு நழுவ முயன்றான். இதற்குமேல் தாமதித்துப் பயன் இல்லை என்று "பிள்ளை பிடிக்கறவன்... பிள்ளை பிடிக்கறவன்!" என்று சத்தம் போட்டுக் கத்தினார் பூபதி.

அடுத்த நொடியில் பக்கத்து வகுப்புகளில் இருந்த ஆசிரியர்கள், தெருவில் போய்க் கொண்டிருந்தவர்கள். என்று பெருங்கூட்டம் கூடி அவனைப் பள்ளிக்கூட மைதானத்தில் தள்ளிப் புரட்டி எடுத்தனர். பள்ளி மாணவ மாணவிகள் வகுப்பறையிலிருந்து ஓடிவந்து நின்று வேடிக்கை பார்த்தார்கள். அவர்களில் ஜெயந்தியும் ஒருத்தியாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

இத்தனை அடி உதைக்கும் அவன் பதில் ஏதும் பேசவில்லை. வலி தாங்க முடியாமல் அவன் கத்திய போது வீசிய சாராய வாடையை வைத்து, "ஏதோ குடிகாரன் உளறி இருக்கான்...!" என்று. கூட்டத்தினர் சல்சலத்து சமாதானப்பட்டு அடிப்பதை நிறுத்திவிட்டுக் கலைந்து போனார்கள். பூபதி மட்டும் மைதானத்தில் அடிபட்டுக் கிடக்கும் அவனையே நெடுநேரம் பார்த்தார். அவசரப்பட்டு விட்டோமோ என்ற குறுகுறுப்பு அவரை 'அரிக்கத் தொடங்கியது. ஏதோ ஒரு குற்ற உணர்வு அவரைத் தாக்கவே மீண்டும் ஜெயந்தியை அழைத்து விசாரித்தார்.

"உண்மையிலேயே இவர் உங்க அப்பா இல்லியா?"

"இல்லிங்க சார்!"- மீண்டும் அவள் உறுதியாகச் சொன்னாள். ஜெயந்தி ஒன்றும் சிறு குழந்தை இல்லை. ஆறாம் வகுப்பு படிப்பவள். ஓரளவு விவரம் தெரிந்தவள். அப்படி இருக்க அவள் அழுத்தம் திருத்தமாகக் கூறுவதை எப்புடி நம்பாமல் இருக்க முடியும்? அவள் சொல்வது உண்மைதான்! அப்படியானால் வந்தவன் குடிகாரனா? அல்லது... பிள்ளை பிடிப்பவனா? குழப்பத்துடனேயே பூபதி அடுத்த வகுப்பிற்குப் பாடம் நடத்தச் சென்றார். அந்தப் பாட வேளை முடிந்து திரும்பி வந்து பார்த்தபோது அவன் அடிபட்டுக் கிடந்த இடம் காலியாக இருந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை- வாசலுக்கு வந்து தெருவை வேடிக்கை பார்த்தபடி பல் துலக்கிக் கொண்டிருந்தார் பூபதி. அவர் வீட்டுக்குப் பக்கத்தில் காலி மனையில் லாரி ஒன்று செங்கல் இறக்கிக் கொண்டிருந்தது. வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பூபதி, லாரியின்

நெற்றியில் பெரிய எழுத்துகளில் 'ஜெயந்தி' என் எழுதி இருப்பதை எதேச்சையாகப் படித்தார். பெயரைப் படித்தபோது அவருக்கு ஒன்றும் தோன்றவில்லை. லாரியின் டிரைவரைப் பார்த்தும் தான் பூபதியின் மூளையில் மின்சாரம் தாக்கியது. அன்று பள்ளிக்கு வந்து அடி வாங்கிய அதே ஆள்! சந்தேகமே இல்லை. அவனேதான்! அதே தடித்த, கறுத்த உருவம்! ஆனால் அவன் முகத்திலிருந்த பழைய முரட்டுத்தனம் காணப்படவில்லை.

'லாரியில் எழுதி இருந்த பெயருக்கும் இவனுக்கும் இடையில் ஏதோ ஒரு கதை இருக்கிறது' என்று முழுமையாக நம்பினார் பூபதி. அதை எப்படி அறிந்து கொள்வது என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே அவன் லாரியை விட்டு இறங்கி பூபதியிடம் வந்தான்.

"வணக்கம் சார்! என்னைத் தெரியுதுங்களா?"- இரு கரங்களையும் கூப்பியபடி கேட்டான்.

ஆறுமாதங்களுக்கு மேலாகியும் அவன் இவ்வளவு தூரம் தன்னை நினைவு வைத்திருப்பான் என்று பூபதி எதிர்பார்க்கவில்லை. அதோடு அன்று அவர் நடந்து கொண்ட விதத்திற்கு இன்று இவன் காட்டும் மரியாதை கண்டு குறுகிப்போனார். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு "ம்... நல்லாவே நினைவு இருக்கு!" என்றார்.

இருவருமே சிறிது நேரம் மௌனம் சாதித்தார்கள். பிறகு பூபதிதான் முதலில் பேச்சைத் தொடங்கினார்.

"அன்னிக்கு ஸ்கூல்ல நடந்ததை..." என்று அவனைச் சமாதானப்படுத்த முனைந்து உடனேயே அவன் குறுக்கிட்டான்.

"அதை விடுங்க சார்! இந்தப் பாழும் ஜென்மத்துக்கு அதெல்லாம் தேவைதான்!"

"அப்போ... அன்னிக்கு நீ, ஜெயந்தியை உன் மகள்னு சொன்னது பொய்யா?"

"யார் சார் சொன்னது? என் மகள் சார்! நான் பெத்த ஒரே மகள்!"- ஆத்திரம் பொங்கக் கத்தினான்.

"அப்படின்னா அவள் ஏன் இல்லன்னு சொல்லிட்டா?"

"அவ மேல தப்பு ஒண்ணும் இல்லிங்க சார்! நாகரிகமாக இருக்கற பத்துப் புள்ளைங்களுக்கு மத்தியில ஒரு குடிகாரனைத் தன் அப்பான்னு சொல்லிக்க எந்தப் புள்ளைக்குத் தான் மனசு வரும்?"- சொல்லும் போதே அவன் கண்கள் கலங்கின. வார்த்தைகள் உடைந்து வெளிப்பட்டன.


"கையில் டிரைவர் தொழில் இருந்தும் வேலை வெட்டிக்குப் போகாமே குடிச்சிட்டு நான் செய்த அட்டகாசம் கொஞ்ச நஞ்சமில்லை.நான் செய்த கொடுமை தாங்காம என் மனைவி அரளி விதையை அரைச்சுக் குடிச்சிட்டு மாண்டு போயிட்டா! அவ போய்ச் சேர்ந்த அன்னிக்கே இந்தப் பாவிகூட இருக்கக் கூடாதுன்னு என் பொண்ணையும் கையில புடிச்சிக்கிட்டு என் ஆத்தா புதுக்குப்பத்துக்குப் போய்ட்டா. சரியா அஞ்சு வருஷமாவுது! அப்பப்போ மப்பு தெளியறப்போ என் பொண்ணு நினைவு வந்து புதுக்குப்பத்துக்கு ஓடிவருவேன். அப்போல்லாம் என் மகள் ஜெயந்தி என் தலையக் கண்டுட்டு ஓடி ஒளிஞ்சிக்குவா. மீறி அவுங்க பாட்டி அவளை என் முன்னால இழுத்துக்கிட்டு வந்தா... 'இவர் என் அப்பா இல்லை'ன்னு கத்திக்கிட்டே ஓடிடுவா! சார்! நீங்களே சொல்லுங்க எந்தப் புள்ளைதான் தன் தாயைக் கொன்னுட்ட குடிகாரனை 'அப்பன்'னு ஏத்துக்கும்?" என்று கேட்டுவிட்டு, 'பொல பொல' வென்று கண்ணீர் வடித்து அழுதான் அவன்.

'இத்தனை தத்துவம் பேசற உனக்குக் குடிக்கறது தவறுன்னு மட்டும் தோணலையா?' என்று கேட்கவேண்டும் போல இருந்தது பூபதிக்கு. ஆனால் அவர் பேச வாயெடுப்பதற்குள் அவனே அதற்குப் பதில் கூறத் தொடங்கினான்.

"சார்! இப்போல்லாம் நான் குடிக்கிறதில்லை. என்னிக்கு நான் உங்க பள்ளிக்கூடத்துல காலெடுத்து வச்சேனோ... அன்னிக்கே நான் குடிக்கறதை நிறுத்திட்டேன். மிருகமா இருந்த நான் மனுஷனாயிட்டேன். நட்ட நடு மைதானத்துல எல்லாரும் கூட்டமாக் கூடி நின்னு வேடிக்கை பாக்க, ஆளாளுக்கு அடிச்சாங்களே... அந்த அவமானத்தால திருந்திட்டேன்னு நினைக்கறீங்களா? அதான் இல்லை! நான் திருந்தணும்ன்னா... என் மனைவியைப் பறிகொடுத்தப்பவே திருந்தி இருக்கணும்! அதுக்கே திருந்தாதவன் இந்த அடி உதைக்கா திருந்திடப் போறேன்?" என்ற கேள்வியோடு நிறுத்தி தோளில் கிடந்த துண்டால் மூக்கை உறிஞ்சித் துடைத்துக்கொண்டு தொடர்ந்தான்.


"பெத்த அப்பனை நாலுபேர் சேர்ந்து அடிக்கும் போது எந்தப் புள்ளையாலும் அழுது புலம்பாம வேடிக்கை பாத்துக்கிட்டு இருக்க முடியாது! ஆனா நான் அடி பட்டப்போ என் பொண்ணு கொஞ்சம் கூட சலனப் படாம மனசைக் கல்லாக்கிக்கிட்டு நின்னு வேடிக்கை பார்த்தாள்ன்னா... அந்தப் பிஞ்சு உள்ளத்தை நான் எந்த அளவுக்கு வெறுப்படைய வச்சிருக்கேன்னு அப்போதான் எனக்கே புரிஞ்சுது!" - அதற்குமேல் தொடர முடியாமல் வெதும்பி வெடித்து அழுதான். பூபதி அவனைத் தேற்றும் வகையில் முதுகில் இலேசாகத் தட்டிக் கொடுத்தார்.

"இதுக்கு மேலயும் நான் குடிகாரனா அலைஞ்சா அது தெய்வத்துக்கே பொறுக்காதுன்னு அன்னிக்கே குடிக்கறதை நிறுத்திட்டேன். குடிச்சு அழிச்சது போக மிச்சம் மீதி இருந்த நிலத்தை வித்துத்தான் இந்த லாரியை வாங்கி நானே ஓட்ட



றேன். இந்த வாரிக்குக்கூட அவ பேரைத்தான் வச்சிருக்கேன். சார்! எனக்குன்னு இருக்கற ஒரே உறவு அவதான்! அவ மனசுக்குள்ள இந்தப் பாவிக்குக் கொஞ்சம் இடம் ஒதுக்கச் சொல்லுங்க சார்! சத்தியமா இப்போல்லாம் நான் குடிக்கிறதே இல்லை!... நான் குடிக்கிறதில்லைன்னு ஜெயந்திகிட்ட சொல்லுங்க சார்! நீங்க சொன்னா அவ நம்புவா!... எனக்காக சொல்லுங்க சார்!" என்று தெருவென்றும் பாராமல் பூபதியின் காலைப் பிடித்துக் கொண்டு கெஞ்சிக் கண்ணீர் வடித்தான்.

ஒரு சிறுமியின் நடவடிக்கை இத்தனை பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி இருப்பதை நினைத்துப் பெருமிதம் அடைந்த பூபதி ஆசிரியர், தந்தையையும் மகளையும் சேர்த்து வைக்கும் உன்னதப்பணியை நிறைவேற்றுவதற்கு உறுதி அளித்திடும் வகையில் அவனை ஆதரவோடு பற்றித் தூக்கி நிறுத்தி அவன் கண்ணீரைத் துடைத்தார். ❖



மர்மயோகி, மலைக்கள்ளன், மம்பட்டியான், கேப்டன் பிரபாகரன்... படங்களின் வரிசையில் இன்னொரு கொள்ளைக்காரன் கதாநாயகனாக்கப்பட்டிருக்கிறான்.

செக்ஸ் காட்சிகளுக்கு மட்டுமல்ல சென்ஸார் போர்டு. வன்முறைகளையும் ஒரு வரையறைக்குள் கொண்டு வந்தால்தான் கொள்ளையர்களைக் கதாநாயகனாக்கும் மக்கள் எண்ணம் மாறும்.

சாதிக்காரர்களின் தூண்டுதலின் பேரில் கொலைகாரனாகும் அப்பாவி நெப்போலியன் சிறைக்குப் போய் வந்து சீவலப்பேரி பாண்டியாகிக் கொள்ளையடிக்கிறார்; ஹீரோவாகிறார்.

மனைவி வேலம்மாவாக சரண்யா. ஆடு மேய்க்கிறார் அஹானா. ஆங்காங்கே தத்ரூபம். அவிழ்த்துப் பார்த்தால் மசாலா தனம்.

பிரதாப் போத்தனின் இயக்கத்தில் - லொகேஷன்களில் அரவிந்தின் ஒளிப்பதிவும், 'ஒயிலா பாடும் பாட்டிலே' ஆதித்யனின் இசையமைப்பும் குளுமை.

படம் பார்த்த சிலருடைய கருத்துகளை இங்கே தொகுத்துள்ளோம்.

'கலைமாமணி' ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் (பொதுச் செயலாளர், அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம், சென்னை (பதிவு).

இருக்கிற வர்க்கம் இல்லாத வர்க்கத்தைச் சுரண்டுவது, அடிமைப்படுத்துவது, பிறகு இல்லாத வர்க்கம் கொதித்து எழுவது, புரட்சி செய்வது, இருப்பவரைச் சூறையாடி இல்லாதவர்களுக்குக் கொடுப்பது... இவையெல்லாம் சினிமாவுக்கு வாய்த்தது போல நம்மூரில் எங்கெங்கோ நடந்திருப்பதும் நடப்பதும் போலக் கற்பனை செய்து எழுதுவதுமாய் இன்று வரை நாம் நிறையவே பார்த்து விட்டோம் என்றாலும் 'சீவலப்பேரி பாண்டி'யில் ஏதோ புதியதாய் நெஞ்சில் பதிவதாய்த் தெரிகிறது. அது நெப்போலியனின் தோற்றமும் நடிப்பும் என்றே சொல்ல வேண்டும்.

சீவலப்பேரி பாண்டியாய் அத்தனை அழுத்தமாய்த் தோன்றுகிறார். இறுதிக் காட்சியில் நெகிழ வைக்கிறார். மனைவி சந்தேகப்படுகிற போதும், போலீஸுக்குச் சொல்லி விடுவதாய் மிரட்டிப் பார்க்கிற போதும், அவர் தானே போலீஸில் சரணடையப் போவ தாய்க் கூறிக் கரைகிற காட்சியிலும் நாமும் உருகிப் போகிறோம்.

நெப்போலியனே நிறையவும் நிறைவாகவும் தோன்றுகிற படம் இது. அந்த நிறைவின் தோன்றாத் துணை இயக்குநர் பிரதாப் போத்தனைப் பாராட்டிய பிறகு, இசையையும், அந்த இன்ஸ்பெக்டர் (ஜி.டி. ரமேஷ்) ஆக வருகிறாரே அவரையும், மனைவியாக வருகிற சரண்யாவையும் கொஞ்சம்தான் என்றாலும் நிழல்கள் ரவியையும் பாராட்டாமல் விடமுடியவில்லை. அஹானா வருகிறார், போகிறார்; மனதில் பதியவில்லை. சிலுக்கும் அப்படியே...!

திருமதி சித்ரா பார்த்தசாரதி

(குடும்பத் தலைவி)

டைரக்டர் பிரதாப் போத்தன் ஸார்! ரொம்பவும் கஷ்டப்பட்டிருக்கீங்க. பாதிக் கிணறு தாண்டிய கதையாக, சொல்ல வந்ததை முழுதாகச் சொல்லாமல் விட்டுட்டீங்களே ஏன் ஸார்?

வெகுளியாய் இருந்த பாண்டியை வீரனாகவும் காட்டவில்லை; ஏழைகளுக்கு உதவுபவனாகவும் காட்டவில்லை. அந்தக் கதாபாத்திரத்தின் முக்கியத்துவத்தை

மறந்துவிட்டீர்களா? ஒரு வித்தியாசமான பாத்திரமாக உணர்ந்து கொள்ள இயலாத அளவில்தான் செய்துள்ளீர்கள்.

ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பாண்டி குரூப், திருநெல்வேலித் தமிழும், வெ.ஆ.மூர்த்தி குரூப் சென்னைத் தமிழும் பேசுவது, காது குத்தி, பூச்சுற்றுவது போல உள்ளது.

படத்தைத் தூக்கி நிறுத்தியுள்ள எடிட்டர் லெனினைப் பாராட்டாது இருக்க முடியவில்லை. 'ஒயிலா பாடும் பாட்டு' நெஞ்சில் நிற்கிறது. ஒளிப்பதிவு பரவாயில்லை.

பார்முலா படங்களுக்கு மத்தியில் சற்று வித்தியாசமான கதையைக் கொடுத்ததினால் படம் பார்க்க முடிகிறது. ஓடுகிற படங்களில் தற்சமயம் பெரிய பேனர் படங்கள் ஏதும் இல்லை. அது உங்கள் வெற்றிக்குப் பிளஸ் பாயிண்ட்.

இரண்டு மணி நேரத்தில் நிறைய விஷயங்களைச் சொல்ல நினைத்து அரையும் குறையுமாய்த் தான் கொடுத்து இருக்கிறீர்கள். ஆக - ஒருமுறை பார்க்கலாம்.

திருமதி எஸ். மல்லிகா

(டாக்டர் சிங்காரம் அவர்கள் மனைவி)

வாரப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த கதை சினிமாவாகி இருக்கிறது. நிறைய எதிர்பார்ப்புகளுடன் சென்றால் ஏற்படுவது ஏமாற்றமே!

நெப்போலியன் வில்லன் நடிப்பிலிருந்து கதாநாயகனாக முன்னேறியிருக்கிறார். வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. நன்றாகப் பயன்படுத்தியுள்ளார்.

கதையில் நிறைய சம்பவங்கள் நம்பும்படி இல்லை. எந்தக் கதாபாத்திரமும் விரிவாகச் சொல்லப் படவில்லை.

ஆதித்யன் இசையில் இரண்டு பாடல்கள் நன்றாக உள்ளன. பின்னணி இசை (ரீ-ரிக்கார்டிங்) பழைய படம் போல் ஓர் உணர்வைத் தருகிறது.

சார்லி, வெ.ஆ.மூர்த்தி நகைச்சுவை அபத்தம்.

இருந்தாலும் நெப்போலியனுக்கு இது ஒரு வெற்றிப்படம்!

செல்வி ஜி. சுமன்

(அகர்வால் பவன் உரிமையாளர் கணேஷ் சந்த் மகள்)

அரைத்த மாவையே திரும்ப அரைத்திருக்கிறார்கள். வழக்கமான இட்லியைவிட சரவணபவன் நெய் இட்லி, சாம்பார் மாதிரி உள்ளது. மற்ற படங்களை விட நெப்போலியனின் நடிப்பு புதுவலிமை பெற்றுள்ளது.

படம் எடுக்கப்பட்ட விதமும், அதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமமும் (கொடைக்கானல்?) மிக அற்புதம்.

கதை அமைப்பு மேலும் சற்று மெருகேற்றப்பட்டிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும். ஒரு முறை பார்க்கலாம்.

திருமதி தேன்மொழி ரங்கராஜன்

(தொழில் அதிபர் மனைவி)

மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கிடையே வந்திருக்கும் படம். அதிகம் எதிர்பார்த்ததால் ஏமாற்றமே மிஞ்சுகிறது. திரைக்கதையில் அடிக்கடி தொய்வு விழுவதால் பாண்டியின் கதாபாத்திரத்திலும் மிடுக்கு குறைகிறது. ஆயினும் நெப்போலியனின் மிகையில்லாத நடிப்பு மனத்தைக் கவர்கிறது.

சரண்யா சோகத்திற்கென்றே முத்திரை குத்தப்பட்டுவிட்டாரோ?



★ ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்



★ திருமதி சித்ரா பார்த்தசாரதி




★ திருமதி எஸ். மல்லிகா சிங்காரம்



★ செல்வி ஜி. சுமன்



★ திருமதி. தேன்மொழி ரங்கராஜன்



★ திரு ஜி. ராமநாதன்
திருமதி சுகந்தி ராமநாதன்

ஒலிவா கதாபாத்திரம் தேவையில்லாமல் திணிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆதித்யன் இசையில் அவர் பாடும் பாட்டு வீட்டிற்கு வந்த பிறகும் முணுமுணுக்க வைக்கிறது.

இயக்குநர் தன்மேல் நம்பிக்கையில்லாமல் சில்க்கை ஆடவிட்டும், அஹானாவை அருவியில் நனைய விட்டும் காட்டியிருப்பது பரிதாபமாக உள்ளது. நகைச்சுவை என்ற பெயரால் சார்லியை, குரங்கைப் போல் நடிக்கவிட்டிருப்பது மிகவும் அருவருக்கத்தக்கது.

போலீஸ்காரருக்கும் மனிதாபிமானமும், மனசாட்சியும் உண்டு என்பதை இன்ஸ்பெக்டர் ராஜ்குமார் நன்றாகச் சித்திரித்துள்ளார்.

படத்தில் பாண்டி சண்டை போடுகிறார்; ஏழைகளுக்கு அள்ளித் தருகிறார்; நான்கு தில்லா சுற்றி வருகிறார். ஆனால் மனதில் மட்டும் ஏனோ பதியவே இல்லை. பெயரில் இருக்கும் கம்பீரம் படத்தில் இல்லை.

திருமதி சுகந்தி ராமநாதன் -
திரு. ஜி. ராமநாதன்
(டாம்ப்கால் விற்பனை மேலாளர்)

முழுப் படத்தில் 270 அடிக்கு வெட்டுகள் பெற்ற *'சீவலப்பேரி பாண்டி'* பல மாற்றங்கள் செய்யப்பட்ட பின்பு 202 அடி நீக்கப்பட்ட படமாகத் திரைக்கு வந்துள்ளது. இதனால் *'சீவலப்பேரி பாண்டி'*யின் உண்மைக் கதையும் பல இடங்களில் முழுமையாக வெளிவராமல் குறிப்பாக அவனின் பழிவாங்கும் பகுதிகள் சீராக இல்லாமல் போய்விடுகிறது.

பட நாயகன் ஒரு குழந்தையை மூர்க்கத்தனமாகக் காளையிடமிருந்து காப்பாற்றும் காட்சி ஒன்றே, படத்தில் மீதி வர விருக்கும் கதையை வெளிப்படுத்தி விடுகிறது. இக்கட்டமே நம்முள் தோன்றும் நாயகன் சாதாரண மனிதன் இல்லை, அசுர பலம் பெற்றவன் என்பதை உணர்த்துகிறது.

பல இடங்களில் வெட்டுப்பட்ட இப்படம், அவற்றையெல்லாம் மிஞ்சி ஒரு சாமான்யன் சூழ்நிலையின் காரணமாக மனித மிருகங்களின் கையில் சிக்கிப் படும் பாட்டை தத்ரூபமாக வெளிப்படுத்தியிருக்கிறார் இயக்குநர் பிரதாப் போத்தன்.

ஓடி ஒளியும் வீட்டில் - நெப்போலியனை மறைத்த அவ் வீட்டுப் பெண் போலீஸிடம், 'நீங்க போலீஸ் என்றால் என் மாமன் பட்டாளம்' என்று சொல்லும்போது பாண்டியின் வீரம் வெளிப்படுகிறது. அப்பெண்ணிடம் 'சாமிக்குக் கூடத் தலை வணங்காத இந்தப் பாண்டி உன்னைக் கும்பிடுகிறேன் தாயி' என்று சொல்லும் இடம் நெஞ்சை விட்டு அகலாத நயம்.

மொத்தத்தில் இது அசுர வேகத்தில் ஓடிச் செல்கிற - வெறியூட்டும் படம். இப்படம் சிறுவர்களுக்கு இல்லை; பெரியவர்களுக்கு மட்டும்.

தொகுப்பு : நாகராஜ குமார்



கோமளா வரதன்

ஒருவர் ஒரு கலையில் தேர்ச்சி பெறுவதே கடினம்.

பல கலைகளில் தேர்ச்சி பெறுவது என்றால் நிச்சயம் அவரிடம் அபரிமிதத் திறன் ஏதாவது இருக்க வேண்டும்.

கோமளா வரதன் இத்தகைய சூப்பர் திறன் உள்ளவர். 1994 ஜூலை ஒன்பதாம் நாள் பெங்களூர் கலைக்கூடம் ஒன்றில் அவரது ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

Abstract ஆக இருக்கிறது என்று உற்றுப்பார்த்ததில் உள்ளே காளி, பரதநாட்டியம், கதகளி என்று அத்தனை நடன வகைகளையும் கண்டு விடுகிறோம்.

நடனங்களை Abstract ஊடே பரிணமிக்க விட்ட கோமளாவரதன் ஒரு சிறந்த நடனக் கலைஞர்கூட! உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் ஆடிப் புகழ் பெற்றவர். பல பரிசுகளும், பதக்கங்களும் பெற்றவர்.

நடனம் மட்டுமல்ல! சிறந்த ஃபோட்டோ கலைஞரும் அவரே! அருமையான காட்சிகளை மிகத் திறமையாகக் காமிராவுக்குள் அடக்கியிருக்கிறார். இதற்குப் பரிசும் பாராட்டும் பெற்றவர்.

இன்னும் ஒரு கலை பாக்கி. அவர் ஒரு சிறந்த எழுத்தாளர். 200 சிறுகதைகளும், நாவல்களும் எழுதிவிட்டார். அதிலும் புகழ் பெற்று விட்டார்.

மத்திய அரசில் பல துறைகளில் செயலராகப் பணி புரிந்து ஓய்வு பெற்ற திரு வரதன் இந்த 'பல்கலை'ப் பெண்மணியின் கணவர்.



உடல் ஊனமுற்றோருக்கு பாரத ஸ்டேட் பாங்கு, புதுவைக் கிளையின் சார்பில் மூன்று சக்கர வாகனங்கள் இலவசமாக அளிக்கும் காட்சி. நெஞ்சுக்கு உரம் கொடுத்த நிறுவனத்தின் சார்பாக கரம் கொடுப்பவர்கள் திரு ஜோஷி (G.M.O. SBI Madras circle) திரு. சோம. முத்தையன் (AGM SBI Pondicherry)



பெரியவர் பரந்தாமன் பவழ விழா

அறுபது ஆண்டுகளுக்கு மேலாக கலை, அரசியல், இலக்கியத் துறைகளில் தன்னலம் கருதாது தொண்டாற்றி வரும் பெரியவர் வெ. நாராயணன் (பரந்தாமன்) அவர்களது பவழ விழா சென்னை இராயப்பேட்டை கஸ்தூரி சீனிவாசன் அரங்கில் (மியூசிக் அகாடமி, மினிஹால்) நடைபெற்றது.

புலவர் ஏ.கே. வேலன் தலைமையில் தமிழக உணவுத் துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் பரந்தாமனுக்குப் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார்.

பவழ விழாக்குழுவின் செயலாளர் கலைமாமணி விக்கிரமன் வரவேற்புரை நிகழ்த்தினார். விழாக்குழு பொருளாளர் வழக்கறிஞர் எம். கற்பகவிநாயகம் நிதி அறிக்கை வாசித்த பின்னர், பரந்தாமனுக்கு ரூபாய் 85,000 நிதி வழங்கப்பட்டது. பொற்கிழியை பெங்களூர் டாக்டர் எம்.ஜே. மோகன் வழங்கினார்.

விழாவில் . மாண்பமை நீதியரசர் டி.எம். சிங்கார வேலு, 'தினமலர்' ஆசிரியர் இரா. கிருஷ்ணமூர்த்தி, விழா வேந்தர் என்.கே.டி. முத்து, ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

பாரதி சுராஜ், நா. இராமச் சந்திரன் இருவரும் தொகுத்தளித்திருந்த பவழ விழா மலரை 'சோ இராமசாமி வெளியிட்டார். மலர், மாலையான விதத்தை பாரதி சுராஜ் விளக்கினார்.

பெரியவர் வெ. நாராயணனின் ஏற்புரைக்குப் பின் நா. இராமச் சந்திரன் நன்றியுரை நவில, விழா இனிது முடிவுற்றது. ●

போலார் ஹைபவர் லோ வோல்டேஜ் கிரைண்டர் மோட்டார்

போலார் மின் விசிறி தயாரிக்கும் நிறுவனமான போலார் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டின் ஓர் அங்கம் மோட்டார் டிவிஷன்.

ஹரியானா மாநிலத்தில் பரிதாபாத் தொழில் நகரில் இந்த மோட்டார் டிவிஷன் ஜனவரி 93இல் தொடங்கப்பட்டது.

தென்னகத்தில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் நம்முடைய இல்லத்தரசிகளுக்கு வெட்கிரைண்டர் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இதனை மனதில் கொண்டு இந்த நிறுவனம் போலார் - ஹைபவர் லோ வோல்டேஜ் கிரைண்டர் மோட்டாரை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த மோட்டாரின் சிறப்பு அம்சம் மிகக் குறைந்த மின் அழுத்தத்திலும் சீராக ஓடும் தன்மை உடையது. இந்தியாவிலேயே முதன்முறையாக பவுடர் கோட்டிங் முறையில் பெயிண்ட் செய்யப்பட்டுள்ளது. எனவே மோட்டார் துருப்பிடிக்காது. கீறல் விழாது. மீண்டும் மோட்டாரைப் பெயிண்ட் செய்யும் அவசியமே இல்லை.

அது மட்டுமின்றி இந்த நிறுவனம் மோட்டாருக்கு மூன்று வருட உத்திரவாதத்தை அளித்துள்ளது. இந்த உத்திரவாதம் மோட்டாரில் உள்ள கண்டென்சர், பால் பேரிங்குகள், மோட்டார் காயிலுக்கும் பொருந்தும். ●

தூத்துக்குடியில் புதிய வானொலி நிலையம்

நமது நாட்டின் 173ஆவது வானொலி நிலையமாக தூத்துக்குடியில் புதிய வானொலி நிலையம் தொடங்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு ஒலிபரப்புக் கென்றே தொடங்கப்பட்டுள்ள இந்த நிலையம் 300 கிலோ வாட் சக்தி கொண்டது.

தென்கிழக்கு ஆசியாப் பகுதியைச் சேர்ந்த மக்கள் இதன் மூலம் பயன் பெறலாம். தமிழ் நாட்டிலுள்ள மக்களும் நன்றாகக் கேட்டு ரசிக்கலாம். காலை 5. 30 மணி முதல் 9 மணி வரையிலும், மாலை 3.30 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகும்.

மத்திய அலை 284.9 மீட்டரில் இந்நிகழ்ச்சிகளைக் கேட்கலாம். பாரதத்தின் கலை, கலாசாரம், வளர்ச்சித் திட்டங்கள் போன்றவற்றை ஒலிபரப்பி இந்தியாவின் பெருமையை உயர்த்துவதே இந்த வெளிநாட்டு ஒலிபரப்பின் நோக்கமாகும்.

இந்த நிலையத்தின் , முதல் உதவி இயக்குநராகப் பொறுப்பேற்றுள்ளார் இளசை எஸ். சுந்தரம். இவர் இயக்குநர் (பொறுப்பு) ஆகவும் செயல்படுவார். ●





நாணயம்

நேர்மை, நாணயம், உழைப்பு செழிக்கவும்
உங்கள் பொருளாதாரம் கொழிக்கவும்
வழிகாட்டும் புதிய பகுதி.

வருமான–வரி அவசியம் செலுத்த வேண்டுமா?

எஸ். இராஜரத்தினம்

நம் நாட்டில் வரி செலுத்துவோர் நமது மக்கள் தொகையில் பத்தில் ஒருவர்கூட இல்லை. வறுமைக் கோட்டிற்குக் கீழே நூற்றுக்கு நாற்பது சதவிகிதம் மட்டும்தான் இருக்கிறோம் என்பது உண்மையானால் வரி ஏய்ப்பு கணிசமான அளவில் நம் நாட்டில் இருக்கிறது. வரி இல்லாவிடில் பதிவு செய்யப்பட்ட வரிதாரர்கள் செய்யும் வரி ஏய்ப்பு ஒரு பக்கம் இருக்க, வரிக்கு உட்பட்ட குறைந்தபட்ச வருமானம் உள்ளவர்கள் இதுவரை வரி இலாகாவின் கண்களுக்கு அகப்படாமல் இருப்போர் எண்ணிக்கை பல இலட்சங்கள். இவர்கள் அனைவரும் சிறு வியாபாரிகளாகவோ அல்லது வரி மட்டத்திற்கு ஒரு சிறிதளவே வருமானம் கூடுதலாக உள்ளவர்கள் என்றோ சொல்லிவிட முடியாது. நம் நாட்டில் விவசாய வருமானத்திறகு வரி இல்லை. அல்லது குறைந்த அளவிலேயே உண்டு. அத்துடன் வரிச் சலுகைகள் பல உள்ளன. இருப்பினும் தங்கள் வருமானத்தை வரி வரம்பிற்குக் கீழேயோ அல்லது மிகவும் குறைத்தோ கணக்கை எழுதி வரி ஏய்ப்பது கண்கூடு. இதற்குத் துணை செய்வதையே தங்கள் தொழிலாகக் கொண்டவர்களும் உண்டு. வரிப்பளு நமது நாட்டில் அதிகமாக இருக்கிறது என்பதையும், எந்த நாட்டில்தான் வரி ஏய்ப்பு இல்லை என்றும் கூறி, நமக்கு நாமே சமாதானம் செய்து கொள்வது ஒரு வாடிக்கை.

வரி கொடுப்பது ஒரு கடமை

ஓர் ஏழை நாட்டில் வரி ஏய்ப்பு செய்வதை ஒரு பணக்கார நாட்டில் வரி ஏய்ப்பு செய்வதைவிட பெரியதொரு குற்றமாகவே கொள்ளவேண்டும். ஏனெனில் வசதியுள்ள குடிமகன் மற்றவர்களுககு உதவி செய்வதற்கு வரி ஒரு சாதனம். நமது பொருளாதார மேம்பாட்டிற்குச் சரியான வரி வசூல் தேவை. மனிதவள மேம்பாட்டிற்காக இளைய தலைமுறையினருக்குச் சொல்லித் தரவேண்டிய முக்கிய கடமைகளுள், ஒரு குடிமகன் தனக்கு விதிக்கப்பட்ட வரியை ஒழுங்காகச் செலுத்த வேண்டும் என்பதை உணர்த்துவதுதான் என்று பன்னாட்டு நிறுவனம் (யுனெஸ்கோ) அறிவித்து இருக்கிறது. இதன் விளைவாக நம் நாட்டிலும்கூட ஆட்சியியல் (சிவிக்ஸ்) பாடத் திட்டத்தில் இது ஒரு பகுதியாக இருக்கிறது.

வருமான வரியைப் போலவே விற்பனை வரியைத் தவிர்ப்பதும் நடந்து வருகிறது. நாம் வாங்கும் பொருளுக்கு பில் கொடுத்தால் விற்பனை வரி செலுத்த வேண்டி வரும் என்று கடைக்காரர் சொன்னால் பில் தேவையில்லை என்று சொல்லுவோமே தவிர, நம்மில் எத்தனை பேர் பில்லை வாங்கி விற்பனை வரி சேர்த்து விலை கொடுப்போம்? வரி ஏய்ப்பதின் மூலம் பொதுநலம் பாதிக்கப்படுகிறது. ஏமாற்றுவது, ஏமாறுவது இரண்டும் நாமே.

வரி செலுத்துவது ஒரு பாதுகாப்பு

வரி செலுத்துவது என்பது ஒருவரின் தலையாய கடமை மட்டுமல்ல. அதுவே அவருக்கு ஒரு பாதுகாப்பு என்றால் நம்ப முடிகிறதா? ஆனால் அதுதான் உண்மை.

நம்மில் பலர் சொத்துகளைச் சேர்த்துக் கொண்டிருக்கும் போதும், பின்னரும் வருமான வரி அதிகாரிகளின் கண்களுக்குப் புலப்படாமல் மறைந்து வாழ்வதையே தங்களின் இலட்சியமாகக் கொண்டிருக்கின்றனர். வருமானம் உள்ளவர்கள் அனைவரும் கடைத் தெருவில் அடையாளம் காட்டுபவர்களாக இருப்பதில்லை. மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், ஆலோசகர்கள், காண்டராக்டர்கள் முதலானோர் தங்கள் தொழிலைச் செய்வதற்குத் தகுந்த இட வசதியைத் தேட அவசியமில்லை. கணக்குகளும் அவர்கள் தொழிலுக்குத் தேவையில்லை. ஆயினும் வருமான வரிச் சட்டத்தின் கீழ் கணக்கு வைத்திருக்க வேண்டும். கணக்கு வைத்திருக்காமல் இருப்பதோடு மட்டுமின்றி, இவர்கள், தங்களுக்கு மிகக் குறைந்த வருமானம் இருப்பதாகவே காட்டிக் கொள்கிறார்கள். ஆயினும் அவர்களுடைய சொத்துகள் வரி அதிகாரிகளின் கண்களில் படும் போது, வரி செலுத்துவதோடு மட்டுமல்லாமல் அத்துடன் வட்டி மற்றும் அபராதத் தொகையும் கட்டவேண்டி நேரலாம்.

வரி செலுத்த வேண்டியவர் 'முன்வரி' (அட்வான்ஸ் டாக்ஸ்) கட்டாமல் வரிப்படிவமும் தாக்கல் செய்யாமலிருந்தால் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு இரண்டு சதவிகிதமாக 4 சதவிகித வரியுடன் வட்டியும் செலுத்த வேண்டும். அத்துடன் அபராதத் தொகையாகக் குறைந்தபட்சம் வரி அளவிற்குக் கட்ட வேண்டும். 1989-90 வருடத்தில் ரூ. 1 இலட்சம் வருமானம் உள்ளவர் அந்த வருடத்தில் முன்வரி ஒழுங்காகக் கட்டியிருந்து வரிப்படிவமும் ஒழுங்காகத் தாக்கல் செய்திருந்தால் அன்றைய வரி

ரூ. 30,712/- ஆகும். அதை வருமான வரி அதிகாரிகள் இப்போது, அதாவது 1994 ஆகஸ்ட்டில், கண்டு பிடித்தால் வட்டி விகிதம் 4 சதவிகிதம் 65 மாதங் களுக்கும் முன் வரி வட்டியாகவும் 60 மாதங்களுக்கு வரிப்படிவம் தாக்கல் செய்யாததற்கு வட்டியாகவும் சேர்த்து இரண்டரை மடங்கு கணக்கில் வட்டி மட்டும் சுமார் 80,000/- ஆகும்.

பணத்தை வங்கியில் சேமிப்பவர் அல்லது நகை யாகவோ ரொக்கமாகவோ சேமித்து வைத்திருப்ப வர்கள் என்றாவது ஒரு நாள் அவர்களது வருமானம் வரி மட்டத்திற்கு மேல் வித்தியாசம் காணப் படத்தான் செய்யும். வருமான வரி அதிகாரிகளுக்கு வரி ஆய்வு சோதனை மற்றும் சர்வே முதலான அதிகாரங்கள் இருப்பதாலும் தரப்படும் தகவல் களுக்கு வரிக்கு உட்படாத சன்மானம் அவர்களுக்குக் கிடைப்பதாலும் வரியை ஏய்ப்பவர் ஒரு சமயம் இல்லாவிட்டால் மறு சமயம் பிடிபடலாம்.

வாழ்க்கையில் ஒருவர் வெற்றியடைந்தால் வருமான வரி அதிகாரிகளின் கவனம் தானாகவே அந்த வெற்றியாளர் பக்கம் திரும்பும். சரியான ஆலோசனை தரப்படாமல் தாங்கள் சேகரித்த சொத்துகளைப் பினாமியாக மற்றவர்கள் மேல் வைத்திருந்து பொருளை இழந்தோர் பலர் உண்டு. மேலும் வருமான வரி இலாகாவிலுள்ள சில ஊழல் பேர்வழிகள் வரி ஏய்ப்பவர்களிடம் வரிக்குப் பதிலாக இலஞ்சமாக பல மடங்கு பலகாலம் பெறுகின்றனர். இப்படிப் பெறுபவர்கள் எல்லா ருமே இவர்களுக்கு உதவக்கூடியவர்கள் அல்லர். இவர்களை பிளாக்மெயில் செய்து பிழைப்பதற் கென்றே பலர் நமது சமுதாயத்தில் இருக்கின்றனர். இத்தகைய இக்கட்டுகளிலிருந்து தப்பிப்பதற்கு நேர்மையான வழி, வருமான வரி செலுத்துவதுதான்.

நம்மில் பலரும் சிறிது சிறிதாக சேமித்து சில சொத்துகளில் முதலீடுகள் செய்கிறோம். நாம் சேமித்து வைத்த காலத்தில் நமது வருமானம் வரி வரம்புக்கு ஓரளவே அதிகமாக இருந்திருக்கக் கூடும். நாம் வரி செலுத்தாததால் நாம் சொத்து வாங்கும்போது, அந்தச் சொத்து வாங்குவதற்கு முதல் எப்படி வந்தது என்பதை விளக்குவது கடின மாக இருக்கும். வருமான வரிச் சட்டம், விளக்கப் படாத, சொத்து என்று கண்டுபிடிக்கப்பட்டதோ அன்றைய தின வருமானமாகக் கொள்கிறது. அத னாலேயே நகைகள் ரொக்கம் முதலியவற்றைப் பலரும் வரிச் சோதனையில் அகப்பட்டால் பறி கொடுக்க வேண்டியது இருக்கிறது. சிறிது சிறிதாகச் செலுத்தப்பட்டிருக்க வேண்டிய வரிக்குப் பதிலாக ஒரே ஆண்டில் மிக அதிகமாக பல மடங்கு செலுத்த வேண்டி வருகிறது. அது பழைய முதலீடாக இருந்தால் முன்கூறியது போல வட்டி யும், அபராதத் தொகையும் இன்னும் கூடுதலாக வரிப்பளுவை ஏற்றுகிறது. மேலும் வரி ஏய்ப்பிற்காக நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டு வரி ஏய்ப்பு நிரூ பிக்கப்பட்டால் குறைந்தபட்ச சிறைத்தண்டனை கூட உண்டு. குற்றச்சாட்டுக்கு நஷ்டஈடு செலுத்தி விடு தலை பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை (காம்பௌண்டிங் கட்டணம்) மிகக் கடுமையாக உள்ளது. இவற்றை எல்லாம் கவனத்தில் கொண் டால் வரி செலுத்துவது கடமை மட்டுமல்ல; வரி தவிர்க்க முடியாத ஒன்று என்றும், வரி செலுத்து வது வரியைத் தவிர்ப்பதைவிட சுலபமானது என்றும் அறிந்து கொள்ளலாம்.

வருமான வரியின் கரங்கள் மிக நீண்டவை. அதாவது, வரி இலாகாவினர் பத்து வருடங்கள்வரை முந்தைய கணக்குகளைக் கேட்கலாம். எனவே, வரிதாரர் இறந்தாலும்கூட வரிதாரரின் வாரிசுகள் வருமான வரித்துறையினர் கேட்கும் கணக்குகளைக் காட்டுவதற்கும் வரி, வட்டி செலுத்துவதற்கும் பொறுப்பாகிறார்கள்.

வரிப்படிவம் – பயனுள்ள ஓர் ஆவணம்

வரிப்படிவம் நிரப்புவது என்பது ஒரு வேலைதான். இருப்பினும் வருடத்திற்கு ஒருமுறை இது ஒவ்வொரு வரிதாரரின் கடமையாகும். வரிப் படிவத்தில் பல தகவல்கள் உள்ளன. வரிச் சலுகைகளுக்காக நாம் வாங்கும் தேசிய சேமிப்புப் பத்திரங்கள், ஆயுள் காப்புப் பத்திரங்கள், வங்கி முதலிய நிதி நிறுவனங்களில் சேமிக்கப்படும் வைப்புத்தொகை தவிர மற்றும் கம்பெனிப் பங்குகள் ஏனைய சொத்துகளின் விவரங்கள் எல் லாம் அவற்றில் அடங்கும். அவரது கடன் பற்றிய விவரங்களும் அதில் இடம்பெற ஏதுவுண்டு.

தங்களுடைய வருங்காலத்திற்குத் திட்டமிட இது ஓர் அடிப்படைத் தகவல் திரட்டாகப் பயன்படும். அது மட்டுமல்ல.

வரிதாரர் திடீரென்று இறக்க நேரிட்டால், அவரது குடும்பத்தாருக்கு அவருக்குள்ள சொத்து விவரங்கள் தெரிய வரும். இது வரிப்படிவத்திற் குள்ள முக்கியமான பயனாகும். ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தில் கோடிக்கணக்கான பணம் உரிமை கோருபவர் இல்லாமையால் இறந்தவர்கள் பல ருடைய பணம் - நிறுவனத்திற்கு இலாபமாகிறது. ஏனெனில், அது பற்றிய தகவல்கள் இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கே தெரியாமல் போகிறது. ஆனால் அவர் வரிதாரராக இருந்தால் அவரது வரிப்படிவத்தில் நகல் இல்லாவிட்டாலும்கூட வருமான வரி அலுவலகத்திலிருந்து அவருடைய சொத்து விவரங்களை அறிந்து, அவருடைய வாரிசுதாரர்கள் அவற்றைத் தங்களது உரிமைப் பொருள்களாக ஆக்கிக் கொள்ள முடியும். இது பலர் கண்டுகொண்ட அனுபவப்பூர்வமான உண்மை.

வளமுடன் வாழ வரி செலுத்துவோமாக. வரி செலுத்தவதால் நமது நாட்டிற்கு முறையாக நமது கடமையைச் செய்கிறோம். அது மட்டுமல்ல; கடமை தவறினால் வரும் கடும் விளைவுகளிலிருந்து நம்மை நாம் காப்பாற்றிக் கொள்கிறோம். நாம் வாழ, வளர, நமது வரிக் கணக்குகள் . உதவுவதுடன்கூட நமக்குப் பின்னர் நமது சந்ததியினர் எவ்விதச் சிக்கலுமின்றி நாம் விட்டுச்சென்ற சொத்துகளை அனுபவிக்க அது வழி செய்கிறது. நாம் அரசுக்கு வரி செலுத்துவதன் மூலம் நாம் வாழ்கிறோம்; வளர்கிறோம் என்று சொன்னால் நம்புவது கடின மாக இருக்கலாம்; ஆனால் அதுதான் உண்மை.

டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியம்

நிறையப் பேர் இன்று
டிந்து போயிருக்கிறார்கள்.
தாழில் அதிபர்கள், நிறுவ
ங்கள் பலரும் திடீர் திகிலுக்கு
ளாகிறார்கள். நான் இருபது
ண்டுகளாக கெமிக்கல் தொழிற்
ாலை நடத்திவரும் ஒரு நண்பரை
ன்கு அறிவேன். சில காலமாக
வர் மிகவும் சோர்ந்து காணப்
ட்டார். காரணம், நிறையப் புதுப
து கெமிக்கல் நிறுவனங்கள்
தான்றுவதே இவர் மனக்
லக்கத்துக்கு அடிப்படை.

ஒரு காலத்தில் சென்னை
ாநகரில் குறிப்பிடும்படி நாலே
ாலு உயர்நிலைப்பள்ளிகள்தான்
இருந்தன. 1911ஆம் ஆண்டு
ஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை முதன்
தல் ஆரம்பமாகியது. அப்
போது தமிழகம் முழுவதும் 50க்கும்
குறைந்த பரீட்சை சென்டர்கள்
இருந்தன. இன்றோ 3500க்கு
மேற்பட்ட உயர்நிலை, மேநிலைப்
பள்ளிகள். 36000 ஆரம்பப்
பள்ளிகள். சென்னை நகரிலேயே
ாற்றுக்கு மேற்பட்ட மேநிலைப்
பள்ளிகள்.

இங்கிலாந்து நாட்டில் ஒவ்
வொர் ஆரம்பப் பள்ளிக்குழந்தை
யும் முதலில் படிப்பது ராபர்ட்
ருஸின் கதை. பலமுறை தோற்
றும் விடாது வலை பின்னிய
சிலந்தியின் விடாமுயற்சியின்
தாக்கம்தான் இழந்த அரசைத்
திரும்பப் பெற்ற மன்னன்
ருஸின் வெற்றி இரகசியம்.

அதே போல் இங்கிலாந்துக்
குழந்தைகள் படிக்கும் மற்றோர்
ஒப்பற்ற நூல் ராபின்சன் குருசோ
வின் கதை. இது சாகாத இலக்
கியம். என்றென்றும் படித்தவர்
மனதில் அசைக்க முடியாத நம்
பிக்கை விதையை ஊன்றுகிறவன்
ராபின்சன் குருசோ.

கப்பல் உடைந்து தனி மனித
னாக, ஒற்றையனாக பயங்கரக்
காட்டில் ஒதுக்கப்பட்ட ராபின்சன்
குருசோவுக்குக் கட்டிய ஒரு துணி
தவிர வேறு உடையில்லை.
பேச்சுத் துணைக்கு ஆளில்லை,
உற்றார் உறவினர் இல்லை.
மேலே வானம், கீழே சதுப்பு
நிலம். சுற்றிலும் மாபெரும் கடல்.
காட்டினுள்ளே பயங்கர மிரு
கங்கள். இந்தச் சூழ்நிலையில்
எவனும் கலங்கி ஒடுங்கி பயந்து
செத்திருப்பான். ஆனால் ராபின்
சன் குருசோவோ, மயங்கினா
னில்லை; கலங்கினானில்லை –
"நம் எதிர்காலம், நம் கையில்
மட்டுமே" என்று வீறு கொண்
டெழுந்து தனது தனி வாழ்க்கையை
ஓர் ஒப்பற்ற தனி நாயகனாகச்
சமைத்தான்.

அவனுடைய நெஞ்சுரம்,
தோல்வி கண்டு துவளாத
பாங்கு, துன்பத்தைச் சிரிப்பால்
தோற்கடிக்கும் பான்மை,
ஊக்கமே ஆக்கம் தரும் என்ற
நெஞ்சுறுதி ஆகியன இன்று உலக
வரலாற்றில் ராபின்சன் குருசோ
வின் கதைக்கு ஓர் அழியாத
அழிக்க முடியாத இடத்தைப்
பெற்றுத் தந்துள்ளது.

பாரதியார் நம்மவர் பற்றிப்
பாடினார் "அஞ்சி அஞ்சிச்
சாவார்" என்று. காக்கி உடை
போட்ட தந்திச்சேவகன் வந்தால்
கூட" ஐயோ போலீசோ" என்று
கலங்கிக் கண்ணீர் வடிக்கும் பலர்
இங்குண்டு. சாதாரணமாக ஒரு
தந்தி வந்தாலே ஒப்பாரி
வைக்கும் பெண்டிர் பலர்.

நம் தொழில்துறையில் பலர்
எந்த இறக்கத்தையும் தாங்க
மாட்டார்கள். ஏற்றமாகவே இருந்
தால் மலருவர். இறக்கம் ஏற்
பட்டாலோ "மனைவி 'நட்சத்திரம்'
தான் காரணம்" என்று சோதிட
னிடம் போய் தாம்பத்ய உறவைத்
துண்டிக்கும் தைரியசாலிகளும்
இங்குண்டு.

பரீட்சையில் தேற தாயத்து
களை நம்புபவர் ஏராளம், ஏராளம்
இங்கு. இன்று நம் நாட்டில்
முதலே இல்லாமல் மிகவும்
சிறப்பாக நடைபெறும் தொழில்
"ஜோசியம், ஆருடம், நாடி, தெய்வ
அருள் பெற்ற சாமியார் தொழில்"
ஆகியவைதான்.

உன்னால் ஒன்றுமே சம்பா
திக்க முடியவில்லையா? காவி
உடை, தாடி வைத்து சாமியாராக
ஆகிப் பார். ஒரு வருடத்துக்குள்
மாட மாளிகை கூட கோபுரங்
களுடன் 'ஏ.சி.' காண்டசா காரில்
'ஓசியாக' பவனிவரும் பேறு
கிடைக்கும். உனக்குப் பியூன்
வேலைகூடக் கொடுக்க மறுத்த
தொழில் மன்னர்கள் தங்கள்
தங்கள் மனைவிமார்களுடனும்,
'சின்ன வீடு'களுடனும் உன் காலில்
விழுவார்கள்.

என்ன காரணம்? அவர்கட்குச்
சொந்தக் காலில் நிற்கப் பயம்.
சாமியாரின் கைத்தடி தேவைப்
படுகிறது. தன்னம்பிக்கை
சிறிதுகூட இல்லாதவர் இவர்.

ஒருமுறை தமிழ்க் குரிசில்
உலகப் பொருளாதார மேதை
இந்திய நிதியமைச்சர் சர்.ஆர்.கே.
சன்முகம் செட்டியாரைக் காரில்
ஏற்றி ஓரிடம் செல்லும் வாய்ப்புக்
கிட்டியது. என் தந்தையாரின்
நெருங்கிய நண்பர் செட்டியார்
அவர்கள். மணி பகல் 3. வழியில்
காப்பி கிடைக்குமா என்று கேள்வி.
ஒரு பேரூரைக் கடக்கும்போது ஓர்
உணவகம் முன் காரை நிறுத்தி
"ஐயா! காப்பி வாங்கி வருகிறேன்"
என்று போனேன். உணவகம்
முழுவதும் சாக்கடை நாற்றம்.
முழு அழுக்கேறிய உடையுடன்
நமக்கு உணவளிக்கக் காத்தி
ருக்கும் அன்பர்கள். உடனே நான்
காப்பி வாங்காது திரும்பி
விட்டேன் "ஐயா! உள்ளே மிக
மோசமாக இருக்கிறது. காப்பி
வாங்கவில்லை" என்றேன்.

பொருளாதார மேதை
சிரித்தார், "தம்பி! ஹோட்டல்

"ஆக்கமிழந்தேமென்றல்லவா?"

சுமங்கல் ஜுவல்லர்ஸ்

சென்னையில் தி.நகர்., உஸ்மான் சாலையை 'ஆபரணங்களின் தலைநகரம்' என்றே அழைக்கலாம். நூற்றுக்கும் மேற்பட்ட நகைக் கடைகளைக் கொண்டுள்ள இந்த வீதியிலே தனக்கென்று நிரந்தரமான வாடிக்கையாளர்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது 'சுமங்கல் ஜுவல்லர்ஸ்'. திரு.எம். ரவீந்திரன் தலைமையில் பத்தாண்டுகளுக்கு மேல் வெற்றிநடை போட்டு வரும் இந்த நகைக்கடை வாடிக்கையாளர்களின் சௌகரியத்திற்காக குளுகுளு வசதியுடன் மும்மடங்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழாவை ஒட்டி, தங்கம், வெள்ளிப் பொருள்கள் சுலபமான முறையில் பலரும் வாங்கிப் பயனடைய, பல திட்டங்களை வகுத்துள்ளார்கள். இத்திட்டத்தில் சேருபவர்கள் கால், அரை, முக்கால் கிராம் என்று எந்தத் திட்டத்தில் சேரமுடியுமோ அதில் சேர்ந்து மாதா மாதம் அதற்கான தொகையைச் செலுத்தி வரவேண்டும். 15 மாதங்கள் தொடர்ந்து செலுத்தி வநதவுடன் 16 ஆவது மாதம் சுமங்கல் ஜுவல்லர்ஸின் அன்பளிப்பாக ஒரு மாதத் தொகை சேர்த்து, அத்தொகைக்கான பொருளை, கூலி, சேதாரம் இன்றிப் பெறலாம்.

லீசிங் ஃபைனான்ஸ் இந்தியா லிட்

கல்கத்தாவில் ஒன்பது ஆண்டுகளாகச் சிறப்புறச் செயல்பட்டு வந்த லீசிங் ஃபைனான்ஸ் இந்தியா லிட் என்ற நிறுவனம் சென்னையில் தனது நிர்வாக அலுவலகத்தைத் தொடங்கியுள்ளது. திரு மகேஷ் ஷாவின் நிர்வாகத் திறமையால் தற்போது ரூ. 9 கோடி முதலீட்டு நிறுவனமாக வளர்ந்துள்ளது. சிறு தொழில் நிறுவனங்களுக்கும், மற்ற நிறுவனங்களுக்கும் இயந்திர லீசிங், கன்ஸ்யூமர் பாங்கிங், பங்கு முதலீடு அறிவுரை மற்றும் வைப்பு நிதி ஆகிய துறைகளில் சேவை செய்து வருகிறது.

தமிழ்நாட்டில் வைப்பு நிதிப் பழக்கம் அதிக அளவில் செயல்படுவதால், மக்களின் பணத்திற்கு உத்தரவாதத்துடன் கூடிய சிறந்த சேவை செய்ய திரு சிற்சபேசனை துணைப் பிரெசிடெண்டாகவும், திரு சங்கரை டைரக்டராகவும், திரு ஏ.வி. இராமனை ஆலோசகராகவும் கொண்டு சென்னையில் செயல்படத் தொடங்கியுள்ளது வரவேற்கத்தக்கது.

ஆழ்வார்பெட் பெனி:ஃபிட் ஃபண்ட் லிட்

1990 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்நிறுவனம் குறைந்த காலத்திற்குள்ளாகவே இந்திய அரசின் அங்கீகாரம் பெற்ற நிதி நிறுவனமாக வளர்ந்துள்ளது.

இந்நிறுவனத்தைத் தொடங்கியவர்களின் நாணயத்தினாலும், நன்மதிப்பினாலும் நான்கு ஆண்டுகளில் முதலீட்டு வைப்பு (Capital reserve) 280% உயர்ந்துள்ளது. 10,000க்கு மேற்பட்ட பங்குதாரர்கள் பயனடையும் இந்நிறுவனத்தில் வைப்புநிதித் தொகை ரூ. 18 கோடியை எட்டியுள்ளது. நகை, வீட்டு அடமானம், சொந்த வீடு வாங்க என்று பல வகையான கடன்கள் அளிப்பதன் மூலம் பலரும் பயனடைந்துள்ளார்கள்.

இந்நிறுவனத்தின் கோயமுத்தூர் கிளை ஆர்.எஸ்.புரத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இதனால் கோயமுத்தூர் வாசிகள் பெரிதும் பயன்பெறுவார்கள்.

– டிஆர்ஜி.

❄

முதலாளி தன் உணவகம் பற்றித் தெளிவாகக் கூறியிருந்தும் நீ போனதுதான் தவறு" என்றார். "எனக்கு விளங்கவில்லை, ஐயா!" என்றேன். "உணவக வாசலில் தொங்கும் பெயர்ப் பலகையைக் கவனி. "முருகன் உணவகம். வேலும் மயிலும் துணை" என்று தெளிவாக எழுதியுள்ளாரே. அதாவது வேலும் மயிலும் துணையில்லையெனில் உள்ளே வராதே என்ற சிவப்புக் கொடியை அவர் ஏற்றி விட்டார். அதையும் மீறி நீ சென்றால் எப்படி?" என எள்ளி நகையாடினார், நேரு பெருமானால் நிதியமைச்சராக்கப்பட்ட மேதை.

ஆம்! நாம் எதிலும் நம்மை நம்புவதில்லை. இதனால்தான் நம் தொழிலில் சிறிது சரிவு ஏற்பட்டாலும் நாம் உடனே சரிகிறோம். வாழ்வில் தொய்வு ஏற்படுகிறது. இருதய டாக்டரிடம் போகிறோம். அவர் நம்மை அரசு மரியாதையுடன் மேல் அனுப்பி வைக்கிறார்.

இது தேவையா? எந்தச் சரிவு கண்டாலும் தளராத மனம் இருந்துவிட்டால் – காலனையும் காலால் மோதி மிதிக்கும் தைரியம் இருந்துவிட்டால், – வாழ்வே மலர்ப் பூங்கா ஆகிவிடாதா?

நிர்வாக இயலில் ஒருவர் பெற வேண்டியது தைரியம்தான். போஜராஜன் முன் அஷ்டலக்ஷ்மியரும் தோன்றி 'எங்களில் ஒருவரை அழைத்துக்கொள்' என்று கூற அந்த மாவீரன் 'தைரியலட்சுமி என்னுடன் இருக்கட்டும், இது போதும், மற்றவை தானே வரும்' என்றானாம்.

வள்ளுவர் இது பற்றி அன்றே சொன்னார்:

"ஆக்கமிழந்தேமென் றல்லவா, ரூக்க
மொருவந்தங் கைத் துடையார்" (593/60)

(ஊக்கத்தை உறுதியாகக் கொண்டவர் செல்வம் முழுதும் இழந்த காலத்திலும் சிறிதும் கலங்கமாட்டார்கள்)

ஆம். ஊக்கம் தைரியத்தின் பால் பிறக்கும். இவ்வூக்கமே ஆக்கம் தரும். இது நிர்வாகத்தின் முதுகெலும்பு.

சங்கப் பலகை

உலகின் தலைசிறந்த நூலகங்கள்

(ஆக்கியோர் - மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு. வெளியீடு - மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் தெரு, தி. நகர், சென்னை - 17. விலை ரூ. 28.00).

பல நூலகங்களைப் பற்றிச் சின்னச் சின்னக் குறிப்புகள். நாடு வாரியாகப் பிரித்திருப்பது வசதியான முறை. ஒவ்வொரு நூலகத்தையும் பற்றிய முக்கியமான குறிப்புகள் அங்கே இருக்கும் புத்தகங்களின் எண்ணிக்கை, அங்கிருக்கும் சிறப்பான நூல்கள் என்று பட்டியலிட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

—பரணிபாலன்

சங்க நூல்களில் மரங்கள்

(ஆசிரியர் - பி.எல். சாமி. பதிப்பகம் - திருக்குறள் பதிப்பகம், 66/1, பெரியார் தெரு, எம்ஜிஆர் நகர், சென்னை - 600 078. விலை - ரூ. 30.00).

பழந்தமிழர்களின் வாழ்வியல் அறிவையும் அறிவியல் தெளிவையும் அவற்றின் தொடர்ச்சியாக வந்த சரித்திரச் செய்திகளையும், முடிவாக இன்றையத் தமிழர் நிலையையும் நுட்பமான விஞ்ஞானக் கண்ணோடு ஆராய்ந்து தருபவர் இந்நூல் ஆசிரியர். மேற்கண்ட ஆய்வுகளை அந்த சங்க காலப் புலவர்களின் பாடற் கூற்றுகள் மூலம் நமக்குப் புலப்பட வைத்து அந்த ஆய்வுகள் எப்படி இன்றைய விஞ்ஞான முடிவுகளுடன் அதிசயமாய் ஒத்துப் போகின்றன என்று தானும் வியந்து நம்மையும் வியக்க வைக்கிறார்.

நூலில் மொத்தம் நாற்பத்தி ஒன்று மரங்கள். இவற்றில் அன்றையப் புலவர்கள் குறிப்பிட்ட 'மருதம்' என்ற மரம் சென்னைப் பல்கலைக்கழக அகராதியால்கூடச் சரியாக இனங்காண முடியாமல் இருந்தது. அதனை அறிவியல் செய்தி ஆதாரத்தோடு இன்றைய 'மணி மருது' மரம்தான் அன்றைய மருதம் என நன்றாக இனங்கண்டு சொல்கிறார் ஆசிரியர். அதுபோல அன்றைய 'ஞாழல்' என்பது இன்றைய கடற்கரைச் சதுப்பு நிலத்தில் வளரும் காட்டுமரம்தான் என்பதையும் ருசிகரமாக விவரிக்கின்றார். 'அதவம்' என்பதுதான் இன்றைய அத்தி மரம் என்றும், 'ஆசினி முதுசுளை கலாவ மீமிசை' - என்ற திருமுருகாற்றுப் படையில் வரும் 'ஆசினி'தான் இன்றைய 'ஈரப்பலா' மரம் என்றும் நம்மை வியக்க வைக்கிற இந்த நூல் அனைவரும் படிக்க வேண்டிய தொன்று.

—கவிஞர் வேதம்

குருபரம்பரை வைபவம்

(ஆசிரியர் - எதிராஜராமாநுஜ தாஸர். வெளியீடு - ஆழ்வார்கள் அமுத நிலையம், 37, சௌத் கூவம் ரோடு, கோமளேசுவரன் பேட்டை, சென்னை - 600 020. பக்கங்கள் - 308. விலை - ரூ. 23.00)

ஆழ்வார்கள் அமுதநிலையம் வைணவ பக்தி இலக்கியங்களை வெளியிடுவதையே குறிக்கோளாகக் கொண்டு, ஆழ்வார்களது பாசுரங்களான நாலாயிர திவ்ய பிரபந்த பாசுரங்கள் அனைத்துக்கும் தக்க பெரியோர்களைக் கொண்டு எளிய உரைகளைப் புரியும் நடையில் சுருக்கத்தோடும், தெளிவோடும் வெளியிட்டுப் பெரும் தொண்டாற்றி வரும் அமைப்பாகும். ஸ்ரீலட்சுமி நாராயணதாசர் என்ற அதன் பொறுப்பாளர் இதற்கே தம்மை அர்ப்பணித்துள்ளார்.

அந்த வரிசையில் ஆழ்வார்கள் தொடங்கி ஆசாரியர்களில் மணவாள மாமுனிகள் வரை பூர்வாசார்ய குருபரம்பரை என்னும் வரலாற்றை வைணவ வாழ்வு வாழ்ந்து வரும் ஸ்ரீ எதிராஜ ராமாநுஜ தாஸர் பக்தி பூர்வமான, எளிய நடையில் இந்நூலை உருவாக்கித் தந்துள்ளார். மூன்றாம் பதிப்பு வெளிவருகிறதென்பதே இந்நூலின் சிறப்பை உணர்த்துவதாகும். ஆசாரியர்கள், வைணவத்தை நிலைநிறுத்தப் பட்டபாடு, வடமொழி வேதத்துக்கு நிகராக தமிழ்ப் பாசுரங்களை அவர்கள் மதித்துப் பரப்பிய பாங்கு ஆகியவற்றை இந்நூல் மூலம் உணரலாம்.

'தூதுவளை' என்ற கீரை கொடுத்து அரசர் போல வாழ்ந்த ஆளவந்தாரைச் சந்திக்க வாய்ப்பு பெற்று மணக்கால் நம்பிகள் அவரை வைணவ சமயத் தலைமை ஏற்கச் செய்தது போன்ற வரலாறுகள் படித்து மகிழத்தக்கவை. இன்னும் நல்லதாளில், இடம்விட்டு, ஒவ்வோர் ஆசாரியர் வைபவத்தையும் தனித்தனி அதிகாரங்களில் தந்து, இன்னும் சம்பிரதாய மணிப்ரவாளச் சொற்களைத் தமிழ்ப் படுத்தி நான்காம் பதிப்பு வெளிவருவது பொருத்தமாகும். 308 பக்கங்களுள்ள இந்நூலுக்கு விலை மிகவும் குறைவே.

பாரதியின் வாழ்க்கைச் சித்திரம்

(ஆசிரியர் - வ. உமா. வெளியீடு - சரயு பதிப்பகம், 17, பாரதிதாசன் முதல் தெரு, இராஜ கீழ்ப்பாக்கம், சென்னை - 600 073. பக். 120. விலை - ரூ. 16/-)

சிறுவர்களும் மாணவர்களும் எளிதில் எடுத்துக் கையாளும் விதமாக தனித்தனித் தலைப்புகளில் மகாகவி பாரதியின் வரலாற்றை ஆசிரியர் கூறியுள்ளார். தெளிவான எளிய நடை.

பாரதியார் மதுரை சேதுபதி உயர்பள்ளியில் தமிழாசிரியர் பணியிலிருந்து விலகக் காரணங்களில் ஒன்றாக 'பள்ளியில் (தமிழ்ப்) பாடம் நடத்தத் தக்கபடி இலக்கண அறிவும் (அவருக்கு) அவ்வளவாக இல்லை' என்ற செய்தி ஓர் இடத்தில் கூறப்பட்டுள்ளது.

நூலாசிரியையின் இந்தக் கருத்துக்கு ஆதாரம் என்னவென்று தெரியவில்லை. திட்டமிட்டுப் பாரதியை இழிவு செய்யும் யாருடைய நூலையோ படித்து, அல்லது பேச்சையோ கேட்டு ஆசிரியர் இதை எழுதி இருக்கிறார் போலும். இச் செய்தி இந்நூலுக்கு உற்சாகத்துடன் முன்னுரை எழுதி நூலைச் சிபாரிசு செய்திருக்கும் பாரதி அறிஞர் திரு. ரா.அ. பத்மநாபனின் கவனத்துக்கு வராமற் போனது வியப்பே.

—பாரதி சுராஜ்

சங்க இலக்கியத்தில் அறிவியற்கலை

(ஆசிரியர் - பி.எல். சாமி, ஐ.ஏ.எஸ். (ஓய்வு) பதிப்பகம் - சேகர் பதிப்பகம், 66/1, பெரியார் தெரு, எம்ஜிஆர். நகர், சென்னை - 78. விலை - ரூ. 25.00).

மற்ற எந்த மொழியின் இலக்கியத்திலும் காணமுடியாத விஞ்ஞானப் (அறிவியல்) புதுமைகளையும், புதிய செய்திகளையும் நம் பழந்தமிழ் இலக்கியத்தில்தான் கண்டு இன்புற முடிகிறது என்று சொல்லி இந்நூல் ஆசிரியர் தொல்காப்பியத்திலும், குறிஞ்சிப் பாட்டிலும் பயன்படுத்தப்பட்டச் செடி கொடிகளின் விஞ்ஞானச் செய்திகள் நுணுக்கமானச் சொற்களை, எடுத்தாய்ந்து ருசிகரமாகச் சொல்கின்றார் இந்த நூலில்.

"மூங்கிலின் உள்ளே உரிக்கப்படும் தோலை மெல்லிதாகப் பிசைந்து வைத்திருப்பது போன்ற மெல்லிய தூவியை (இறகு) உடைய நாரை' என்று சங்கப்புலவர் சொல்லியிருப்பதிலிருந்து மூங்கிலின் உள் உள்ள 'உரி' மிக மெல்லியது என்ற விஞ்ஞானச் செய்தி வெளிப்படுகிறது. 'மயிலின் போழ்கண்' (போழ் கண் மஞ்ஞை) என்று கூறினார். ஒரு புலவர். புலி முதலிய விலங்குகளை முட்டாள்தனமாக மயில் முறைத்துப் பார்க்கிறது - என்ற புதிய அறிவியற் கருத்தை அழகுற எடுத்துக் காட்டுகிறார் ஆசிரியர். எனவே கவிஞர்களும், புலவர்களும் இதனைப் படித்துத் தமது இலக்கிய - விஞ்ஞான அறிவை மேலும் விருத்தி செய்து கொள்ள வேண்டுகிறோம்.

—கவிஞர் வேதம்

சங்கப் பலகை

சிருங்கேரி நாயகருக்கு சிந்தூர ஆரத்தி

(ஆசிரியர் - பாரதி காவலர் கே.ராமமூர்த்தி. வெளியீடு - சங்கர பாரதி, 3,கிருஷ்ணசாமி தெரு, அபிராமபுரம், சென்னை - 600 018. பக்கங்கள் - 96. விலை ரூ. 6/-).

ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீடாதிபதி ஸ்ரீ பாரதி தீர்த்த சுவாமிகள் மீது பக்தி பூர்வமாக எழுதப்பெற்ற சிறு காவியம் இது. ஸ்ரீ சாரதா பீடத்தின் சிறப்புகளை வருணித்து வசன கவிதையாக நீண்டு செல்கிறது குறுங்காவியம். பொருள் விளக்கமும் குறிப்புகளும் தனியே தரப்பெற்றுள்ளன. அச்சும் அமைப்பும் பாராட்டும்படி உள்ளன.

சான்றோர் சிந்தனைகள்

(தொகுப்பு - வானதி திருநாவுக்கரசு. வெளியீடு - கங்கை புத்தக நிலையம், 13. தீனதயாளு தெரு. தி. நகர், சென்னை - 600 017. பக். 126. விலை - ரூ. 20/-)

எமர்ஸன் , கதே, கன்பூசியஸ், சாக்ரடீஸ், நெப்போலியன் மற்றும் பெயர் குறிப்பிடாத சான்றோர்களின் சிந்தனைகளைத் தொகுத்து வானதி திருநாவுக்கரசு வழங்கி உள்ள நூல் இது. சிந்தனைகளுக்குத் தக்க தலைப்புகள் தரப் பெற்றுள்ளன.

—பாரதி சுராஜ்

காலம் கனிகிறது

(ஆசிரியர் - கவிஞர் வேம்பார். பாண்டியன். வெளியீடு - பொன் மணி பதிப்பகம், 7/11, டாங்க் பேரலல் ரோடு, சென்னை - 34. பக்கங்கள் - 168. விலை ரூ. 25/.).

ஒரு பானை சோற்றுக்கு ஒன்று பதம் என்பார்கள். கவிஞர் வேம்பார் பாண்டியனின் கவித் திறனுக்கு ஒரு பாடல்.

ஆற்றங்கரையோரம்
ஆடிவரும் தென்காற்று
வேற்றுப் புலங்கண்டேன்
விண்ணவர் வான்கண்டேன்
ஏற்றமிலை வேறுமொழி
எங்ஙணும் எம்மொழிக்கே
என்றங்கே கதைபாடி
இனிமையோ டிசைபாடும்.

வளமார்ந்த தமிழ்க்கவிஞர். மேலும் வளர்வார்; ஐயமில்லை.

—பின்னலூர் மு. விவேகானந்தன்

உலகம் உய்யவந்த மணவாள மாமுனிகள்

(ஆசிரியர் - டி.எஸ். ராஜகோபாலன். பதிப்பகம் - ஆழ்வார்கள் அமுதநிலையம், 37, சௌத் கூவம் ரோடு, கோமளீசுவரன் பேட்டை, சென்னை - 2. பக்கங்கள் - 94. விலை - ரூ. 10.)

வைணவ சமய பக்தி இலக்கியங்களைத் தொடர்ந்து வெளியிட்டு வரும் ஆழ்வார்கள் அமுத நிலையத்தினரின் 20ஆவது வெளியீடு இந்நூல்.

வைணவ பூர்வ ஆசாரிய பரம்பரை மணவாள மாமுனிகளுடன் முற்றுப் பெறுகிறது. வைணவ வடகலைப்பிரிவுக்குத் தேசிகர் போல, தென்கலைப்பிரிவினருக்கு மணவாள மாமுனிகள். இவரது வரலாற்றைச் சிறுசிறு தலைப்புகளில், எளிய நடையில் புரியும் வகையில் கூறியுள்ளார் ஆசிரியர்.

ஆசாரியரின் வாழ்வு மட்டுமின்றி அவரது வாக்குகளையும், அவர் அருளியுள்ள உபதேச ரத்தின மாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்தி பிரபந்தம் போன்றவற்றின் சிறப்பையும் சில பாடல் உதாரணங்களுடன் நூல் தருகிறது.

இரா.சுராஜ்

வழிபடுவோம் வாரீர்

(ஆசிரியர் - நீலவன். வெளியீடு - நீலமணி பதிப்பகம், 11, கிருஷ்ண பிள்ளைத் தெரு, சாயிநாதபுரம், வேலூர் - 632 001. விலை - ரூ. 15/-)

பல்சமய ஆலயங்களின் வரலாறுகளையும் சிறப்புகளையும் எடுத்துக் கூறும் இந்நூல், அருளில்லார் அருளாசி பெற்றிடவும், ஆன்மநேய ஒருமைப்பாட்டினைக் கண்டிடவும் ஒருசிறந்த கையேடு எனலாம்.

எழுத்தாற்றலும் கருத்துச் செறிவும் எடுத்தியம்பும் எளிய நடையும் நெஞ்சை அள்ளுகின்றன. எல்லாரும் படித்து இன்புறத் தக்கது மட்டுமல்ல, போற்றிப் பின்பற்றத் தக்கதுமாகும்.

—பாஞ். இராமலிங்கம்

நல்வழி காட்டும் பகவத் கீதை

(ஆசிரியர் - அம்மன் சத்திய நாதன், வெளியீடு - அருள்மிகு அம்மன் பதிப்பகம், 8. கங்கையம்மன் கோயில் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014. விலை - ரூ. 17.00)

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவால் அர்ஜுனன் வாயிலாக உலக மக்களுக்கு உபதேசிக்கப்பட்ட நூல் பகவத் கீதை. இந்நூலுக்குப் பலர் உரைகள் எழுதியுள்ளனர். தற்கால நடைமுறைக்கேற்ப எளிமையான முறையில், அனைவர்க்கும் புரியும் வகையில் தெளிவான உரை விளக்கம் கூறி, பகவத் கீதையின் பெருமை, படிப்பதால் உண்டாகும் நன்மை, நூலின் சிறப்பு முதலியவற்றையும் கூறியுள்ளார் இந் நூலாசிரியர். பதினெட்டுக்கு, 'ஜய' (வெற்றி) என்ற பொருள் உண்டு. இந் நூலாசிரியரும் இந்த நூலைப் பதினெட்டு அத்தியாயங்களாகப் படைத்துள்ளது சிறப்பு. பகவத் கீதையைத் தெளிவாக அறிந்து கொள்ள இந் நூல் உதவும்.

—தாமரைக் கண்ணன்

விவேகாநந்தர் - வாழ்வும் வாக்கும்

(ஆசிரியர் - வானதி திருநாவுக்கரசு. வெளியீடு - கங்கை புத்தக நிலையம், 13 தீனதயாளு தெரு. சென்னை - 17. பக். 68. விலை - ரூ. 10.00)

நமது பாரத நாட்டின் தொன்மைக் கலாச்சாரத்தையும், ஆன்மிக வெள்ளத்தையும் பெருமையுடன் அமெரிக்காவில் எடுத்துரைத்து நம்மைத் தலை நிமிர நடக்க வைத்தவர் சுவாமி விவேகாநந்தர்.

இந்த மகானின் உன்னத வரலாற்றை வானதி திருநாவுக்கரசு அழகிய, இனிய தமிழ் நடையில் எடுத்தெழுதியுள்ளார் இந்த நூலில்.

இவர் மூடநம்பிக்கையை உடைத்தெறிந்த ஒரு சம்பவமும், தன் குருநியான ராமகிருஷ்ண பரமஹம்ஸரை நேரில் சந்தித்த போது அவருக்கு நேர்ந்த இனம் புரியாத பரவச 'ஆன்ம நிலையை விவரிக்கும் சொற்களும் ஆசிரியரது எழுத்துச்சிறப்பை விளக்குகின்றன. சிறுவர்க்கு மிகவும் அற்புதமாகப் பயன்படக்கூடிய புத்தகம்.

—கவிஞர் வேதம்

புதிய வேள்வி

(ஆசிரியர் - டாக்டர் நா. மகாலிங்கம், வெளியீடு - அன்னம் புத்தக மையம், 9. சௌராஷ்டிரா சந்து, மேலமாசி வீதி, மதுரை - 625 001. விலை - ரூ. 37.00)

சமயம், அரசியல், இலக்கியம், அறிவியல், தொழில் போன்ற பல துறைகளைப் பற்றிய சிந்தனைக் கருத்துகளின் பெட்டகம், இந்நூல் ஆசிரியர் எழுதிய கட்டுரைகள், பேசிய பேச்சுகள் முதலியவற்றின் தொகுப்பே 'புதிய வேள்வி!'.

பல கட்சி ஆட்சியின் தேவை, மகாநதி - காவேரி இணைப்பின் அவசியம், ஆகியவற்றை ஆதாரப் படுத்துகிறார். நம்மை நல்வழியில் சிந்திக்கத்தக்க கேள்விகளைக் கேட்பதுடன், அவற்றிற்கு அவரே பதிலளித்திருப்பதும் சிறப்பு. மதச் சார்பின்மை குறித்த ஆசிரியரின் கருத்து வரவேற்கத்தக்கதாக உள்ளது.

தமிழ்ச் சமுதாயத்திற்கு ஆசிரியரின் கருத்துகள் நல்வழிகாட்டியாக அமையும் என்பது உண்மையே.

யானைகள்

(ஆசிரியர் - வாண்டு மாமா. வெளியீடு - கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 17. விலை - ரூ. 25/-)

அட்டைப்படமே அசத்தல். ஆதி யானையின் தோற்றம். அதன் பரிணாம வளர்ச்சி, புராண காலத்தில், அதற்குப்பிறகு வெவ்வேறு கால கட்டத்தில் யானை எவ்வாறு நம் வாழ்வில் இடம் பெற்றது என்பதை மிகவும் சுவாரஸ்யமான நடையில் சற்றும் தொய்வின்றிச் சொல்கிறார் ஆசிரியர். அப்பாடி, இத்தனை செய்திகளா! இதே நூலில் அங்கங்கே கட்டம் கட்டிச் சின்னஞ்சிறு செய்தித் துணுக்குகளாக (யானையைப் பற்றி) வழங்கியிருப்பது நல்ல யுக்தி.

—எஸ். ஜி.

அப்பா

(ஆசிரியர் - சிவசங்கரி. வெளியீடு - திருமகள் நிலையம், 55, வெங்கடநாராயணா ரோடு, தி. நகர், சென்னை - 600 017. பக். 184. விலை - ரூ. 24.00)

'அதிசய மனிதர்', 'படிக்காத விஞ்ஞானி' என்றெல்லாம் நாடறிந்த திரு ஜி.டி. நாயுடு அவர்களின் வரலாற்றை அவரது மகன் திரு. கோபால் கூறுவது போல திருமதி. சிவசங்கரி இந்நூலை அமைத்துள்ளார். சுவையான ஒரு நாவலைப் படிப்பது போன்ற சுவாரஸ்யத்துடன் இந் நூலை அவர் ஆக்கி இருக்கிறார்.

தனது பேருந்து நிர்வாகத்தில் ஒழுங்கைக் கண்காணிக்க நாயுடு அவர்கள் மாறு வேடத்தில் செல்வது. இரவில் தாமே சென்று, அலுவலகப் பணியாளர்களின் கோப்புகளை அடுக்கி வைத்து குறிப்பும் வைத்து வருவது. பம்பாய்க்குச் சென்று, சாமர்த்தியமாகக் குறைந்த விலைக்குப் பொருள்களை வாங்கி லாபத்துக்கு விற்று மலிவான பொருள்களைக் கொண்டுவந்த மகனைப் பாராட்டாமல் குருட்டாம்போக்கில் கிட்டிய லாபம் சூதாட்டத்துக்குச் சமமானது என்று கூறி மகன் கொண்டு வந்த பொருள்களை நண்பர்களுக்கு அன்பளிப்பாக வழங்கியது.

வருமான வரித்துறையினரிடம் ஏற்பட்ட கருத்து மோதலினால், விலை உயர்ந்த பொருள்களை திரு. நாயுடு, பிளிட்ஸ் ஆசிரியர் கரஞ்சியா போன்றோர் முன்னிலையில் உடைத்துப் போட்டது.

வீட்டுக்குப் பகல் நேரங்களில் வருபவர்கள் விருந்துண்ணாமல் செல்லக்கூடாது என்பதற்காக வாசற்கதவைப் பூட்டச் செய்யும் நாயுடுவின் பண்பு,

'நான் செய்த தவறுகள்' என்று தனியாக ஒரு பைலையே நாயுடு வைத்திருந்தது,

இப்படி எண்ணற்ற தகவல்கள் இந்நூலில் சுவைபடக் கூறப்பட்டுள்ளன.

—பாரதி சுராஜ்

84, டி.டி.கே. சாலை, சென்னை-600018-இல் உள்ள 'தமிழ் அரசி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு, ஸ்ரீராம் டிரஸ்ட்- 600001-சார்பில் வெளியிட்டவர் ஏ.வி.எஸ். ராஜா. ஆசிரியர்: 'கலைமாமணி' விக்கிரமன். நிர்வாக அலுவலகம்: 145 லிங்கிச் செட்டித் தெரு, த.பெ. எண். 5043, சென்னை - 600 001. தொலைபேசி : 5228545, 510535.